70

# The Life of Buddha.

(Tamil Verse.)

170
2.20
9 - APR 1920

By

*R. Harihara Aiyar,*

TAMIL PANDIT,

**AMBASAMUDRAM.**

1920.

Sri Ramanujam Press,

TENKASI.

O4:31
N20
78430

உ

# புத்தபுராணம்.

## செய்யுள் நூல்.

மேற்படி புராணவசனச்சுருக்கமும்,
அரும்பதவுரையும் சேர்ந்தது.

---

அம்பாசமுத்திரம், தீர்த்தபதிஹைஸ்கூல் தலைமைத்
தமிழ்ப்பண்டிதர்,
ஆர். அரிகரமையர் அவர்களால்.
இயற்றப்பெற்று,

---

கல்லிடைக்குறிச்சி, ஏகாம்பரபுரங்கிராமம்
மகா-ா-ா-ஸ்ரீ எஸ். எஸ். சங்கர அய்யரவர்கள்
பொருளுதவியால்,

---

தென்காசி,
ஸ்ரீராமாநுஜம் அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

---

முதற் பதிப்பு காப்பி 1000.
Price As 8.] 1920. [விலை அண் 8.
All Rights Reserved.

உ

# மதிப்புரை.

நமது நாட்டில்சிறந்த மதங்கள் பல நிலைபெற்றிருக்கின்றன. ...வைகளில் ஒரு மதத்தை அனுசரிப்போர், அன்னிய மதத்து ...வஷமற்றுச்சமரசபாய் வாழ்வதே, தேசநன்மைக்கு ஏற்றதாகும். ...க்கருத்துக்கிணங்க, நமது ஹைஸ்கூல்களில் வாசிக்கும் மாணாக் ...களுக்கு, நம் தேசத்தில் பரவியிருக்கும் பெரும் சமயங்களின் ...காள்கைகளையும், அம்மதஸ்தாபகர்களின் சரித்திரங்களையும், ...மற்போக்காகவேனும் அறிவிக்கவேண்டியது அவசியமாயிருக்கி ...து. இதனை உத்தேசித்தே புத்தர், கிறிஸ்து, மகம்மது, சங்கரர், ...ராமாநுஜர், ஆகிய இவர்களின் சரித்திரத்தோடு, அவர்களால் ...டப்பட்ட மதக் கொள்கைகளையும், இலகுவும், தெளிவுமான ...யில் எழுதவேண்டுமென்ற எனது கோரிக்கையின் பேரில், ...சமுத்திரம் ஹைஸ்கூல் பிரதமதமிழ்ப்பண்டிதர் மகா-ா-ஸ்ரீ ...ன், ஆர். அரிகரமையரவர்கள், முதலில் கிறிஸ்து சரித்தி ...த் தெள்ளிய தமிழ் நடையில் எழுதி வெளியிட்டனர். அது ...ாமெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டுப் பலஇடங்களிலும்பரவி ...க்கிறது. இப்பொழுது புத்தர் சரித்திரத்தையும், அவர் மதத் ... முக்கிய கொள்கைகளையும், வசன நடையின் தரத்ததான ...சய்யுள் நடையில், "புத்தபுராணம்" என்னும் பெயருடன் அச் ...டுவித்திருக்கின்றனர். மற்றைய சமயாசாரியர் வரலாறுகளையும் ...ந்நூலாசிரியர் காலக்கிரமத்தில் வெளியிடுவார்.

தீர்த்தபதிஹைஸ்கூல்
அம்பாசமுத்திரம்.
(18—3—20)

T. S. Sadasiva Ayyar,

# முகவுரை.

புத்தரைப்பற்றியவரலாறு சாமானியமானதல்ல. எண்ணுக் கடங்கிய காலத்திலேற்பட்டது மன்று. காந்தம் பிரமாண்டம் பாகவதம் முதலான புராணப்பிரசித்தமானதே. இப்புராணங்கள், ஆதிபௌத்தாவதாரத்தை, உலக ஸம்ரக்ஷணத்தின் பொருட்டுத் திருமால் செய்தருளிய அவதாரங்களில் ஒன்றென நன்குவிளக்கு கின்றன.

"இற்றைக்கு இரண்டாயிரத்தைந்நூறு வருடங்கட்கு முன், கபிலவாஸ்து நகரத்தில் சுத்தோதன மஹா ராஜனுக்குத்திருக் குமரராய் உதித்தருளிய கௌதம பௌத்தரும் ஆதி புத்தரின் பரம்பரையையே யாவர்" என்பதைப் பலவகைப்பட்ட பாஷை நூல்களிலும் பாக்கக்காணலாகும்.

இப்படி யெல்லா மிருந்தும் அப்புத்தரால் நிலை நாட்டப் பட்டுள்ள, புத்தமதம் நமது முன்னோராகிய சிலஆசாரியர்களால் புறச்சமயங்களிலொன்றாகப் புறக்கணிக்கப்பட்டது, ஆச்சரியமே. அங்ஙனம் புறக்கணித்தற்குக்காரணமும் அவர் பலவாறு கூறா நிற்பர்; ஆயினும் அவைகட்குரிய மறுப்புக்களும் எண்ணிலடங்கா தனவாயிருக்கின்றன. நிற்க,

எது எப்படியானாலும் தற்கால உலகத்துக்கு வேற்ற பற்பல நீதிகளைப்போதிப்பதில், இச்சரித்திரம்போலுஞ்சிறந்த ஓர் நூல் வேறிருப்பதாக எனக்குத்தோன்ற வில்லை. அங்ஙனந் தோன்றா மைக்குக்காரணம் பலவாயினும் அவைகளுள் ஒன்றான "அஹிம் சாப்ரதமோதர்மக" என்றபடி, ஜீவகாருண்யமென்னும் இரக்த ஓட்டம் இச்சரிதத்துள் எல்லாப் பாகங்களிலும் ஒழிவற ஓடி- வியாபித்துக் கொண்டிருத்தலேயாம். இக்கருத்தையே, இப்பு ராண ஆசிரியராகிய அம்பாசமுத்திரம் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஆர். அரிகரமய்யரவர்கள் பாயிரத்தில்

"புத்தரின் மதமாம் இஃது புறத்ததா சமய மாக
வைத்தன ரெனினும் பூத தயையினை வளர்த்த லாலே
உத்தம மதத்தி னென்று யுவந்துள மென்னைத் தூண்டு
வித்ததாற் செய்யு ளாலே விளம்பினன் தமிழின் மன்னே."

என, நன்கு விளக்கியதுமன்றி, அந்தப்பூததயையே தம் மைத்தூண்டத்தாம் இந்நூலை எழுதினதாகவும் கூறி யிருக்கின்

றனர். ஆகவே "இக்காவியம் காலதேசங்களுக் குத்தகுதியான நீதி மார்க்கங்களையேயன்றி, கேவலம் மதக்கோட் பாட்டினை விளக்க எழுந்ததில்லை" என்பது வெளிப்படையாகின்றது.

மேலும் இப்புராணத்துள், காருண்யம், ஸமத்துவம், சகோதரத்துவம், அன்பு, அருள், பொறுமை, தன்னயம் வேண்டாமை, பிறரின்பம் தன்னின்பமாகப்பாவித்தல், உலகம், உடல், உயிர், செல்வம், வாழ்வு முதலியன நிலையாமையின் தன்மை, நன்னிலையும், நல்லொழுக்கம், கல்வி, கேள்வி, நாவன்மை, நாவடக்கம், சுகதுக்கங்களின் சமபாவனை முதலியவைகளையெல்லாம் கொத்துக்கொத்தாக ஆங்காங்குக்கண்டு களித்தலாகும். அன்றியும் இந்நூல் வெகுலளிதமும் இனிமையும் வாய்ந்த செந்தமிழ்வாசகமே என்று சொல்லும்படியான, "அறுசீர்" "கொச்சகம்" என்னும் சுலபமான விருத்தங்களால் அமுதபாகத்தோடு ஆற்றொழுக்கும் வாய்ந்ததாய்க், கற்றார்க்கும் கற்பார்க்கும் பலவிதத்திலும் நன்மைகளைத்தரத்தக்கதாய்ப்பூர்ணம் பெற்றிருக்குமோர் செவ்வியானது, மிகவும் பாராட்டத்தக்கதே யாகும். "இத்தகைய புத்தகங்களே இக்காலத்துக்கு அவசியமாகும்" என்பதை "இந்நூல் முழுவதும் கற்றுணர்ந்த அறிவாளிகள் ஒருதலையாய்க் கூறுநிற்பர்" என்பது எனது கருத்து.

வித்தியாலாகாத்தலைவர்கள், இப்புத்தகத்தை ஸ்கூல்களுக்குப் பாடமாக ஏற்படுத்துவார்களாயின் "எத்துணையோ நன்மைகள் இத்தமிழ் உலகத்துக்கேற்படும்" என்பதற்கு ஐயமே இல்லை.

கலையுலாம் அம்பை மூதூர் ஆங்கில கலாசாலைக்கண்
தலைமைசேர் தமிழ்நாடாத்தும் தகமையோன் அரிகரப்பேர்
நிலையுளோன் புத்தர் ஞார்தம் நீடிய புராணந் தன்னை
அலைகட லுக மெச்ச ஆக்கினன் பாக்க ளாலே.

**S. S. Sankaraiyer**

Ekambarapuram Street, *Kallidaikurichi*.

---

இந்நூல் அச்சிடுதற்குவேண்டும் பொருளுதவினோர்.

நிதிவளருங் கல்லிடைமா நகர்தனிலே காம்பரமா நிகழ்த்தும்வீதி
யதில்வளருஞ் சங்கரசுப் பய்யரருள் சங்கரனு மபிதானத்தோன்
மதிவளரும் அருட்புத்தர் புராணமச்சி லியற்றநிதி வழங்கியோங்குந்
துதிவளா நிதிவளர்த்த பயன்வளர வரைவிளக்காய்த்துளங்கினனே.

---

நூலாசிரியர்.

# புத்தபுராணம் படல அட்டவணை.


| எண் | பக்கம் | விபரம் | | பாடற் றொகை |
|---|---|---|---|---|
| 1 | 19 | திரு அவதாரப் படலம். | ... | 32 |
| 2 | 23 | நாட்டுத் துன்பறிபடலம். | ... | 17 |
| 3 | 26 | திருமணப்படலம். | ... | 32 |
| 4 | 31 | சித்தார்த்தர் கனவுகாண் படலம். | ... | 13 |
| 5 | 33 | நகரத்துன்பறி படலம். | .... | 37 |
| 6 | 38 | யசோதரை கனவுகாண் படலம். | ... | 10 |
| 7 | 40 | பிரிவுறு படலம். | ... | 16 |
| 8 | 42 | உண்மையுசாவிய படலம். | ... | 25 |
| 9 | 46 | பூததயை விரித்த படலம். | ... | 32 |
| 10 | 51 | புத்தரான படலம். | ... | 19 |
| 11 | 53 | கபிலைமீண்ட படலம். | ... | 39 |
| 12 | 59 | மகோபந்நியாசப் படலம். | ... | 13 |
| 13 | 61 | கடமைகள் வகுத்தபடலம். | .... | 13 |
| | | பாயிரம். | ... | 5 |
| | | ஆக பாடல் | | 303 |

# புத்தபுராண வசனச்சுருக்கம்.

## 1-வது திரு அவதாரப் படலம்.

உலகமெல்லாம் புகழ்ந்து போற்றும் கங்கையின் கிளைநதிகளில் ஒன்றாகிய ரோகிணி நதி தீரத்திலுள்ள "கபிலவாஸ்து" என்னும் பட்டணத்தில் சுத்தோதனன், என்னும் அரசன் செங்கோல்செலுத்திவந்தான். இவன் மனைவி பெயர் மாயை, இவர்க்குப் புத்திர சம்பத்து, ஒன்று தவிர மற்றையச் செல்வங்களெல்லாம் பூர்ணம் பெற்றிருந்தன. பிள்ளை இல்லாதவர்க்கு வேறு செல்வங்களிருந்து என்ன பிரயோசனம். ஒருநாள் சுத்தோதனன், தனக்கு மகப்பேறில்லாத வருத்தத்தைப் பற்றிப் பலவாறு மனைவியுடன் சொல்லித் துக்கிக்க, அதற்கவள் அழுத கண்ணீராக அளவு கடந்த சோகத்தில் மூழ்கினவளாய், "எல்லாம்பழவினையின் வழி வருகின்றனவே" எனச்சொல்லி அவனைத்தேற்றினாள்.

இப்படி யிருக்கையில் ஒரு நாள் மாயை, நித்திரை செய்கையில், அறுகோணவடிவத்துடன் கூடிய பிரகாசமான ஒரு நக்ஷத்திரம், தனது வயிற்றில் வந்து புகுந்ததாகச்சொப்பனமொன்று கண்டு, அதனைத் தனது கணவனுக்குச் சொன்னாள். அரசனும் "அக்கனவின் பயனைக் கூறுக" என ஓர் ஜோசியனை அழைத்து வினவினான். அதற்கவன் "கனவின் பயன் நன்மை தீமைகள் கலந்ததாயிருக்கிறது. மாயை, என்னும் அரசியார் இனி கருப்பங்கொண்டு, அருளே உருவமான ஓர் ஆண்குழந்தையைப் பெறுவர். பிறந்தபிள்ளையோ, தக்க பருவத்தில் உலகத்துக்கோர் சக்ரவர்த்தியாய் இராஜரீகம் செலுத்துவான். தவறினால், மன்னுயிர்கட்கெல்லாம் நன்னெறிகாட்டுமோர்துறவியாய் உலகப்பற்றை ஒழிப்பன். இவ்விரண்டிலொன்று நிச்சயமாய் நிகழும்" என்றான்.

மாதங்கள் சில செல்லக், கணிதநூல்வல்லவன் சொன்னபடி, மாயை, என்னும் மாது ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தைக்குச் சித்தார்த்தன்–சர்வார்த்தசித்தி, முதலான பெயர்

கள் அரசனுலிடப்பட்டன. பிறந்த இளவரசை அந்நாடு நகரங்களி லுள்ள பலரும் வந்து கண்டு களிப்பென்னுங்கடலில் மூழ்குவாரா யினர். அவருள் அசிதர் என்னும் ஓர் முனிவர், அரச குமாரரின் வதனத்தை யுற்று நோக்கி ஞான திருஷ்டியால் எல்லாமறிந்து, சுத்தோதன, வேந்தனைப் பார்த்து, அரசே! "இதோ கிடக்கின்ற உனது சிறுவரால் இப்பூவுலகம், புதுப்பிக்கப்படப்போகின்றது. இவர் செய்யும் பிரசங்கமாரியால் மானிடப்பயிர்கள் மேன்மேலுந் தழைக்கப்போகின்றன. இவரால் உன்னுடைய குலமும் பெயரும் உலகமெல்லாம் பரவவிருக்கின்றன, என்றாலும் இவரைப்பெற்ற வள் இன்னும் ஏழு தினத்துள் இறந்துவிடுவள்" என்று சொல் லிப் போய்விட்டனர்.

மாமுனி சொன்ன வண்ணம் மாயை, என்னும் மாதரசி பிரசவித்த ஏழாநாள் இவ்வுலக வாழ்வை நீத்தனள். அப்பால் அரசன் புத்திரரைச்செவிலியரால் வளர்ப்பித்தான். கல்விகற்பிக்க "விசுவாமித்திரர்" என்பவரை ஆசிரியராக்கினன். வித்தியார்த்தி யான சித்தார்த்தரும், சிலகாலத்துள் பலகலைகளையும் நன்றாய்க் கற்றுக்கொண்டனர். கல்விப்பெருக்கம்போல் கருணைப்பெருக்க மும், அவரது கருத்தோடொன்றி வளர்ந்து கொண்டிருந்தது. ஒருநாள் இவர் தனது, அத்தானால் அம்பெய்து வீழ்த்தப்பட்ட அன்னபக்ஷியை எடுத்து நோவு நீக்கிப் பாலன்ன மூட்டிக்களைப் பாற்றி அதனை இனத்தோடு செல்லவிடுத்தார்.

---

## 2-வது நாட்டுத்துன்பறி படலம்.

ஒரு நாள் காவலன், தனது காதலராகிய சித்தார்த்தர் "உலகத்தின் அறிவை அறிந்து கொள்ளுதல் அவசியமாகும்" எனத்துணிந்து, அவரை அழைத்துக்கொண்டு, பயிரிடுவோர் முத லான பற்பல தொழிலாளிகள் வேலை செய்து கொண்டிருக்கும் இடங்களிற்சென்றான்.

---

புத்தருடைய நாமங்கள் கௌதமசாக்கியமுனி. கோதமர். ததாகதர். சித்தார்த் தர். சர்வக்ஞர். சுகதர். ஏகதேவர். மாரஜித். லோகஜித். அத்வயவாதி. பகவான். விநாயகர். முதலியன.

அங்ஙனஞ்சென்ற சித்தார்த்தர், வயல்களில் உழுகிறவரடையும் கஷ்டத்தையும், சேற்றிற் புகுந்த கால்களைப் பிடுங்க மாட்டாமல் தள்ளாடிக்கொண்டிருக்கும் கடாக்களின் வருத்தத்தையும், வரம்பு வாய்க்கால்களை வெட்டிச்செப்பஞ்செய்பவர் துன்பத்தையும், நாற்றுக்களைப்பறித்துநட்டுக் களைகடிந்து கொண்டிருந்த கடைசியர்க்குற்ற சோர்வையும், அடிமைப்பட்டவர் அனுபவிக்கும், அளவிலடங்காத பாட்டினையும் தமது கண்ணாரக்கண்டார். அன்றியும் பிராணிகள் ஒன்றையொன்று தின்று ஜீவிப்பதையும் அவர் நேரிற்பார்த்தார். இன்னும் பலவிதமான துன்பங்களை ஜீவவர்க்கங்கள் அடைந்து வருந்துதலையும் அவர் தெரிந்தார். கருணையினால் உள்ளமிளகினார். அந்தோ! "இந்த ஜீவவர்க்கங்கள், ஏன் இவ்வாறுவருத்தப்படல் வேண்டும். இவைகளெல்லாம் துக்கமின்றிச் சுகமாய்க்காலந்தள்ளிவர, ஏதேனுமொருமார்க்கமில்லையா? இருக்கவே செய்யும். அதனை நாமே கண்டுபிடித்தல் வேண்டும்" எனத்துணிந்து, தமது சித்தவிர்த்தியை அவ்வழியாகவே செலுத்தி, நிஷ்டையிலிருப்பவர்போல் ஓரிடத்தில் அசைவற இருந்துவிட்டார். பிறகு அரசனுடைய ஏவலாளர் அழைத்துச் செல்ல, அரண்மனைவந்து சேர்ந்தார்.

---

## 3–வது திருமணப் படலம்

---

இவ்வண்ணம் சித்தார்த்தர், ஜீவகாருண்யத்திலீடுபட்டு, அதனிடமாகவே மனதைச் செலுத்திக் கொண்டிருத்தலைச் சுத்தோதனன் தெரிந்தான். முன் அசிதமுனி கூறினதும் அவன் ஞாபகத்தில் வந்தது. உடனே அரசன தனது அருமைக்காதலரை இல்லறவாழ்க்கையிலிருத்திவிடக்கருதி, மந்திரிகளுடன் ஆலோசித்து அவர் கூறியபடி பருவந்தோறும் உல்லாசமாய்க்காலந்தள்ளிவர, அதிவிசித்ரகரமான பலமாளிகைகளைப் பணி செய்வித்து, அதில் குமாரரை அழைத்துப்போய் "மனமொத்த சிநேகிதருடன் களித்து விளையாடி இங்கிருந்தே பொழுதுபோக்கி வருவாயாக. இதிலிருந்து அப்பாலிப்பாற் செல்லக்கூடாது" எனக்கட்டளையிட்

டான். அவரும் தந்தைசொல் தலைமேற்கொண்டு அப்படியே வதிவதானார். அதனால் ஜீவராசிகள் அனுபவிக்கும் மற்றுமுள்ள கஷ்டங்கள் பலவும் அவர்க்குத்தென்படாமலிருந்தன.

சிலகாலஞ்செல்ல, அரசன் அவருக்கு, நற்குணமும் நல்லழகும் வாய்ந்த, "யசோதரை" என்னும் பெண்ணை விவாகஞ் செய்வித்தான். சித்தார்த்தரும் அவள்மேல் மோகங்கொண்டு, அவளுடன் கலந்து களித்துக் காலந்தள்ளலானார். என்றாலும் முன் நேரிற்கண்ட தொழிலாளிகளின்பாடு, அவர் நெஞ்சத்தைவிட்டுக் கொஞ்சமும் அசையவில்லை. அந்த ஞாபகம் வரும்போதெல்லாம் அவர், தம்பம்போல் நின்றுவிடுவார். சிறிது பொழுதில் தெளிவார். இப்படியிவரிருக்க, சுத்தோதனன் சோகக்குறிகளெதுவும், அவ்விடங்களில் தோன்றாவண்ணம் கண்டிப்பான பல ஏற்பாடுகளைச்செய்தான்.

## 4-வது சித்தார்த்தர் கனவுகாண் படலம்.

மன்மதனும் ரதியும் போல சித்தார்த்தரும் யசோதரையும் இல்லறவாழ்க்கையைச் செவ்வனே நடத்திவரும் நாளில், யசோதரை கர்ப்பமாகி ஆண்மகவொன்றை யீன்றாள். ஒருநாள் அரசகுமாரர், நித்திரை செய்கையில் சொப்பனத்தில், "நான் உலகத்திலுள்ள ஜீவர்களின் துக்கங்களை நீக்கவந்தும், இப்படியிருக்கிறேனே." என்றுவெளிப்படச்சொல்லி, சோர்வுற்ற முகத்தவராக, அடுத்திருந்த அவர் மனைவி, அவரை எழுப்பி "யாது கூறினீர் நீங்கெதுவு முளதோ?" என்றாள். என்னவே அவர் சட்டென எழுந்து, சோர்வைப்போக்கிப் புன்னகைகொண்டு, பக்கத்திருந்த தோழியை "வீணைவாசிக்கக்கடவை" என்றார். உடனே அவளும் அப்படியே செய்யலானாள். அந்த வீணாகானங்களைக் கேட்கவே, சித்தார்த்தருக்கு முன் ஓர் நாள், சொப்பனத்தில் சிலதேவர்கள் தம்முன்வந்து, வீணாகானஞ்செய்தது, ஞாபகத்தில் வந்தது. அக்கனவின் பொருளாவது,

"காற்றானது விரைந்து, வீசிச்சுற்றிச்சுழன்று, அமர்ந்து விடுவதை ஒத்தது ஜீவர்களின் வாழ்வு. நீர் எங்கிருந்து என்ன செய்ய இங்கு வந்தீர்? உலக இன்பமென்ன சாசுவதமா? பிராணிகள் படும் பாட்டைப்பார்க்க வில்லையா? இப்பொழுதே நல்லநெறியொன்று கண்டுபிடிக்க வெளிப்படுக. யாங்கள் எல்லாவிடங்களிலுஞ்சஞ்சரிக்கும் வாயுவின்வார்த்தைகள். இப்பொழுதே வெளிப்படுக." என்பதாம்.

பிறகு ஒருநாள் பெண்ணொருத்தி, அவருக்குக் குதிரையைப்பற்றிய ஒரு சிறு கதை கூறினள்.

---

## 5-வது நகரத்துன்பறி படலம்.

இப்படி, குதிரையைப்பற்றிய கதையை, வரிசைமுறையாகக் கேட்ட சித்தார்த்தர், ஒருதினம்தமது பிதாவைப்பார்த்து, "இந்தப் பட்டணத்தைச் சுற்றிப்பார்த்து வர நினைக்கிறேன்." என்றார், அதற்கவனும் "அப்படியே நாளையத்தினம் சென்று மீள்வாயாக" என்றுரைத்து, பக்கத்திலிருந்த சில வேலைக்காரர்களை நோக்கி, "நமது இளவரசர் நாளையததினம் இந்நகரத்தைக்காண வரப்போகின்றார். ஆனதால், அந்தக்காலத்தில், ஏழைகள் நோயாளர் குருடு செவிடு நொண்டி முதலாயினோர் பிரேதம் ஆகிய இவர்களை அவருடைய கண்களுக்குத்தென்படாவண்ணம் மறைத்திடுதல் வேண்டும். துக்கதுக்கிடமான எவைகளையும் அவர்பார்க்கக் கூடாது. மேலும் நகரத்தை நல்லவண்ணம் அலங்கரித்தல் வேண்டும். எவரும் இனியமுகத்துடன், அவரை உபசரித்தல் வேண்டும். இவ்வேற்பாடுகளை இது முதற்செய்யத்தொடங்குங்கள்" என்றாஞ்ஞைபிட்டனன். அவர்களுமப்படியே செய்தார்கள்.

மறுநாள் காலையில் ரதாரூடராய் சித்தார்த்தர் நகர் வலம் வந்தார். அவர்பார்த்த இடமெல்லாம் சுபகரமாகவே இருந்தன. அதனால் அவர் "இவ்வுலகத்தில் ஜீவர்கள் சுகமாகவே தானிருக்

கிறார்கள்." என்று நினைத்தார். இப்படி நினைத்த அடுத்தநிமிஷத்தில், பரிதபிக்கத்தக்க மற்றொன்றையும் அவர் காணலானார்.

முற்ற மூத்த கிழவனொருவன் காச நோயால் ஓயாதிருமிக்கொண்டு, பிச்சைவாங்கப்புறப்படுதலை அவர் பார்த்தார். திடுக்கிட்டார். சாரதியாகிய சன்னனை நோக்கி, "இவன் என்ன மானிடன் தானே? இவனுக்கு இங்கு உற்றதென்ன?" என, அவனும் அவரைநோக்கி, வள்ளலே! "இவனும் ஒரு மனுஷன் தான். வயது அதிக மானதால், இவ்வாறாகி விட்டான். இவன் யௌவனத்தில், மன்மதன் போன்ற அழகும், இடபம்போன்ற நடையுமுடையவனாகவே யிருந்தான். முதுமைப்பருவம் வந்துவிட்டால் மனிதர் படும்பாட்டைக் கண்ணுற் பார்க்கக்கூடுமா!" என்றான் என்னலே சித்தார்த்தர், "இந்த நோய் எமக்கும் எமது அருமைக்காதலியாகிய யசோதரைக்கும் வருமோ?" என, சாரதி, ஆம் ஐயா! "எண்பதாண்டளவு இருப்பீராயின் உங்களுக்கும் இந்த விருத்த நோய் வந்தேதீரும்" என்றான். இது கேட்டதும் மன்னவன் மைந்தனார், வாகுவனை நோக்கி, அன்பனே! "எல்லாம் பார்த்தது போதும், தேரை நம்மிடத்துக்குத் திருப்பு" என்றார். அவனும் அவ்வாறே செய்தான். இதுவரை காணாத வொன்றைக் கண்டதினால், அதனிடமாகவே ஞாபகஞ் செல்ல, சித்தார்த்தர் அன்றிரவு தூங்கவே இல்லை.

பொழுது விடிந்ததும் சித்தார்த்தர் சாரதியுடன் வணிகர் வேடம் பூண்டு, கடைவீதியிற் சென்றனர். அங்கே கைப்பொருள் கொண்டும் கடன் பொருள் கொண்டும் வியாபாரஞ் செய்பவரையும், நிறைகூறிக் குறையளப்பவரையும், குறைந்தவிலையில் நிரம்ப அளப்பவரையும், சிறிது லாபம்வர விற்றுப் பெரும்பொருள் தேடுபவரையும், பெருவிலை கூறிச் சிறிது லாபம் பெறுபவரையும், வஞ்சகங் கூறிப் பொருள் இழந்தவரையும், கணக்கெழுதிப் பிழைப்பாரையும், வட்டிவாசியினால் கணக்கில் பிணக்குக்கண்டு மனம் வெறுப்பாரையும், அவரைச் சமாதானம் செய்வாரையும், இரப்பாரையும், இல்லை யென்று மறுப்பாரையும், சுமை எடுப்பாரையும், நடப்பாரையும், விலை கூறிதொண்டை புண்ணுவாரையும், நொண்டி மாட்டை வண்டியிற் பூட்டி அடிப்பாரையும், அங்

காடி வேடிக்கை பார்ப்பாரையும், பல்லக்கில் தெருக்கோலம் போவாரையும், கணவனை இழந்து அலங்கோல மாவாரையும், பேய் பிடித்தரற்றுவாரையும், அவர் கண்டார். அப்பால் அவர், அந்நகரின் வெளிப்புறத்திலுள்ள ஓர் நதிக்கரையில் வருகையில், ஒரு பிரேதத்தைச் சிலர் தூக்கிச்செல்லுதலைச் சித்தார்த்தர் கண்டு, "இது என்ன?" எனச், சாரதியைக்கேட்க, அவன் சுவாமி! "இறந்துபோன ஒருவனை இவர் தூக்கிச் செல்கின்றனர். இது தான் பாடை. அதன் மேலிருப்பது பிரேதம். இது மயானம். இதோ அடுக்கி இருக்கிற விறகின்மேல், அதனை வைத்தெரிக்கின்றனர். சிறிது பொழுதில் அக்களேபரம் சாம்பராய்ப் பிறகு மண்ணாய் மாறிவிடும். எல்லாருக்கும் இக்கதிதான். பொதுவாய் ஜீவர்கள் படும்பாடுகளுக்கு அளவேது சங்கையேது?" என்றான். இவையெல்லாங் கண்ட மன்னவர் குமாரர், சுகமென்பது இவ்வுலகத்தில் எள்ளளவுமில்லை யென்றும், எல்லாம் துக்கத்திலே முடிவனவாயிருக்கின்றன; எனவும், ஜீவராசிகளைப் படைத்து, அவைகளைக் காவாதொழிந்த கடவுளை, எனது வாயால் ஒரு தெய்வமெனச் சொல்லவே மாட்டேன் எனவும், இன்னும் பலவிதமாகவுஞ் சொல்லித் துக்கித்து. பார்த்ததெல்லாம் போதும்! போவோம் வா? என்று பாகனுடனிருப்பிடஞ் சென்றார்.

---

## 6-வது யசோதரை கனவுகாண் படலம்.

அடுத்துவந்த வசந்த காலத்தில் பால்போல் நில வெறித்துக் கொண்டிருக்கும் இரவில், நான்காஞ் சாமத்தில், அங்குள்ள பணிமக்கள் யாவரும் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருக்கும் பொழுது, அரசியாகிய யசோதரை ஓர் சொப்பனங்கண்டு "கூ" எனக்குழறினள், அடுத்திருந்த சித்தார்த்தர் அவளை யெழுப்பி "என்ன" என, அவள் அவரை நோக்கித் தான் கண்ட மூன்று சொப்பனத்தையுஞ் சொல்லி, நாதனே! "இக்கனவுகளின் பயனைப் பார்க்கும்பொழுது, எனது நெஞ்சம் அஞ்சுகின்றது. நீர் என்னைத் துறந்து விடுவீரோ? அல்லது நான்தான் இறந்து விடுவேனோ?

ஒன்று மறியேனே" என்று வருந்தினாள். அதற்கு சித்தார்த்தர் "நங்காய்! "வினைவழி வருவது வந்தேதீரும் அதனைத்தடுக்க எவராலும் ஆகாது. ஆதலால் நீ யொன்றுக்குமஞ்ச வேண்டாம். நான் உன்னைவிட்டுப் பிரிந்துதரியேன்" என, பல கூறி அவளைத் தேற்றி மீண்டும் நித்திரை போமாறுசொல்ல, அவளும் அப்படியே அயர்ந்து துயில்வாளாயினள்.

---

## 7–வது பிரிவுறு படலம்.

---

அப்பால் சித்தார்த்தர், தூங்கிக்கொண்டிருக்கும் யசோதரையின் வதனத்தைப்பார்த்து, அன்புக்குரியாளே! "இந்த இல்லறத்தை நீத்துத் துறவறத்தைக் கைக்கொள்ளத் துணிந்திருந்த எனக்கு, உன்னுடைய விடையும் உனது வாக்கினாலேயே இன்று கிடைத்துவிட்டது. இனி யான் இதோ இந்த அரசவாழ்க்கையைக் கை நழுவவிடுகின்றேன். மானபிமானத்தையுமறநீத்து விட்டேன். ஏழைக்கும் ஏழையாய்ப்பிச்சை யேற்றுண்டு, காலந் தள்ளத் தீர்மானித்தேன். உலகத்திலுள்ள எமது சகோதர சகோதரிகள் கையெடுத்துக் கும்பிடுந் தெய்வங்களால், யாதொரு துன்பத்தினின்றும் நீங்கிச்சிறிதுஞ் சுகமடையவில்லையென்பது திண்ணமே. அவர்கள் யாவரும் ஸதா இன்புற்றிருக்குமோர் நெறியைக்கண்டுபிடிக்க முயலப்போகின்றேன். "வருந்தினால் வாராததொன்றில்லை" என்றபடி எப்பாடுபட்டாவது சுகமார்க்கமொன்றைக் கண்டுபிடிக்கவே செய்வேன் அப்பொழுதுதான் ஒரு பால் அமர்ந்திருப்பேன். உலகத்துக்கோர் அரசு மாவேன் இதோ புறப்பட்டுவிட்டேன். கற்பின் கொழுந்தே! பொற்பமர்செல்வி! நீ இங்கேயே இருக்கக் கடவை" என, பற்பலகூறி, அவள் நித்திரை செய்துகொண்டிருக்கும், கட்டிலை வலமாகச் சூழ்ந்து, தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கும் வீட்டை விட்டு வெளிப்படுபவர்போல், தாமிருக்கும் மாளிகையை விட்டுப் புறம் போந்தனர். வெளியில் உறங்கிக்கொண்டிருந்த சாரதியை எழுப்பி, "நமது கண்டகம் என்னுங் குதிரையைக் கொண்டுவா," என்றார். அவனும் "இந்த அர்த்த

ராத்திரியில் இங்ஙனந் தேவரீர் எழுந்து செல்வதற்குக் காரணம் யாதோ?'' என, சித்தார்த்தர் தமதெண்ணத்தைச் சுருக்கமாய் விளக்கி, அவனைச் சமாதானஞ் செய்தார். அவனும் ஒரு வாறு தேறிப்பரிமாவைக் கொணர்ந்தான். அதன் மேல் ஆரோகணித்த சித்தார்த்தர், அவ்விரவே அந்த நாட்டின் எல்லையைக் கடந்து குதிரையை விட்டிறங்கி, தந்தையிடங் கூறும்படி சில சமாசாரங் களை வாகுவனிடஞ் சொல்லி, அவனையுங் குதிரையையும், திரும்ப நகர் நோக்கிச் செலவிடுத்தார்.

## 8-வது உண்மை யுசாவிய படலம்

சூரியோதயமாயிற்று. சித்தார்த்தர் பிம்பிசார ராஜன் ஆளு கைக்குட்பட்ட இரத்தின கிரியிலுள்ள ஓர் குகையிற் புகுந்து வசிப்பதானார். மத்தியானவேளையில் அடுத்துள்ள சிற்றூர்களிற் சென்று பிச்சையேற்றுண்பார். சிலபொழுது அவர் அந்த மலை யிடங்களிலெல்லாம் சுற்றித்திரிவதுமுண்டு. இப்படியிருக்கையில் ஒருநாள் அவர், அம்மலைமேல் உணவும் உறக்கமுமில்லாமல், பல விதத்திலும் உடலுக்கும், உயிருக்கும், வருத்தத்தையுண்டாக்கித் தவஞ்செய்து கொண்டிருக்கும், சில "முனிவர்"களைக் கண்டு "ஜீவர்கள் துக்கத்தினின்றும் நீங்கிச் சுகத்தை யனுபவித்திருக்க, நீங்கள் ஏதேனும் மார்க்கங்கண்டுபிடித்ததுண்டோ?'' என, அதற் கவர்கள், தமது கொள்கைகளை விரித்துரைத்தார்கள். அவையெல் லாம் சித்தார்த்தருக்குப் பிடிக்கவில்லை.

அப்பால் அவர், பிம்பிசாரனது இராஜதானிக்குச் செல்லும் மார்க்கத்தில் வந்து நின்றுகொண்டிருந்தார். மத்தியானவேளையா யிருந்தது. கதிரவன் தனது கடுங்கிரணத்தால் எங்குந்தபிக்கும் படி செய்துகொண்டிருந்தான். அந்தவேளையில் ஓர் ஆட்டுமந் தையைச் சில இடையர்கள் ஓட்டிக்கொண்டு வந்தனர். வருகை யில் ஒருகுட்டி இரணத்தால் காலூன்ற முடியாமல், இனத்திற் பிந்தி நொண்டிநொண்டி நடந்து வந்துகொண்டிருந்தது. அதன் தாயோ, மந்தைக்கும் மறிக்கும் நடுவில் குட்டியைத் திருப்பத்

திரும்பப்பார்த்துக்கொண்டே சென்றுகொண்டிருந்தது. இதனைக் கண்ட சித்தார்த்தர், தாயை நோக்கி "நீயொன்றுக்கும் விதனப்பட வேண்டாம்உன்அருமைப்பிள்ளையைநான்சுமந்துகொண்டுவருகிறேன்" என்று சொல்லி, அக்குட்டியை எடுத்துத்தோளிற் போட்டுக் கொண்டு, இடையருடன் நடக்கலானார். அப்போதவர், அந்த மேய்ப்பாளரை நோக்கி. "இந்த ஆடுகளை இக்கொடிய வெயிற் பொழுதில் எங்குச்செலுத்துகிறீர்கள்?" என, அவர்கள் "இந்த நாட்டுக்கு அரசாகிய பிம்பிசார மஹாராஜர் ஓர் யாகஞ்செய்கின்றாராம், அதன் பொருட்டு அவருத்தரவின் பேரில், இந்தமந்தையை இப்பொழுது ஓட்டிச்செல்கின்றோம்" என்றார். இதுகேட்டதும் சித்தார்த்தருக்கு, உள்ளந்திடுக்கிட்டது. "அச்சமும் அருளுமில்லாமல் இவ்வளவுபிராணிகளையும், வதைக்கத்துணிந்திருக்கும் ஒருவனை நல்வழிப்படுத்துவதே, நமதுவேலையாகும்" என்று நினைந்து அந்த இடையருடன் தாமும் நடக்கலானார்.

இவ்வாறாக, ஒருத்தி தனது அருமையான பிள்ளையொன்று இறந்துபோக அப்பிரேதத்தைத் தோளில் தாங்கிக்கொண்டு "உயிர் நீத்த இக்குழந்தைக்கு உயிர்கொடுப்பாருண்டோ?" என்று துக்க பரவசத்துடன் பல இடங்களிலும் அலைந்துகொண்டிருந்தவள், இடையருடன் குட்டியுந் தோளுமாய் நடந்துகொண்டிருக்கும் நமது சித்தார்த்த ரிடத்திலும் வந்து வணங்கிப் பிணத்தைக்கீழே கிடத்தித் தனரெண்ணத்தை வெளியிட்டாள். அவளுடைய அறியாமையின் திண்ணத்தைக் கண்ணுற்ற அவர், அவளைநோக்கி அம்மணி! "ஒருவருமிறந்திராத வீட்டிலிருந்து, கொஞ்சங்கடுகு வாங்கிவா, உன்பிள்ளையைப்பிழைப்பிக்கின்றேன்" என்றார். உடனே அவளுங்களித்து அப்படியே வீடுவீடாய்ச் சென்று கடுகுகேட்டாள். இறப்புநிகழாத வீடொன்றில்லாமையாலே, அவள் மனத்தெளிவுடன் மீள்வாளாயினள்.

பிறகு சித்தார்த்தர், அவளை, அருகிலழைத்து, மரணம் என்பது எல்லோருக்கும் பொது என்பதையும், அதனைத் தடுக்க எவராலுமாகாதென்ற விஷயத்தையும், நன்றாய்த் தெரிவித்துத் தேற்றி, இறந்த குழந்தைக்கு ஈமக்கடன் நடத்தும்படி கட்டளையிட்டனுப்பினர்.

---

## 9-வது பூததயைவிரித்த படலம்.

ஆட்டுமந்தை முன் செல்லப் பின் தொடர்ந்து செலுத்தி வரும், இடையருடன் சித்தார்த்தர் குட்டியுந்தோளுமாய் நகரத்துள் பிரவேசித்தார். அங்குள்ள ஆண், பெண், பாலர் பலரும் இவரைப்பற்றிப் பற்பலகூறிப் பின்தொடர்ந்துவர, அவர் பிம்பிசாரனுடைய யாகமண்டபத்திற் புகுந்தார். அங்கே ஓமஞ்செய்பவரையும், வேதமோதுபவரையும், யூபத்தம்பத்திற் கட்டியிருக்கும் அஜத்தை வதைசெய்ய நிற்பவரையும், இனிவர விருக்கும் பிராணாபத்தைக் கருதி, அவ்வாடு கண்ணீர் விடடுக்கதறிக்கொண்டிருத்தலையும், அவர் கண்டார். காணவே அவர்க்கு அருளாவேசம் பிறந்து விட்டது. பிறக்கவே, அவர் விரைந்துசென்று தம்பத்திற் கட்டியிருந்த ஆட்டை அவிழ்த்து அப்பாற் செலவிடுத்ததுமன்றி, ஓர் அந்தணன் கையிற் கொண்டிருந்த வாளையும் பிடுங்கி யெறிந்தார். இவரிப்படியெல்லாஞ்செய்தும், அங்குள்ளவரிவரை யொன்றுஞ்செய்யவில்லை. இவரது தோற்றத்தைக்கண்டு எல்லோரும் ஆங்காங்குப்பிரமித்து நின்றுவிட்டனர். அப்பாலவர், கேட்பவருள்ளமெல்லாம் தண்ணீராயிளகியோடுமாறு, ஜீவகாருண்யத்தைப்பற்றி அருமையான ஒரு பிரசங்கஞ்செய்தனர்.

இங்ஙனம் சித்தார்த்தரது வாக்கினின்று வெளிப்பட்ட அமுததாரை யொத்த பிரசங்கத்தைக்கேட்டதும், அங்கிருந்தவர் இருதயமெல்லாம் உருகி விட்டன. பிம்பிசாரனும் உள்ள மிளகிப் பள்ளததிற்பாயும் வெள்ளம்போல், சித்தார்த்தரது பாதங்களில் வந்து வணங்கி, சுவாமி! "இவ்வெளியேனிதுகாறும் செய்து வந்த கொலைபாதகங்களுக்கு அளவு சங்கையில்லை. இப்பொழுதுதான் உயிர்க்கொலையால்வரும் பாதக மின்னதெனத் தெளிந்து கொண்டேன். ஓமஹாப்பிரபுவே! இனி யான் மாத்திரமல்ல என்னுளுக்குட்பட்ட எவரையும், இக்கொலலா விரதத்தைக்கொண்டொழுகச் செய்வேன்" என்று சொல்லிவிட்டு, எவரும் எக்காரணத்தை முன்னிட்டும் எவ்விடத்தும் பிராணிகளை வதை செய்யக்கூடாது, எனவும், அங்ஙனஞ் செய்தவர்கள், தண்டிக்கப்படுவர் எனவும் கிராமங்கள் தோறும் பறையறையச்செய்தான். அவ்வாக்கினை

யை அந்நாடு நகரங்கள் முழுவதுங் கைக்கொண்டொழுகின. அப்பால் அந்த வேந்தன் அந்த மகச்சாலையைத் தீக்கிரையாக்கி விட்டான்.

## 10–வது புத்ததான படலம்.

பின்னர் பிம்பிசாரன், அந்தக் கௌதமராகிய சித்தார்த்தரைத் தன்னுடனேயே யிருக்க வேண்டினன். அதற்கவர், "உண்மை நெறியொன்றை நாடித்திரிகின்றேன். எனவும், அதனைக்கண்டு பிடித்தாலன்றி ஒருகணமும் ஓரிடத்தில் நிலைத்திருக்கமாட்டேன்" என்றும் சொல்லி, அவனிடத்தில் விடைகொண்டு, கயையை நோக்கி நடக்கலானர். செல்லும் வழியில் ஒரு வனத்தில் சில முனிவர்களைச் சந்தித்தார். அவர்களிடத்தில், "ஜீவர்களுக்கு இன்பத்தைத் தரக்கூடிய நீங்கள் கண்ட நெறியாதோ?" என விசாரித்தார். அதற்கவர் "வேதமார்க்கமன்றி வேறிருப்பதாய்த் தெரியவில்லை" என்றார். அதனை அவர்மன மொப்பவில்லை. உடனே அவர் அவ்விடம் விட்டு வேறொரு வனத்திற் சென்று, உண்மை காணும் நிமித்தம், ஊணும் உறக்கமுமில்லாமல் கண்ணை மூடி நிஷ்டையிலிருந்தார். இப்படி இவர் சில நாளிருக்கவே, அவர் உடம்பு வாடி வற்றலாயது. உயிருமிளைத்தது. உட்காரவுங்கூடச் சக்தியற்றவராய் மூர்ச்சையாய்க்கீழே கிடந்தார்.

இதனைக்கண்ட ஓரிடையன், "அவரைத்தொடக்கூடா" தென்று நினைத்து, அவர் வாய்க்கு நேரே ஓராட்டின் மடியைக்கறந்தான். அப்பாலைக்குடித்தபின், சித்தார்த்தர் சிறிது களைப்பு நீங்கினர். பிறகு அவர் அந்த இடையனைப் பக்கத்திலழைத்து, அன்பனே! "மனிதவர்க்கத்தவர் யாவரும், பிறப்பிறப்புக்களில் ஒரு தன்மைப்பட்டவரே யாகின்றார். என்றால் உயர்வு தாழ்வாகிய ஜாதிப்பிரிவுகளைப்பற்றிப் பேசக்காரணமுண்டோ? 'உலகத்திலிட்டார் பெரியோர் இடாதாரிழிகுலத்தோர்' என்ற பழமொழியையும் நீயறிவாயே" எனப்பல நீதிமார்க்கங்களைப் புகன்றார். அப்பாலவன் கறந்து கொணர்ந்த பாலையுங்குடித்துப்பசி நீங்கினர். விடை கொண்டு அவ்விடையனும் அப்பாற் சென்றான்.

இவரிப்படி இருக்கையில், அடுத்த வூரிலுள்ள சுஜாதை என்னும் ஓர் பெண்மணி, தனக்குப்புத்திர பாக்கியத்தையருளிய வனதேவதைக்கு, முன் நேர்ந்து கொண்டபடி பாலன்னத்துடன் அங்குவந்தவள், அங்கோர் மரத்தடியிலிருக்கும் சித்தார்த்தரைக் கண்டு, அவரையே அத்தெய்வ மெனக்கருதிப்பாயசத்தைவணக் கத்துடன் நல்க, அவரும் அதனை வாங்கி வயிறாரப்புசித்தனர். பிறகு அவர் அவளைப்பார்த்து, அம்மணீ! எனக்கு நீ இந்த அதி ருசிகரமான அன்னத்தைக்கொணர்ந்து கொடுத்தனையே, இதற்குக் காரணமேதேனுமுளதோ" என, அவள்தான் முன் நேர்ந்தபடி செய்ததைச் சொன்னாள். அது கேட்டதும் சித்தார்த்தர், "தாய் போன்றவளே! நீ நினைத்தபடி யானொரு தெய்வமில்லை. மனி தனே. ஓர் நன்னெறி காணும் நிமித்தம், இங்கிருக்கிறேன்." என்று சொல்லிவிட்டுக் குழந்தையை ஆசீர்வதித்து, அவளை நோக்கி "பெண்கள் திலகமே! நீ இந்த உலகத்தில் இவ்வில்லற வாழ்க்கை யையே உவந்தனைபோலும்" என்றார். அதற்கவள் சுவாமி! நான் நாடோறுங்கணவரையே வணங்கி, அவருக்கு வேண்டும் பணி விடைகளைத் தவறாது செய்து, ஒழுகி வருகிறேன். அருமையான சந்ததியு மெனக்கிருக்கின்றது. மேலும் "நன்மை விதைத்தால் நன்மை விளையும், தீமை விதைத்தால் தீமை விளையும், என்பதை யுங் கடைப்பிடித்திருக்கிறேன். ஆதலால் இவ்வுலகத்தில் எனக்கு யாது குறையிருக்கின்றது." என்றாள்.

இதனைக்கேட்டதும் கௌதமர் அவளை நோக்கி, நங்காய்! "யானிதுகாறும் வருந்தித்தேடிக்கொண்டிருந்ததை இப்பொழுது, உன்வாக்கினாலேயே தெரிந்துகொள்ளப்பெற்றேன். இனிநீசுகமாய் வாழ்வாயாக" என்று அவளை வணங்க அவளும் அவரை வந்தித்துத் தன்னிடஞ்சேர்ந்தாள். உடனே சித்தார்த்தரும், அறியவேண்டியதை அறிந்துவிட்டதின் பலத்தால், அங்கோர் அரசமரத்தினிழலிலிரு ந்து, புத்தரெனப் பெயர்பெறுவாராயினர்.

## 11–வது கபிலை மீண்ட படலம்.

இவரிப்படியிருக்கையில் அங்கே கபிலவாஸ்து நகரத்தில் சுத்தோதனமன்னவன் தனது பட்டத்துக்குரிய பிள்ளையைக்காணுமையால்சோகசாகரத்தில் மூழ்கலானான். யசோதரையும் கோளின் வாய்ப்பட்ட மதியம்போல், பொலிவிழந்து, ஊணுறக்கமற்றவளாய்த்துன்பக்கடலில் துரும்புபோல் தத்தளிப்பதானாள். இப்படி வருடங்கள் ஏழுசென்றன.

ஒருநாள் சிலஇரத்தின வியாபாரிகள் அந்தக் கபிலையில் வந்து சித்தார்த்தர், புத்தராகி விட்டதைப்பற்றி அரசனிடத்திற் சொல்லிக்கொண்டிருக்கையில். யசோதரை அந்தவியாபாரிகளை அழைத்துக் கேட்டாள். அப்போது அவர்கள், அவளை வணங்கி, அன்னையே! "தங்கள் நாயகராகிய கௌதமர் தாம்அறியவேண்டியதை அறிந்துவிட்டதினால் புத்தராகிப் பலரும் போற்றத்தக்க பதவியில் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றார். அவரைப்பலரும் பின்பற்றி நடக்கின்றனர். எவர்க்கும் முத்திநெறியைக்கையுமெய்யுமாய்க்காட்டிக் கொடுக்கின்றனர். அவர் புத்தரான பொழுதே மாரனென்பவனையும் வெற்றிகொண்டார். அவரை யாங்கள் தெரிசித்தோம். அப்பாலவர் காசிசென்று, சிலபிரசங்கங்களைச் செய்து பலமுனிவர்களையும் தம்மதத்திற் சாரச்செய்தார். பிறகு அசத்து என்னுமரசனையும் அனேகம்பிரபுக்களையும் பிம்பிசாரஅரசனையும் தம்முடன் சேர்த்துக்கொண்டார். சிலநாள் செல்ல அவர் 'வேலு' என்னும் பெயருடைய வனத்திலிருந்து பிரசங்கமாரிபொழியலானார். அதைக் கேட்டபலரும் ஆவியிளகிக் காவியுடுத்து, அவருக்கு முதன்மையான சீடராயினர். தாயே! அந்தப் புத்தமஹாமுனிவர் இந்த இடத்துக்கும் வரத்திருவுளம் கொண்டிருக்கிறார். இன்னும் ஒரு வாரத்துக்குள் தாங்களுங்கண்டு சேவிக்கலாகும்" என்றார். இவைகளையெல்லாங்கேட்ட யசோதரை மனமிகக் களித்தவளாய், அந்த வணிகர்களுக்குப் பற்பல அணிகளும் வஸ்திரங்களும் பரிசிலாக நல்கி, அவர்களையனுப்பிவிட்டுத் தனது அன்பனார்வரவை எதிர்பார்த்தவண்ணமாயிருந்தாள்.

தன்னுடைய புத்திரர் துறவியாய் விட்டதைக் கேட்ட சுத்தோதனன், அவரை விரைவில் அழைத்துவரப் பல அறிவாளிகளை ஏவினன். அவர்கள் யாவரும் புத்தரிருக்குமிடத்திற் சென்று அவர் செய்து கொண்டிருந்த உபந்நியாசங்களைக்கேட்டு உள்ள மிளகி உள்ளபடி உலகத்தைத் துறந்து, அவர்க்கடிமையாளராய் அவர் பக்கத்திலேயே இருந்து விட்டார்கள் அது தெரிந்த அரசன் 'யுதாயு' என்னும் மற்றொருவனை அனுப்பினன். அவன் 'புத்தரது, அரியபிரசங்கம் செவியிற் பட்டால் தன்னையும் அது மயக்கிவிடும்' என்று நினைத்துக் கொஞ்சம் பஞ்சைவாங்கிக் காதில் அடைத்துக் கொண்டு, புத்தரை அடுத்துப்போய், "உமது தகப்பனார் உம்மை விரைவில் தம்மைவந்து காணுமாறுகூறினர்" என்றான். அதற் கவர் "இன்னுமொரு வாரத்துள்யானங்குவருவேன், பிதாவுக் கிதனை அறிவிப்பாயாக" என்றார். உடனே யுதாயுவு மீண்டு அச் சமாசாரத்தை அரசனுக் கறிவித்தனன். இச்செய்தியைக் கேட் டெல்லோரும் ஆனந்தமடைந்தனர். வீதிகளெல்லாம் பந்தலாலும் தோரணங்களாலும் கொடிகளாலும் வாழை கரும்பு கமுகு முதலியவைகளாலும் அலங்கரிக்கப்பட்டன. குறிப்பிட்ட தினத்தில் ததாகதர் வருதலை, எதிர்நோக்கிவேந்தனும் மந்திரிமார் முதலான உத்தியோகஸ்தர்களும், குடிஜனங்களும் ஆங்காங்கு வீதிகளில் வந்து நின்று கொண்டிருந்தனர். யசோதரையும் பிள்ளையாகிய இராகுலனைக் கையிற் பிடித்துக்கொண்டு, அங்கோரிடத்தில் நிற்பாளாயினள். வாத்தியங்கள் முழங்கிக்கொண்டிருந்தன.

அத்தருணம் பட்டணத்தவர்கள், முண்டிதங்கொண்ட தலையும், பிக்ஷாபாத்திரமேந்தியகையும், காவியுடுத்தஅரையு முடையராய்க் கருணைபூத்த கட்டழகுடையவர் என்று சிறப்பித்துச் சொல்லத்தக்க புத்தபகவான், சூழ்ந்துவரும் அடியார்கள் நடுவில் நடந்துவருதலைக்கண்டார்கள். அவர்கள் அவரைப்பற்றிப் பற்பல விதமாகப்பேசிக்கொண்டார்கள். அப்பொழுது யசோதரை அன்பரை அடுத்துவந்து, "எனது பிராணநாதா! என்னை வெறுத்து விட்டு எங்குச் சென்று விட்டீர்" என்று அவர் பாதத்தில், கண்ணீர்கழுவ விழுந்தெழுந்தாள். சுத்தோதனனே தான் பெற்ற

பிள்ளை தனக்குதவாது, துறவியாய் விட்டதைத்தெரிந்து, "இப்படிப்பட்ட பிள்ளை இருந்தென்ன போயென்ன இப்பொழுதே இவனை முடிபடத்துணித்துப் போடுகிறேன்" என்று கைவாளைச் சுழற்றிக்கொண்டுவந்தான். வந்தவன் அப்புத்தனுரது, தெய்வத்தன்மை வாய்ந்த சுந்தரத்தோற்றத்தையும் அமிர்தமயமான வாக்விலாசத்தையும், கருணைமூழ்கிய விழியழகையுங்கண்டு, கைவாளை எறிந்துவிட்டு, அவரைநோக்கி, எனதுஐயனே! 'இதோசுற்றிநிற்கின்ற குடிகளும், பெற்றபாவியாகியயானும், நின்மனைவியுமகனும் மற்றுமுள்ளவரும், அளவுகடந்த துக்கத்தில் ஆழ்ந்து வருந்த, இத்துறவிவேடங் கொள்ள எங்குக்கற்றனை? என்னுயிர் கிடந்து துடிக்கின்றதே. உலகமெல்லாம் ஒருகுடைக்கீழ் ஆளுவாயென்றிருந்த இப்பாவியின் எண்ணமெல்லாம் பாழாக்கி விட்டனையே. காவியுமரையுமாக என்முன் நிற்கின்றாயே. அதைப்பார்த்து விட்டு இன்னும் யான்உயிருடனிருக்கின்றேனே! எனது அருமைக்குமாரனே! இனியிந்த இராச்சியத்தை எனக்குப்பின் எவர் ஆளப்போகின்றார்? என்னை எவர்தேற்றுவார்? போனதுபோகட்டும். இனியாவது மணிமுடிசூடி அரசாட்சியைக் கைக்கொள்வாயாக' என்றான்.

இவைகேட்ட புத்தர் அவனைநோக்கி, தந்தையே! 'நான் உமது அருமைக்குமாரனே ஆனாலும், எட்டி யோசித்தால், எனக்குமுன் இங்கு அவதரித்த திரிகாலஞானிகளான, புத்தர்களுடைய பரம்பரையேயாவேன். அவர்களுடைய ஆக்கினையினாலேயே யானிங்கு அவதரித்திருக்கிறேன். அப்படிப்பட்ட நான் அவர்கள்கூறிய நெறிப்படி நடவாமல் உம்முடைய சொற்படி நடத்தல் தகுதியாயிருக்குமோ? பண்டவதரித்த, புத்தரெல்லாம் இப்படியே துறவியாய் அலைந்து, திரிந்து, தாங்கண்ட அரிய விஷயத்தைப் பெற்றோரோடு மற்றோருக்கும் உபதேசித்து, அவர்களை நல்வழிப்படுத்தியிருக்கின்றனர். அதுபோல நானும் செய்வேன்' என்று நான்குவிதமான உண்மைகளையும் எட்டுவிதமான நெறிகளையும் உபதேசித்தனர்.

---

## 12-வது மஹோபந்யாசப் படலம்.

அதன் பிறகு புத்தர், மன்னனும் யசோதரையும் இராகுலனும் வேண்டிக்கொண்டபடி, அரண்மனையிற் புகுந்து சிறிது நேரத்தில் வெளிப்பட்டனர். அப்பாலவர் அந்நகரின் சமீபத்திலுள்ள, ஒரு குன்றின் மேலேறி நின்றுகொண்டு, கீழேகூடியிருக்கும் திரளான ஜனங்கள் யாவர்க்கும் நன்றாய் விளங்கும்படி அருமையான பல உபந்யாசங்களைச் செய்தார். கேட்டிருந்த அரசனும் யசோதரையும் இராகுலனும் மற்றுமுள்ளாரிற் பலரும் பௌத்தராயினர்.

---

## 13-வது கடமைகள் வகுத்த படலம்.

போதி வேந்தாகிய, புத்தர் வகுத்தருளிய நெறிப்படி நடப்பவர் பலரும், அவரைநோக்கி, சுவாமி! "பெற்றோர், மக்கள், ஆசிரியர், சீடர், பதி, பத்தினி, மித்திரர், யஜமானன், வேலைக்காரன், உபாஸகர், பிக்ஷு, ஆகிய இவர்கள் கடமை ஒழுக்கங்களையும் விளக்கியருள்வீராக" என்று பிரார்த்திக்க, அங்ஙனமே அவரும் விளங்க விளம்பினர்.

இப்படியே நாடோறும், புத்தர், பல இடங்களிலுஞ் சென்று பிரசங்கங்கள் செய்துகொண்டிருந்தார். தமது சீடர்களையும் அவ்வண்ணஞ்செய்யச்செய்தார். அவர் எண்பது வயதுவரையும் பலருக்கும் இதோபதேசஞ் செய்தலையே வேலையாகக் கொண்டொழுகி, இவ்வுலகமெல்லாந் தமது புகழைப் பரப்பினர். முடிவில் நிர்வாண மெய்தினர்.

---

புத்தபுராண வசனச் சுருக்க முற்றிற்று.

உ

# புத்தபுராணம்

## பாயிரம்.

### கடவுள் வணக்கம்.

---

### அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

---

பூமலி பொருள்கட் கெல்லாம் பொலிவொடு குணவ ணங்கள்
நாமலி யுருசி வாழ்வு நலிவெலாம் நல்கா நின்றே
ஏமமா யென்று மாகி யெங்கணு நிறைந்து நிற்குந்
தாமமார் சக்தி யொன்றே சார்ந்துநாம் வணங்குந் தெய்வம். (1)

புத்தரின் மதமா மிஃது புறத்துறு சமய மாக
வைத்தன ரெனினும் பூத தயையினை வளர்த்த லாலே
உத்தம மதத்தி னொன்று வுவந்துள மென்னைத் தூண்டு
வித்ததாற் செய்யு ளாலே விளம்பினன் தமிழின் மன்னோ. (2)

---

### அவை யடக்கம்.

பாலதைப் பாச்சி யென்னும் பாலகர் குதலை கேட்டு
மேலவர் வியப்ப தன்றி வெறுத்திடா ரதுபோ லான்றோர்
நூலெது மறியேன் நொய்தின் னூற்றவிப் புராணங் கேட்ட
சீலநற் புலவ ராவார் திருவுளங் களிப்பார் திண்ணம். (3)

பாலியே முதலா வுள்ள பலபடு மொழிக ளாலும்
ஆலிநேர் போதி வேந்தர் அருங்கதை விரித்தார் வல்லோர்
போலியான் தமிழிற் சொற்றேன் போற்றுவர் புலவர் தள்ளார்
காலிது கழுநீ ரென்று கடிவதோ கடல்கள் மாதோ. (4)

---

### பயன்.

சாதியின் பிரிவு நோக்கார் தாழ்வொடு மேன்மை காணார்
நீதியி னெறி யினிற்பார் நிலத்துட லழித்துத் தின்னார்
பூதியிற் களியா ரின்மை பொருந்தினு மயங்கா ராவர்
போதியின் வேந்த னார்தம் புராணமி தாய்ந்து ளோரே. (5)

# புத்தபுராணம்.

## நூல்.

## 1-வது திரு அவதாரப் படலம்.

உலகெலாம் புகழுங் கங்கைக் குபநதி தமிலொன் ருகி
அலகிலா வுயிர்கட் கெல்லா மமுதமே யாகி வேண்டும்
நலனெலாம் நயப்ப தான ரோகிணி நதியின் பாங்கர்
இலகிய நகர மொன்றுண் டிதன்பெயர் கபிலை யென்ப. (1)

சொல்லிய நகர்த ணிற்சுத் தோதன னென்னுந் தோன்றல்
வல்லியி னழகு பூத்த மாயையா மனையா ளோடு
மல்லியல் குடிக ளெல்லா மனங்களி கூரச் செங்கோல்
நல்விய லெவணுஞ் செல்ல நானிலம் புரக்கு நாளில். (2)

பிள்ளையொன் றிலாத தான பெருங்குறை தன்னை யோர்ந்து
கிள்ளைநேர் மொழியா ளில்லக் கிழத்தியை நோக்கி நங்காய்
கொள்ளையாஞ் செல்வம் வீரங் கோமுறை யரசோ டெல்லாஞ்
சள்ளையே நமக்கிங் கென்னே சந்ததி யிலாத வாழ்க்கை. (3)

மன்னரிற் சிறந்தா லென்ன வண்மையின் மிகுந்தா லென்ன
பொன்னினைக் குவித்தா லென்ன புகழ்பல விளைத்தா லென்ன
இன்னயக் குதலை யாலே இருதய முருகச் செய்யும்
நன்னயக் குழவி யெய்தும் நல்வினை பெருத வர்க்கே. (4)

குதலைச்சொற் புகுசெ விக்கண் குழலிசை புகுவ தில்லை
மதலைய ருச்சி மேய வாசநேர் மலரு மில்லை
விதலைசேர் நடைகண் டார்க்கு வேறொன்று காண லில்லை
நிதமவ ருடன்வாழ் தல்போல் நிறைந்தவோர் வாழ்க்கையில்லை. (5)

இகமில்லை பரமு மில்லை யெய்தவ செய்தி ளுனுஞ்
சுகமில்லை துக்க மின்றித் தோற்றமோ டேற்ற மில்லை
அகமுனைந் தெழுவ தான வூக்கமோ டாக்க மில்லை
சகமதிற் பிறந்த தான தடமெது மில்லை யாமே. (6)

உண்டதே யுண்டு நாளு முடுத்ததே யுடுத்து நேரிற்
கண்டதே கண்டு நாளைக் கழிப்பதோ வென்ன நங்கை
வண்டதே யனைய கண்ணீர் வார்தர மயங்கி நாதா
பண்டதே வினையை வெல்லப் பாற்றதோ வென்று சோர்ந்தாள்.(7)

ஈங்கிவர் துன்பத் தாலே யிடழிந் திருக்கு நாளில்
ஓங்கிய நல்ல கால மடுத்தலா லொருநாள் மாயை
தூங்கின ளறுகோ ணத்துச் சுடருரு வானமீனம்
ஆங்கிவள் வயிற்றிற் புக்க தாகவோர் கனவு கண்டாள். (8)

கண்டவக் கனவு தன்னைக் காந்தனுக் குரைத்தா ளந்த
மண்டலத் தரசு மாங்கோர் வல்லசோ திடனைக் கூவி
விண்டனன் பயன்யா தென்ன விளம்பலுங் கணித நூன்மேற்
கொண்டவன் முறையி னோக்கிக் கூறுத லானான் மன்னோ. (9)

மானிகர் விழியாள் மாயை வயிற்றினி லருளின் செவ்வி
தானிலைக் குழவி யொன்று தானுதித் திடுமச் சூறா
நானிலம் புரப்பார் யார்க்கும் நாயக மாகுமன்றேல்
ஞானியா யுலக முய்ய நல்வழி காட்டு மன்றே. (10)

சோதிட வல்லான் சொன்ன சொற்படி மாயை யென்னு
மாதருங் கருப்பங் கொண்டாள் மாதங்கள் பத்துஞ் சென்ற
நீதிநல் லருளோ டன்பு நீர்மைகா ருணியம் வண்மை
யாதியோ ருருக்கொண் டன்ன ஆண்மக வொன்றை யீன்றாள்.(11)

ஈன்றவோர் மகவு தன்னை யிருநிலத் திறைவ னோக்கி
ஆன்றதோ ருவகை யென்னு மாழியின் மூழ்க ஆங்குச்
சான்றவ ரெவரு முள்ளந் தழைகளிப் பினராய்ச் சோதி
கான்றபன் மணிக ளாதி காணிக்கை தந்து கண்டார். (12)

திருவார்த்த மார்ப னான பூபதி சீர னைத்தும்
உருவார்த்த வனைய மேனி யோர்சிறு காத லற்குப்
பெருவார்த்தி கூர வைத்த பெயர்கள்சித் தார்த்தன் மற்றுஞ்
சருவார்த்த சித்தி யின்ன சாற்றினன் தகைமை நோக்கி. (13)

இவ்வண்ணக் குழவி தன்னை யினிது காணிய வந்தாருள்
உய்வண்ணந் துறவு பூண்ட ஒருமுனி யசிதர்க்கண்டு
மைவண்ணக் கூந்த லோடு மன்னவன் வணங்கிப் போற்றிச்
செய்வண்ண முபச ரித்துச் சிறுவனை வாழ்த்த வென்றான். (14)

என்றலு மந்த யோகி யிளவலை யினிது நோக்கி
நன்றதாம் ஞானிக் கேற்ற நல்லிலக் கணங்க ளெல்லாம்
ஒன்றிட லுடலிற் கண்டான் ஒளிர்முகத் துளமுந் தேர்ந்தான்
மன்றலங் குழவி பாத மலரிணை முடிமேற் கொண்டான். (15)

காவலன் முகத்தை நோக்கிக் கான்முனி யிவனா லிந்தப்
பூவல யங்க ளெல்லாம் புதுப்பிக்கப் படுவ தோடு
சாவது முதலா வுள்ள துக்கமுந் தரணிக் கின்றாப்
போவது திண்ணம் போற்றும் பொருளிவ னன்றி யில்லை. (16)

விழைவுறு மிவன்றன் செய்ய விரிமலர் வாய்ச்சொல் லென்னும்
மழையினால் மக்க ளென்ற வான்பயிர் தழைப்ப தாகும்
பழையநின் குலமும் பேரும் பாரெலாம் பரவு மேனும்
இழையணி யிவனை யீன்றா ளெழுதினத் திறந்து போவாள் (17)

சகமிகப் புகழ்ந்து போற்றுந் தனயனைப் பெற்றோ மென்றிங்
ககமகிழ் சிறக்க வேண்டா மரசனே யிவனால் நிற்குச்
சுகமென்ப தணுவு மில்லை துக்கமே யதிக மாகும்
நிகழ்வன வுரைத்தா மென்று நீங்கின ரசித ரப்பால். (18)

மாமுனி சொன்ன வண்ணம் மாயையுந் துறக்கம் புக்காள்
கோமுதல் செவிலித் தாயால்குழந்தையைப்போற்று வித்துக்
காமுறு கல்வி கற்குங் காலம்வந் தடுப்பப்போத
நாமுறை தெரிவிச் சுவாமித் திரனைநன் நாளி னோக்கி (19)

நல்லவோ ராசானாக நயந்தன னவனை முத்துஞ்
சொல்லரும் பொருளு மற்றைச் சுருதியோ டங்க மெல்லாஞ்
சில்லவாங் காலந் தன்னிற் செப்பினன் சிறுவ னந்தப்
பல்லவாங் கலைக ளெல்லாம் பழையபா டம்போற் கற்றான் (20)

நில்லென நிற்பா னுசா னீழலிற் பிரியா னேனுஞ்
செல்லெனிற் செல்வா னுளுஞ் செய்வன செய்து தீர்ப்பான்
சொல்லெனிற் சொல்வான் பாடஞ் சொன்னது கொண்டு வேறுங்
கல்லெனிற் கற்பான் கற்ற கல்வியை மறத்தல் செய்யான். (21)

ஆனையுந் தேரு மாவு மணிபெற வகுத்தல் செய்யுஞ்
சேனையும் நடாத்தல் கற்றான் சிலையெழு வாள்வே லாதி
யேனைய படைகள் யாவு மெதிரறப் பயிறல் செய்தான்
ஊனையு முருக்கும் வாக்கால் உலகெலா முய்தல் செய்வான். (22)

கருப்பினைப் பிழிந்த சாற்றிற் கனிநயச் சொல்லுஞ் சேரக்
கருப்பினி லுதித்த சீவ காருணி யமுமா கோப
நெருப்பினைச் சாந்த நீரால் நீத்திடு நற்கு ணத்துப்
பொருப்பினை யிடங்கொள் சீலப் புலமையோ டுயர்ந்த வன்றே.(23)

வாக்கெலா மமுத தாரை மனநிலை யளிக்கோர் கோயில்
நோக்கெலாங் கருணைக் கேணி நுவலுத லபய வார்த்தை
போக்கெலாம பிறர்க்கு வேண்டல் புரிதலே சித்த விர்த்தித்
தூக்கெலா முலக மின்பந் துய்க்குமா றுசாவ லானுன் (24)

மன்னவர் வேட்டை யாடன் மனுமுறை வழக்கென் றாலும்
அன்னதாந் தொழிலை நாளு மவன்கையிற் கொண்ட தில்லை
தன்னுயிர் போவ தேனுந் தரணியிற் சரிக்கும் வேறோர்
இன்னுயிர் செகுக்கும் பாவ மென்றென்றுஞ் சுடுவ தெனறே (25)

பந்தய மிழப்ப தன்றிப் பாங்குளார் பரிகட் கெல்லாம்
முந்திடத் தனது மாவை முடுக்கிடா னிளைத்தன் முன்னி
பந்தய மணித்தென் றாலும் பாங்குளா ருள்ளந் துன்பம்
முந்துறு மென்ன நண்ணி முனைகெடத் தோற்று நிற்பான். (26)

இவ்வித மாக வோர்நா ளிறைமக னத்தா னோடு
செவ்விய மைதா னத்திற் சென்றுலாம் பொழுது வெண்ணீர்
திவ்விய சிறக ரன்னத் திரள்பல விமைய நோக்கிக்
கவ்விய யிரைவா யோடு ககனவா றேகல் கண்டான். (27)

கண்டது மத்தா ஞெற்றைக் கணையினு லஞ்ச மொன்றை
மண்டல மிசையே வீழ்த்த மற்றது துடித்தல் நோக்கி
அண்டருந் துயரங் கொண்டா னளப்பருங் கருணை யாலே
கொண்டதை யங்கைதாங்கிக் குறித்தவோ ரிடத்திற் சார்ந்து. (28)

பாவிமு னெய்த வம்பைப் பையவே வெடுத்தெ றிந்தான்
தூவியை நீவல் செய்தான் உறுப்பெலாந் துடைத்தல் செய்தான்
ஆவினற் பாலுஞ் சோறு மருத்தினு னப்பா வஞ்சம்
ஆவியினி ளைப்பு நீங்கி ஐயனை நோக்கிற் றன்றே. (29)

நோக்கிய குறிப்பாற் புண்ணி ஞெவெலாம் போக்கு வித்தான்
பாக்கியம் பெற்றே னிந்தப் பாலனம் போற்ற லாலே
போக்கினில் விடுவே னென்ன நினைத்தலும் புடைத்து வீழ்த்து
நீக்கிட நினைத்தா னன்ன மென்னது நேர்தி யென்றே. (30)

வழக்கினி விழுத்தான் வேந்தன் மைந்தனு மவனு டாங்கோர்
கிழத்தன வறிவா ளன்முன் கிளத்தலு மவனு மொன்று
பிழைத்திடப் புரிந்த வர்க்கே யுரியது பிறிது கோறல்
இழைத்தவர்க் குரிய தில்லை யிதுமுறை யாகு மென்ன. (31)

தீர்த்தலுஞ் சீவர்க்கெல்லாஞ் சிறந்தவோ ரன்னை யாஞ்சித்
தார்த்தனுந் தவளத் தூவி தழைதரு அன்னந் தன்னைப்
பார்த்தன னெடுத்துக் கொண்டப் பாசன மேவுங் கானஞ்
சேர்த்தனன் விடுப்ப வஃதுஞ் சிறந்ததங் கினத்திற் கூடி. (32)

## 2-வது நாட்டுத்துன்பறி படலம்.

———[]———

தலைநிலை புகழுஞ் சுத்தோ தனனெனும் வேந்த னோர்நாள்
குலநிலை விளக்க வந்த குமரனை யழைத்து மைந்தா
கலைபல கரைகண் டாலுங் காவல னுவா னுக்கிங்
குலகிய லறிவு வேண்டும் இல்லையே லொன்று மில்லை. (1)

உலகத்தி னறிவு கல்லா வொருவனை யுயர்ந்தோர் யாரும்
பலகற்றுங் கல்லா னென்பர் பாரவன் புரந்திட் டாலுங்
கலகத்தி னிலைய மாகுங் கன்றின ரெதிர்த்தங் கொன்னார்
அலகத்தி னடித்தங் கோட்ட அகலுவன் கானி லம்மா. (2)

ஆதலா லுழவராதி யருந்தொழி லாளர் தம்பாற்
போதுதும் வருக வென்ன விருவரும் புரவியூர்ந்தார்
வேதனாற் படைக்கப் பட்ட விவிதமா முயிர்கட் கெல்லாம்
ஆதர வாவார் மேவு மணிகொள்பூம் பழனம் புக்கார். (3)

ஏர்பற்று மொருவன் மேழி யிடக்கையி னிருத்தி நீண்ட
கூர்பற்று தாற்றுக் கோலாற் கொழுவிய கடாப்பின் செய்ய
நீர்பற்றி வடியக் குத்தி நிணஞ்செய அதுது டித்துக்
கார்பற்று சேற்றிற் புக்க கால்கள் தள்ளாடல் கண்டான். (4)

கதிரவன் மேலை காந்தக் கடும்பசி வயிறெ ரிப்ப
விதிர்விதிர்த் துடல மெல்லாம் வேர்வுநீ ராறு பாய
பிதிர்தரு வரம்பு வாய்க்கால் பிறவுமண் வெட்டி கொண்டங்
கதிர்தர வெட்டிச் செம்மை யாக்கின ரயர்தல் கண்டான். (5)

காற்றொடு மழையும் வெய்யிற் கடுமையுங் கவனி யாமல்
ஆற்றுத வின்றிப் பிள்ளை அலறலு மனங்கொள் ளாமல்
நாற்றினைப் பறித்தெ டுத்து நாற்றகத்தி னமுகிக் கூர்ந்த
சேற்றினில் நடுதல் செய்யும் கடைசியர் சிரமங் கண்டான். (6)

வெட்டுவா ரிளைப்புக் கண்டான் வேண்டிய வுரங்கள் கொண்டு
கொட்டுவார் வருத்தங்கண்டான் குருத்தெழு கனை களெல்லாம்
கட்டுவார் நோவு பார்த்தான் கதிரரி களத்திற் சேர்த்துத்
தட்டுவார் துன்பங் கண்டான் தயாவொரு வடிவ மானான். (7)

கண்டிடு நெல்லை யெல்லாங் கனம்பெறு சும்மை செய்து
கொண்டுகொண் டிட்ட தான கோரமாம் பார மேய
வண்டியி னுகத்தை யேந்தி மாடுகள் புடைப்புக் கஞ்சி
அண்டிபின் தள்ளப் பைய வசைதலை யனகன் பார்த்தான். (8)

சாபத்தின் புணர்ப்பி ஞலோ தரித்திரக் கொடுமை யாலோ
ஆபத்தி னிலைய மான அனல்படு பாலை தன்னில்
கூபத்தின் துலையைப் பற்றிக் குறுக்கிரண் டாகத் தண்ணீர்
தாபத்தி னிளைத்திறைப்பார் தம்மையு மையன் கண்டான். (9)

ஆப்பசை குரங்கு போல அகப்பட்ட வடிமை யாளர்
மூப்பின ரிளைய ரென்று முதிர்பெறு நோயி ஞலே
தேய்ப்பவ ரென்றுங் காணுத் தீயவ ரேவ வன்னோர்
தோப்பிலே படும்பா டெல்லாந் தூயன்கண் ணூரக் கண்டான்.(10)

குளத்தலையுழைத்துச்சோர்வார்கோடரித்தொழில்செய்தெய்த்தார்
அளத்தலை யயர்ந்து நிற்பார் அருங்கல னுகைத்து நைவார்
களத்திடை கால்சாய்ந் திட்டார் உலைக்களங் கருக நிற்பார்
கிளத்தலை யரிதாமேவுங் கேட்டினை யறிவன் கண்டான். (11)

அத்தலை நீங்கிச் செல்ல வாண்டொரு பாந்திற் போந்த
பைத்தலை நாகம் வந்த தேரையைப் பற்ற வந்த
முத்தணி யரவை யாங்கோர் முழுவலி வயிரி கொண்டு
துய்த்தலைச் செய்ய வலைத் துணித்தனன் வேட னப்பால்.(12)

பச்சைப்புண் ணிடங்கு டைந்த மச்சத்தைப் பவளச் செங்காற்
சிச்சிலி கவர்ந்தெ ழுந்து செடித்தலை வலையிற் சிக்க
இச்சையி னதனைக் கொள்வா னெட்டிய வேடன்காலில்
நச்சராக் கடிப்பத் தீயன் நாய்நரிக் கிரைய தானன். (13)

இவ்வகை பலவுங் கண்ட வேந்தெழிற் குமா னென்னே
செவ்வகை யென்ப திந்தச் செகத்தினுக் கில்லை போலும்
நைவதை வலிது மலைக் கொடிதுமாய் நாசஞ் செய்தால்
உய்வகை தரையில் நீரி லும்பரி லுள்ள தேயோ. (14)

அலைக்குமே லலைபோல் துன்ப மடுக்குதே வரிய நோய்கள்
மலைக்குமேல் மலைபோல் வந்து மலைக்குதே மாணத் துன்பம்
தலைக்குமேல் தலைகள் சிந்தச் சாடுதே தாணி யெல்லாங்
கொலைக்குமேற் கொலையே யாகக் குவிந்ததே கூற லென்னே.(15)

மன்பதை வாழ்க்கை யெல்லாம் மாறுத கலக வாழ்க்கை
தின்பமே தொவொன்றை யொன்று செய்வதுந் தீய செய்கை
என்பதை யறிந்து கொண்டேன் இவையெலா மெக்கா லத்தும்
இன்பமா யன்புகூர்தற் கெவ்வழி யுள்ள தென்றே. (16)

முன்னத்தை யோச னைக்கண் மூட்டினன் யோகுசெய்வார்
என்னத்தா னிருந்தா னப்பா லிறைவனு ரேவ லாளர்
பொன்னொத்த குமரன் றன்னைப் போயழைத் தினிது புக்கார்
மின்னொத்த மணிப்பொன் தூவி விளங்கிய அரண்ம னைக்கே. (17)

---

## 3-வது திருமணப் படலம்.

---

பெருமக னன சுத்தோ தனனெனும் பெயரோன் தன்னோர்
திருமகன் செவ்வி யெல்லாந் தெரிந்தனன் தியக்கங் கொண்டான்
வருமவை தெரிந்து சொல்லு மதிவலார் தம்மை யாண்டோர்
குருமணி மன்றிற் கூட்டிக் கூறுத லானனன்றே, (1)

ஏலங்கொள் குழலி மாயை யிளவலை யீன்ற காலைக்
காலங்க ளறியும் ஞானங் கைவந்த வசித யோகி
ஞாலங்கள் பலவ ற்றுக்கும் நாதனு மிச்சே யன்றிச்
சீலங்கொள் துறவி யாகிச் சிறந்திடுமென்று ரன்றே. (2)

சொன்னவை யிரண்டிற்பின்னர்ச் சொன்னதாந் துறையைநோக்கித்
துன்னுவன் போலு மென்னத் துடிக்கின்ற தென்ற னெஞ்சம்
அன்னதை யவன்கொ ளாதிங் காசிய லேற்று மன்னர்
மன்னனு யில்லங் காக்க மாட்டுமோர் வழியா தென்ன. (3)

மந்திரி யொருவன் வேந்தே வயதொரு பதினெட் டாகும்
சுந்தர மைந்தர்க்கிந்நாள் சுகானு பவஞ் செய் காலம்
வந்ததாற் பருவந் தோறும் மகிழ்சிறந் திருப்ப வேண்டிக்
கந்தமார் மலர்சூழ் சோலை கட்டிடம் பலவும் வேண்டும். (4)

கோடைக்குங் குளிர்ந்து கூசுங் குறுந்துளி துளியா நிற்கும்
வாடைக்கும் வசந்தத் திற்கு மாளிகை வெவ்வே றாக
மேடைக்கு மேடை சேர்த்தி விரிமலர்ச் சோலை சூழ்வித்
தோடைக்குந் தடத்தி னுக்கு மோடுநீ ருய்த்தல் வேண்டும். (5)

ஏவல்கள் புரிவார் வேண்டும் எண்ணிய பொருள்க ளெல்லாம்
ஆவலி னளித்தல் வேண்டும் அருமையாந் தோழர் வேண்டும்
பூவலர் மாலை சாந்தம் புனைகுடன் புனைதல் வேண்டும்
பாவலர் பாவிற் கீதம் பரவிடப் பாடல் வேண்டும். (6)

கண்ணுக்குக் கண்ணாய் நேசங் காப்பவ ளாயும் பேச்சிற்
பண்ணுக்குஞ் சுவையளிக்கும் பான்மைய ளாயும் பார்த்த
பெண்ணுக்கு மாண்வி ருப்பம் பிறப்பிப்பான் பூமேல் வாழ்வாள்
மண்ணுக்கு ளுதித்தா ளென்ன வடிவெலாம் வாய்த்தா ளாயும்.(7)

ஆனதோர் யுவதி தன்னை யையனை மணப்பச் செய்தால்
மோனமு முதியோர்க் கான முதற்பெறு குணமு மான்ற
ஞானமும் நாம்வெ றுப்ப நயந்தவோ ரளியுமெல்லாம்
போனதோர் போக்கை யாரே புகலுவர் காண்பாரம்மா. (8)

பூவைக்குங் குழலார் பக்கம் பொருந்தினல் வேத நாளும்
நாவைக்கும் பழக்க மின்றும் நற்றவ யோக மின்றும்
தேவைக்கு முளத்தில் மின்னார்ச் சிறைவைப்பர் மண்ணுற் செய்த
பாவைக்கும் படப டப்புப் படருமேற் பகர்வ தென்னே. (9)

எம்மக மிதுகா ணென்ன விறைவனு மற்று முள்ளோர்
தம்மக மொத்தல் கண்டான் சாற்றிய முறையே பொன்னாற்
செம்மக மணியால் வெள்ளைச் செழுமணிக் குலத்தால் மாடம்
மும்மக மேரு வென்ன முறையுறப் புனைவித் திட்டான். (10)

வேலையாற் சிறந்த மாட மாளிகை மேலுங் கீழும்
மாலையாற் கொடிகள் தம்மால் வன்னத்தா லழகு செய்தான்
சோலையாற் சூழு வித்தான் துணையொடு களித்து லாவி
லீலையாற் பொழுது போக்கு மிடங்களுந் தடமுஞ் செய்தான். (11)

கொடிவழி வானக் கங்கை குருமலர் முல்லைப் போதின்
வடிவழி வழிந்தங் கோடு வாயெலா மரைகள் பூத்த
படிவழி யன்னந் தாவப் பன்னிறப் பறவை பாடக்
கடிவழி யளிகள் சுற்றக் கான்மயி லாடுமாங்கே. (12)

நந்தன வனத்தாற் சூழ்ந்த நாண்மலர்ச் சோலை தன்னால்
வந்ததா மிருட்டை யெல்லாம் வாள்கிளர் மணியும் பொன்னும்
சிந்திட வகற்றி நாளுஞ் செழும்பகல் விளைத்த லாலே
இந்திர னிருக்கை யென்ன இருந்தன வெழின்மா டங்கள். (13)

தராபதி யொருநன் னாளில் தனயனை யழைத்தங் கெய்தி
இராவொடு பகலு மிந்த விடத்திலே யிருந்துவேண்டும்
பராவிய வாட லெல்லாம் பாங்கரிற் புரிக வென்றான்
சராசரத் தளிபூத்தானுந் தாதைசொற் றலைமேற்கொண்டான். (14)

உன்னத மாடங் கண்டு மோடுநீர்த் தடங்கள் பார்த்தும்
மன்னலர்ச் சோலை போயு மனமிகக் களித்தா னேனும்
முன்னர்த்தான் கண்ணுற் கண்ட முதுதொழி லாளர் பாடு
தன்னகம் வரும்போ தெல்லாந் தம்பித்தங் கோர்பானிற்பான். (15)

ஆடுவா னந்த வேளை யருமையாஞ் சீவர்க் குற்ற
பாடுதா னினைப்பா னந்தப் பாட்டினைப் போக்கு மார்க்கந்
தேடுவான் தேடித் தேடி யொருதுறை தெளிதல் செய்வான்
கூடுவா னிட்டை யூணு முறக்கமுங் குறித்தல் செய்யான். (16)

பாங்கின ரழைப்பச் செல்வான் அவருடன் பருகல் செய்வான்
தீங்கிவை நீங்கி யந்தச் சீவரா சிகளெஞ் ஞான்றும்
ஒங்கிய கருணை யென்னு முவாக்கடன் மூழ்கி யின்பத்
தாங்கியல் கால மொன்றிங் கணுகுமோ வென்னச் சோரும். (17)

அருண்மணத் தவனீ தாக அற்றைநா ளவனுக் கப்பன்
திருமண முடிப்ப வெண்ணித் திருமக ளனையார் பல்லோர்
வருமுறை யழைத்தல் செய்தான் வந்தவர் தம்மு ளேற்ற
ஒருமகள் குறிக்க வென்ன வோதினன் குமா னுக்கே. (18)

தந்தைசொன் மந்தி ரத்தின் தலைக்கொளு மைய னாங்கே
இந்திரை யழகு வாய்த்த யசோதரை யென்னும் பெண்ணைச்
சிந்தையிற் கொண்ட தாகத் தெரிதலு மணத்து வேண்டும்
அந்தமில் பொருள்களெல்லாம் அவ்வுழித் தொகுத்தல்செய்தான்()

விரிமலர்ப் பந்த ரிட்டான் வேண்டினர் தமைய ழைத்தான்
அரியபல் பொருளு மற்று மாதுலர்க் களித்தல் செய்தான்
பெரியவர் பலரும் வாழ்த்தப் பேரிகை முழங்க வையன்
எரிகரி யாகச் சூழ்ந்து யசோதரை மலர்க்கை கொண்டான். (20)

பொன்மக ளனையா ளோடு புரவல னீன்ற காளை
மின்மணி யிரத மூர்ந்து வீதிவா யுலவல் செய்து
தென்மலைப் பொதும்பர் போந்த தென்றலங் கொழுந்து பாயு
மன்மத விலாச மென்னு மாடமேற் கொலுவி ருந்தான். (21)

பாட்டியல் தெரிந்த கான பண்டிதர் பலரும் பாட
நீட்டிய நரம்பு பைந்தோல் நிரைதுளைக் கருவி யார்ப்ப
ஊட்டிய வலத்த கச்சீ ரொண்பதம் பெயர்த்து மின்னார்
நாட்டியம் நடிப்பக் கண்டு நயனங்கள் களித்தல் செய்தான். (22)

காத்திரஞ் சந்த னாதி கலம்பல வற்றி னுக்கும்
சோத்திரம் வீணை யாதி சுருதிசேர் பாட்டி னுக்கும்
நேத்திர மாடு கின்ற நேரிழை மடவா ருக்கும்
நாத்திற மறுசு வைக்கும் நராதிபன் குமா னீந்தான். (23)

கலையிலே சிறந்த சிவ காருண்ய மென்னு மேரு
மலையிலே நின்று சிந்தை மயங்கிடா வன்மை யோனும்
சிலையிலே சிறந்த தான திருநுதலசோத ரைப்பெண்
வலையிலே சிக்கு வானேல் மற்றெவ ருய்தல் பெற்றார். (24)

நேயரைப் பிரிந்திட் டாலும் நிருபனைப் போற்றல் செய்த
தாயரைப் பிரிந்திட் டாலும் தனக்குயர் கல்வி தந்த
தூயரைப் பிரிந்திட் டாலும் தொடுகட லுலகங் காப்பான்
சேயரைக் கணமுங் கொண்ட செல்வியைப் பிரிதல் செய்யான்.(25)

மண்டுயிர்த் தொகைம றந்தான் மற்றவை கலாம றந்தான்
உண்டொன்றை யொன்று வாழுங் கொடுமையு முளம றந்தான்
கண்டொன்று செய்யக் கொண்ட கருத்தினை மறந்தான் கொண்ட
வண்டொன்று விழிமேல் வைத்த வாஞ்சையை மறந்தி டாதான் 26

இத்தகை யேந்தல் மைந்தன் யசோதரை யிடத்துக் காதல்
வைத்தனன் முயக்க மென்னும் வாரிதி மூழ்க லானான்
புத்திரன் செயலைக் கேட்ட புரவலன் களித்து மீண்டும்
அத்துறை யவன்பே ராதங் கமர்தர வின்ன செய்தான். (27)

பணிபுரி வார்கள் தம்மைப் பாங்கரி லழைத்து யாரும்
பிணியினர் தம்மைச் செத்த பிணத்தினை இடும்பை தன்னைத்
தணிவரு மிலம்பாட் டாலே தளர்ந்தவர் கதையை யென்றும்
எணியெது மறந்தே யேனு மியம்புதல் கூடா வென்றும். (28)

நடிப்பவ ரேனுந் தாள நயப்பவ ரேனுங் கீதம்
படிப்பவ ரேனும் வேலை பார்ப்பவ ரேனுஞ் சற்று
மடிப்பவ ராகிச் சோகம் வதனத்திற் காட்டு வாரேல்
முடிப்பல்யா னவரை யன்றே மொழிந்தன னென்றுங் கூறி. (29)

வேர்ப்புழு வறுப்ப வீழும் விருக்கத்தைக் கொடியைப் பாலா
நீர்ப்பசை யற்று திர்ந்த இலையினை மலரை நேரிற்
பார்ப்பவ ருவ ருக்கும் பதார்த்தங் கடம்மை யெல்லாந்
தூர்ப்பவ ரப்பப் போழ்து சுத்தஞ்செய் திடுதல் வேண்டும் (30)

யாவரா னுமிந்த இடத்தினை விட்டு நீங்கிப்
போவது கூடா தென்னப் பொருந்தவாக் கினைகள் செய்தான்
ஈவகை செய்தால் மைந்தன் இல்லறத் தாழ்ந்து நாடு
காவலுஞ் செய்வா னென்னக் கருதினன் வருவ தோரான். (31)

கற்றின்பங் கண்ட பிள்ளை காசினிக் கரச னாகப்
பெற்றின்பந் துய்க்க வேணடிப் பெருமக னினைய செய்தான்
சிற்றின்பந் துய்த்தி ருக்குஞ் செம்மலு மிவ்வின் பம்போன்
மற்றின்ப மில்லை யென்ன மாழ்கினன் சிறிது காலம். (32)

## 4-வது சித்தார்த்தர் கனவுகாண் படலம்.

மதனனும் ரதியும் போல வள்ளலும் வனிதை தானும்
இதனுற மருவி வாழ்நாள் யசோதரை கருப்பங் கொண்டாள்
உதரமும் பருத்தாள் திங்கள் ஒன்பதோ டொன்றுஞ் செல்லச்
சுதனையும் பயந்தாள் புக்க தொல்குலம் விளங்கு மாறே. (1)

பாலகன் பிறந்தா னென்னும் பரமகல் யாணச் செய்தி
சேலகல் விழியார் பாடச் சித்தார்த்த னினிது கேட்டுச்
சாலகம கிழ்ந்தா னந்தத் தையலா ருள்ள வாவின்
மேலகல் தானை யோடு விவிதமாங் கலனு மீந்தான். (2)

காரனை காத்துச் சுத்தோ தனனுமக் காலந் தன்னில்
சீரனை மடவார் சுற்றஞ் சிநேகிதர் தெளிய மைச்சர்
மாரனை வோர்கள் வேதம் வல்லுநர் பலரோ டெய்திப்
பேரனைப் பார்த்துப் பார்த்துப் பெருங்களிக் கடலுளாழ்ந்தான். (3)

இப்படி நடக்கும் நாளில் யசோதரை யடுத்தி ருப்ப
ஒப்பனை கடந்தா ளோர்நா ளுறங்கிஞ னுறங்கும் போழ்தில்
இப்படித் துயரம் நீக்க வெண்ணியு மிருந்தே னென்று
சொப்பன நிலையிற் கூறிச் சோர்வுறு முகத்த னுனன். (4)

ஆங்கது கண்ட நங்கை ஐயனை யெழுப்பி யன்ப
தீங்கெது முற்ற தேகொல் செப்புக வென லுஞ்செல்வன்
தாங்கிய சோர்வு நீக்கிப் புன்னகை ததும்ப நின்ற
பாங்கியைப் பார்த்து வீணை தடவுக பாங்க ரென்றான். (5)

என்னவே பண்டோர் நாளிற் பரவிய கனவு தன்னில்
தன்னிகர் தேவர் பல்லோர் சார்ந்தனர் வீணை மீட்ட
அன்னதன் பொருளிக் காலத் தையன்ற னகத்தில் வந்து
துன்னிய ததுயா தென்னச் சொல்லுது முறையின் மாதோ. (6)

கொண்ட லாய்த் தென்ற லாகிக் கோடையாய் வாடை யாகிச்
சண்டமா ருதமாய் மாரித் தாரைகூர் புசலாய்ச் சுற்றி
எண்டிசை முட்டி யோயும் வாயுவி னியக்க மன்றோ
மண்டலத் துதித்த சீவ வர்க்கத்தின் வாழ்க்கை தானே. (7)

எவ்விட மிருந்து யாமிங் கெய்தின மிருந்தோம் நீவிர்
எவ்விடத் திருந்து வந்திங் கென்செய்வா னுயிர்வாழ் கின்றீர்
செவ்வியோன் றறியீர் போலுந் தீயவிவ் வுலகம் போன்ற
வெவ்விய வுலகி னின்றே மேவினஞ் சுகங்காண் கில்லோம். (8)

உண்மையோ வுலக வின்பம் உறுதியோ காத லென்ன
திண்மையோ தீமை யன்றோ செகத்துறு விடய மெல்லாம்
எண்மைய தாகி வாயு வியக்கம்போல் திரிந்து வீணை
நுண்மைய விசைபோற் றேய்ந்து போமென நுவலு மன்றோ. (9)

தொழுதகு குரிசில் யாங்கள் தொன்மைசே ருலகஞ் சூழ
எழுவதால் துன்ப மெல்லா மிசைவழி யறிக்கை செய்தோம்
குழுவுறு புவியிற் சீவ கோடிக ளனைத்து மந்தோ
அழுதகண் பிசைந்த கையோ டயர்தலே யாரே காண்பார். (10)

கண்டயாங் களித்தல் செய்யோ மாயினுங் கணங்கொள் சீவர்
கொண்டபே தமையை நோக்கிக் குறுநகை புரிவோ மெல்லாம்
அண்டிய நிழல்போற் பொய்யா யழியுமென் றறிவா ராயின்
மண்டிய வுலக வின்ப மானதை மதிப்பா ரேயோ. (11)

சரித்துக்கொண் டிருப்ப தான சதாகதி வார்த்தை யாங்கள்
தெரித்துக் கொண்டு ரைப்ப தென்னே சிந்தனை யமைதி யாக
எரித்துக்கொண் டிருக்குந் துன்ப மீடற வின்றே யில்லம்
பிரித்துக்கொண் டோடிச் செல்க பெருவழி கடுக மன்னே (12)

தினம்பல வின்ன செல்ல வோர்தினம் சேயன் றேற்குக்
கனங்குழை யொருத்தி செய்ய கதிரவ னத்த மித்தல்
சனம்பல நோக்க லான தடநகர் மாய பாவோ
டினம்பெறச் சுட்டிச் சேரக் காதையொன் றிசைத்தல் செய்தாள்.

## 5-வது நகரத்துன்பறி படலம்.

முறையுறக் காதை கேட்க முன்னர்த் தான் கற்றதான
நிறைபெறு தேயமெல்லா நினைவினில் வரலும் வாழும்
சிறையினை நீங்கி மற்றத் திருநகர்காண்பான் பெற்ற
இறையினை வேண்ட நாளை யேகுதி யென்ற வேந்தன். (1)

நஞ்சுதன் நாளை யிந்த நகர்வலம் வருவான் போழ்தில்
பஞ்சைக ளான வேழை படுபெரு நோயர் அங்கம்
எஞ்சினர் துஞ்சி னோர்மற் றிவரெலா மறைப்பீ ரென்னக்
கஞ்சுக மெய்யி னின்ற காவலர்க் காஞ்ஞை யிட்டான் (2)

கொற்றநங் குமரன் வீதி குலவும்போழ் தெதிரே சென்றங்
குற்றன ராகி யாரும் உபசார மியற்ற வேண்டும்
சுற்றுமே கலையார் யாரும் சோபனம் பாடல் வேண்டும்
சொற்றன மென்றான் றன்னைச் சூழ்தரு பணியி னோர்க்கே. (3)

அழுந்திய சீவர் தம்மை யணிபெறக் காட்டு வான்போல்
விழுந்தவன் மீண்டு செங்கேழ் விளங்கிய விரல்க ளென்னுங்
கொழுந்தினைக் கதிரோ னீட்டிக் குணதிசை யெழவே யையன்
எழுந்தன னினிது சன்ன னென்பவ னிரத மூர்ந்தான். (4)

தேர்புகும் வீதி யெல்லாஞ் செம்மையுற் றிருக்கக் கண்டான்
நார்புகு முளத்தி னின்பம நயந்தவ ராகி யாரும்
நேர்புகுந் துபச ரிப்ப நிருபனோர் குமர னிந்தப்
பார்புகுந் தவரில் துன்பம் பார்த்தவ ருளரோ வென்றான். (5)

மன்னவர் வாழ்க்கை போலு மன்னுயிர் வாழ்க்கை யென்பான்
இன்னவர் இன்பின்மூழ்கி இங்ஙனம் வாழ்தல் காண
என்னதான் தவங்கள் செய்தேன் யானென்பான் இவரையெல்லாம்
நன்னய முறப்பு ரக்கும் நாதனே நாத னென்பான். (6)

இலகுநம் வரநகை யாலே ஈண்டிவர் களித்தா ரில்லை
சுலபம தன்று வின்பந் துலக்கிய மனத்த ராதல்
பலபல வின்னுங் காணப் பரபரப் படைகின் றேன்யான்
வலவநீ வையந் தன்னை மற்றுமே லுய்க்க வென்றான். (7)

திரும்பிய விடங்க டோறுஞ் செயசெய வென்றி யாரும்
விரும்பிய வளியா லன்பால் விளங்கிய சந்தோ டத்தால்
அரும்பிய புளகம் போர்ப்ப ஆர்ப்பரித் திடுத லானார்
சுரும்பிமிர் மாலை யானுஞ் சுகமதே யுலக மென்றான். (8)

அளிபெறுக் கரங்க ளில்லை அலர்பெறு முகங்க ளில்லை
களிபெறு நெஞ்ச மில்லை கலனிலாக் கழுத்து மில்லை.
ஒளிபெறு மாட மில்லை ஒழுங்கிலா மறுகு மில்லை
தளிபெறுச் சதுக்க மில்லை தடநக ரெவணு மன்றே. (9)

பதியினைச் சுகமேகண்டா னாயினும் பாழ தான
விதியினை யெவரே வெல்வார் வேறதுங் காண லானான்
கதியிலா னொருவன் மூத்துக் களைத்துளான் கண்ணீ ரான
நதியினால் நனைவான் பால்போ னரைதிரைவிழுங்கப் பட்டான்(10)

கொழுப்போடு தசையும் வற்றக் கூனினான் குறுகி யேணிப்
பழுப்பென வெண்ணி யாரும் பார்த்திடு மென்பின் மெய்யான்
இழுப்பெனும் நோயா லோயா திருமலான் மார்பி லோர்கை
தழுப்புற நீவல் செய்வான் தளர்தரு நடையிற் சார்வான். (11)

பல்லெலா மிழந்து பாம்பின் பாங்கெனும் வாய்மே லீகள்
ஒல்லெனச் சுழலத் தண்டொன் றூன்றியே குடிசை நீங்கி
மெல்லெனத் தவிழ்ந்தோ டொன்றை மேயினன் செல்ல அப்பாற்
செல்லெனச் சிலர்மு னிந்தார் சித்தார்த்த னவனைக் கண்டே(12)

சன்னவிவ் வுருவம் யாது மானிடன் தானோ கூனிச்
சென்னியுங் கவிழ்ந்து பார்ப்பார் திடுக்கிட நிற்கின் றானே
என்னிவ னுற்ற தென்னோ யிளைத்தது முணவில் லானோ
பன்னென அவனு மின்ன பகருத லாயி னானால். (13)

வள்ளலே யிவனு மீண்டோர் மனிதனே யன்றி யில்லை
வெள்ளென நரைத்து மூத்து வில்லென வளைந்து போனான்
தெள்ளரு மெவ்வ னத்திற் சித்தச னுருக்கொண் டன்ன
எள்ளரு மழக னாகி யேறென வுலவல் செய்தான். (14)

எண்ணெய்போய்த் திரியு மற்றங் கெரிசுட ரமருங் காலம்
அண்ணலே யடுத்த தாலே அகத்தினும் புறத்தி டத்தும்
நண்ணுமிந் திபங்க ளெல்லா நலிந்தனன் மூத்து விட்டால்
கண்ணினாற் காண லாமோ கடிதவர் படும்பா டெல்லாம். (15)

குலமக னிந்த மூப்புக் குறுகுமோ எவர்க்கு மென்றான்
வலவனு மிவன தாண்டிங் கிருந்திடில் வருமே யென்றான்
தலமிசை யெனக்கு மற்றை யசோதரை தனக்கு மிங்ங
னலமரு பருவ மென்னே அடுக்குமோ வென்னப் பாகன். (16)

எண்பதின் வயதின் மீவி ரிருவர்க்கும் விருத்த வெந்நோய்
புண்பொதி யாக்கை மூடிப் போவது திண்ண மென்றான்
பண்பிது தெரிந்த நம்பி பார்த்தது போதும் போதும்
நண்பனே வலவா தேரை நடத்துநம் மிடத்துக் கென்றான். (17)

பார்த்திடா ததனைக் கண்ணாற் பார்த்தபி னுளத்திற் றுக்கங்
கூர்த்தது நமக்கோ ரின்பங் கொடுப்பதிங் கில்லை யென்றே
பார்த்திப னிளவல் துஞ்சான் பலபல நினைவ தானான்
போர்த்திடு மிருளுஞ் செல்லப் பொழுதுமே லெழுந்த தன்றே. (18)

## வேறு

சேணிலையிற் கதிரோங்கச் சித்தார்த்தன் சூதனிவர்
வாணிகனா வுருமாறி மாநகரங் காடிபுக்கார்
காணிமுதல் கோடிவரைக் கைப்பொருளாற் கடன்பொருளாற்
பேணினர்கள் பலசரக்கும் பெறுவாரைக் கண்ணுற்றார். (19)

நிறைகூறிக் குறையளந்து நிணமலிகை யவருடனே
குறைவிலையில் நிறையளக்குங் கோடீசர் தமைக்கண்டார்
இறைவாசி வரமாற்று மிருநிதியார் தமைக்கண்டார்
மறைகூறி வஞ்சனையால் வளமிழந்தார் தமைக்கண்டார். (20)

கணக்கெழுதிப் பிழைப்பாரைக் கடுவாசி வட்டியினுற்
பிணக்கெழுந்து வெறுப்பாரை பெயர்த்தவரை மனம்பொருந்த
இணக்கமுறப் புரிவாரை யேந்தியகை வாங்காது
வணக்கமுட னிரப்பாரை மறுப்பாரை யவர்கண்டார். (21)

மண்டையிலே பெரும்பாரம் வகிப்பாரை நடப்பாரைத்
தொண்டையிலே புண்ணுட விலைகூறிச் சுழல்வாரை
கொண்டையிலே யானேற்றை நுகத்தடியிற் பெறப்பூட்டி
அண்டையிலே நின்றிரங்கா தடிப்பாரை யவர்கண்டார். (22)

பாடிக்கை யேந்துநரைப் பறையடித்தங் கிரக்குநரை
வாடிக்கை முதலிழந்து மயங்குநரை வாசமலர்
சூடிக்கை நேர்மொழியார் தொடர்ந்துவர அங்காடி
வேடிக்கை பார்க்குநரை வீதிவழி யவர்கண்டார். (23)

மருக்கோல மிடுவாரை மணமுடித்துப் பல்லக்கில்
தெருக்கோலம் போவாரைத் தீவினையாற் பதியிழந்தங்
குருக்கோல மாறியரு றுவாரைப் பேய்பிடித்துப்
பெருக்கோல மிட்டலறிப் பிதற்றுநரை யவர்கண்டார். (24)

போவார்க ளுடன்போனுர் பொசிப்பார்க ளுடன்புசித்தார்
மூவாத வீதியொடு முடுக்கரெலாஞ் சூழ்ந்தவர்கள்
காவாரு நகர்கடந்து கடிமதிலி னிலைதாண்டி
ஓவாது நீரொழுகு மோர்நதியின் கரைசார்ந்தார். (25)

அக்கரையில் யாருமிலான் அறமூத்தான் வலிப்பெனும்நோய்
மிக்கதினுல் எழல்செய்யான் மிகவிளைத்தா னிவர்தம்மைத்
தக்கவரே காமினெனச் சாற்றவிவர் சாராமுன்
இக்கடுநேர்ப் மீண்டவனை யிழுத்திழுத்து வலித்ததுவே. (26)

கண்மயங்க வாய்புலப்ப கடைவாயி னுரைகவிழ
மண்மயங்க வுடல்புரளு மற்றவன்ற னிலைகாணு
உண்மயங்கு மளிசெலுத்த வோடோடி யடுத்தையன்
தண்மயங்கு கரதலத்தால் தகையோடு தானெடுத்தே. (27)

இழையாடை மடியிருத்தி யன்பனே யென்னேவு
விழைவாவ தென்னையென விடையேது மெய்திலனால்
உழைநின்ற வாகுவனை யுரைத்தியென ஆங்கவனும்
மழையன்ன கருணையினான் முகநோக்கி வணக்கமுடன். (28)

தொத்திவரு நோயிதுகாண் தொத்துவிடிற் சுழல்வளிபோல்
எத்திரத்து மனிதரையு மிதுசுழற்றி யிறுதியிலே
செத்திடவுஞ் செய்துவிடுந் தேவரீரிங்கிவனை
நத்திமடி யிருத்திடலும் நலனன்று விடுக்கவென்றான். (29)

என்னவே யிக்கடுநோ யெல்லார்க்கு மெய்துவதோ
பன்னவென வாகுவனும் பாரிடத்திற் குட்டமென்றும்
சன்னிவலி வாதமென்றும் தலைநோவு சயமென்றும்
இன்னபல வியாதியினா லின்னலுறு ரிலையிவைகள். (30)

புதரிருந்து பாய்புலியிற் புற்றிருந்து கடியரவிற்
கதுமெனவே பற்றுதலாற் காப்பரிதா லெவர்கட்கும்
இதுபுவியிற் றப்பார்கள் யாவருமே யிறப்பார்கள்
அதிவிதமா மரணமதை யாரளப்பா ரெனச்சொன்னான். (31)

பாகவோ என்னைஎன்னை யாமெல்லாம் பாரிடத்திற்
சாகவோ விருக்கின்றோம் சாவென்ப தென்னையெனச்
சோகமோ டிறந்தானைச் சுமந்துசில ரவ்வழியே
போகவே யதைச்சுட்டி வாகுவனும் புகல்கிற்பான். (32)

பாடையிது பிணமிதுகாண் பாங்கருளார் பந்துக்கள்
ஆடெரியை மூட்டுவிக்க வடுக்கிட்ட காட்டமிது
கூடிதனின் மேலிட்டார் கொழுந்தழலை யூட்டிவிட்டார்
நீடுடலம் நீறாகி நிலனோடு கலந்ததுவே. (33)

வையகத்தைப் புரப்பாரும் வகையின்றி யிரப்பாரும்
வெய்யவினை முடிவுறுங்கால் வீவார்கள் எரிவார்கள்
துய்யபொடி யாவரின்னத் தோன்றுதலு மழிதலுமாய்
ஐயைய சீவர்படும் பாட்டினையா ரறைகிற்பார். (34)

இன்பமெலாந் துன்பத்தும் யௌவனமோ விருத்தத்தும்
அன்புடைமை பிரிவிடத்து மாருயிரோ சாவிடத்துந்
துன்புடைய மரணமினித் தோற்றத்தும் முடிவனவே
என்புகல்வே னிவையென்னை யேமாற்றி விட்டனவே. (35)

தூக்கினுல் தொல்லுலகில் தொலையாத வுயிரனைத்தும்
ஆக்கினுன் கருணையினு லாங்கதனைக் காவாமே
போக்கினு னுயிடினே புகலென்னை யானவனை
வாக்கினுற் கடவுளென மறந்தேனும் வகுப்பேனே. (36)

பொருந்திடயான் கண்டவெலாம் போதுவதே போதுமெனத்
திருந்தியகோல் வலவனொடு திருவீதி பலகடந்து
மருந்தனைய குணத்தவனும் மாமதிபோன் முகத்தினிய
விருந்தனையாள்ய சோதரைவாழ் மேன்மாடத்தலத்தமர்ந்தான் (37)

---

## 6-வது யசோதரை கனவுகாண் படலம்.

தளிரெலாங் குழைந்து மின்னத் தலையரும் பவிழச் சூழும்
அளியெலாம் சுருதிகூட்ட வரியகோகிலங்கள் பச்சைக்
கிளியெலாங் கீதம் பாடக் கேகய மாடத் தென்றல்
வளியெலா மூடுலாவ வந்தது வசந்த காலம். (1)

மலையெலாஞ் சுத்தவெள்ளி மலையென மயங்கக் கார்கொள்
அலையெலா மாவின் பாலி னலையெனக் கருதப்பூமி
நிலையெலா மமுதச் சேற்றி னிறைந்ததி னினைக்கவெண்ணெண்
கலையெலா நிறைந்த தான கலாநிதி யுதையஞ் செய்தான். (2)

பாண்மக னினிதுபாடப் பறிந்தபூ வமளி மீது
நாண்மலர்க் கிழத்தி யன்ன நாயகி யசோத ரைப்பெண்
கேண்மையி னணைத்துத் தூங்கக் கிளரளிக் கொருவ னுன
வெண்மகன் றுயிற லானுன் வேயது மூன்றுஞ் சாமம். (3)

ஏவலி னிழைப்பார் பாங்கர் இன்னிசை வளர்ப்பார் வாயிற்
காவலி னிற்பார்கன்னற் கடிமணி யடிப்பார் யாரும்
சாவதிற் றுஞ்சி ஞரத் தருணத்தில் யசோதரைப் பொன்
கூவெனக் குழறக் கேட்டான் கொண்டவ னென்னை யென்ன. (4)

கனவு யான் மூன்று கண்டேன் முதலது காளை யொன்றித்
தனிநகர் விரைய வஃதைத் தளைசெய்மின் செய்யா விட்டால்
இனியிந்த நகரம் பாழா மெனுமசரீரி கேட்டேன்
தனிமையா னந்தவேற்றைத் தழுவினன் பிணிக்குங் காலை (5)

துள்ளியே பாய்ந்த ஏறு துகளொடு துகளா யென்னைத்
தள்ளிய துடனே சூழ்ந்த தறுகண ரெவரும் வீழ்ந்தார்
வெள்ளிமா மலைபோற்சூழ்ந்த விரிமதிற் கதவ மெல்லாந்
தெள்ளிய பொடிய தாக்கிச்சென்றதா லின்னுங் கேளீர். (6)

வடிவினுற் சிறந்த நால்வர் வானவர் பலருஞ் சூழக்
கடிகொளிம் மனையை நோக்கிக் கடுகலுங் கடைவாய் நின்ற
கொடியது விழவே வேறு கொடியொன்றங் கெழுந்த தக்கால்
நெடிமலர் மாரி வானின் நெறிவழி பொழியப் பெற்றேன். (7)

மற்றதுங் கேளீ ரிந்த மலரணை மீதி லும்மைப்
பெற்றில னரையிற் கச்சை பேரரவாய தன்றே
முற்றெளி பரப்பு மென்றன் அணியெலா முரியப் பெற்றேன்.
அற்றையப் பொழுது மற்றை யேறது மவணடுத்தே. (8)

இடிக்குர லெழுப்பிற் றாதை யிடுங்கொடி யசைத்த தப்பால்
அடுத்தது காலங் கால மடுத்ததிங் ககல வென்றே
தொடுத்திடு சத்த மொன்று தொனித்ததிங் காய வென்னை
விடுத்திடு வீரோ யானே வீய்ந்திடு வேனோ தேறேன். (9)

சொப்பனந் தீமை யேனுஞ் சூழ்வினை தருவ தெல்லாந்
தப்புவ தல்ல நங்காய் தரணிவா ழுயிர்கட் கெல்லாம்
உப்பருங்கருணை கொண்டேன் உன்றனை வொழிப்பேன் கொல்லோ
ஒப்பருமன்பேவுன்னை யொழித்துளம் பொறுக்கேனென்றான். (10)

---

## 7-வது பிரிவுறு படலம்.

அஞ்சற்க துஞ்சவென்ன வாங்கவளயர்ந்துபோனுள்
நெஞ்சொத்த கருணை யானும் நேரிழை வதன நோக்கி
மஞ்சொத்த கூந்த லாய்நின் வாக்கினல் விடையும்பெற்றேன்
நஞ்சொத்த வரசவாழ்வை நழுவநான் விடுகின்றேனே. (1)

பொருதலை யொழித்தேன்வென்றி புனைதலை விடுத்தேன் சீர்த்தி
வருதலை மதியே னிந்த் மறுகெலா மிரப்ப ஈவார்
தருதலைப் புசிப்பேன் தாழ்ந்த வுடையினை யுடுத்து நாளும்
இருதலை யுலகந் தன்னி லேழையர்க் கேழை யாவேன். (2)

சோதர ரான மக்கள் தொழுகின்ற தெய்வத் தாலே
வேதனை நீங்க வில்லை விரதமே விரும்பிக் காத்துஞ்
சோதரி களானபெண்கள் சூதக வயாவோ டின்ன
வேதனை நீங்க வில்லை வீணன்றே யிவர்தம் வேலை. (3)

குளிரினல் வருந்தா வண்ணங் கொதியனல் முன்கண் டான்போல்
தெளிவிலா வுலக மெல்லாந் தேர்ந்தவோ ரின்பம் நண்ண
அளியனேன் முயல்வே னொரு மசைவின்றி முயன்றால் யாதும்
எளியதே யாகு மென்ன வியம்புவர் மேலோ ரன்றே. (5)

வாடியே மடிய னாகி வையகச் சுமைய னாகிப்
பேடிபோலுழன்று செத்த பிணமெனக் கிடப்போன் யானோ
ஓடியே யுலக மெல்லா முசாவுவே னுழைப்பே னுள்ளம்
நாடியே யிருப்ப தொன்றை நானினிப் பெறுது மீளேன். (5)

எட்டினு லுன்னி யுன்னி யெட்டாத பொருளு மில்லை
வெட்டினுற் பயன்கொ டாத விழல்நில மெவனு மில்லை
தட்டினுற் றிறவா தான கதவில்லை தன்னேரற்றன்
மட்டினு லுழைத்த பேர்க்கு வாராத பொருளு முண்டோ. (6)

கருவழி யுதித்த வெல்லாங் கணக்கற வருந்தல் கண்டேன்
பெருவழி யினியான் செல்வேன் பேரின்ப நெறியாமொன்று
வருவழி தெரிந்தா லன்றி வந்திடே னுலகில் யார்க்கும்
ஒருவழி யில்லா விட்டா லொருவழி திறக்கு மன்றோ. (7)

நன்னெறி காண்பே னாயின் நாட்டுக்கும் நகரத் துக்கும்
என்னொரு காத லான யசோதரை தனக்கு மற்றென்
அன்னைக்கு மப்ப னுக்கு மகிலமு நிறைந்த தான
மன்னுயிர் தமக்கும் யானோர் வண்மைகூர் அரசு மாவேன். (8)

போந்தன னின்னே நீங்கிப் போந்தன னென்று கூறி
நேர்ந்தன னெழுந்தான் மீண்டு நேரிழை முகத்தை நோக்கி
ஏந்தெழில் நங்காய் நீயிங் கிருக்கவென் றிசைத்து மெல்லப்
பூந்தளி ரமளி சூழ்ந்து புறத்தினிற் காலை வைத்தான். (9)

எரிகொண்ட வில்ல நீங்கி விரைவுட னெழுவார் போல
கிரிகொண்ட மாட நீங்கிக் கீழொடு மேலு மெல்லாம்
விரிகொண்ட நில்வில் யாரும் விழித்திடா வண்ணஞ் சென்று
பரிகொண்டு வருக வென்னப் பாகனும் வணங்கி நின்று. (10)

சராசனத் தடக்கை வேந்தர் தனயகே ளெவரும் நாடா
இராவினிற் போந்த தென்னை என்னலு முயிர்கட் கெல்லாம்
அராவிய துயரம் நீங்கி அமைதியு மின்பு மெய்தப்
பராவிய மார்க்கங் காண்பான் படர்ந்தனன் போந்தேனென்றான்.()

வையமோர் குடையிற் போற்று மாண்பினை நீங்கிக் கையில்
ஐயமேற் றுண்டு வாழ அவாவினிர் போது மீன்ற
செய்யநல் லரசன் கொண்ட சேயிழை யிவர்கள் கேட்டு
நையவோ வெம்ம னோர்கள் நலியவோ நடந்தீர் சொன்மின்.(12)

விதமலி யுயிர்கட் கின்பம் விளைப்பவ னரச னாலல்
அதனையே யழியா தாக வாக்குவான் யானும் போந்தேன்
இதழணி குழலி யோடிங் கெந்தையு மயங்கு வாரேல்
மதியில ராவர் பின்னு லவரையு மகிழ்விப் பேன்யான். (13)

கணமெனுந் தாழ்த்தல் செய்யேன் கண்டகங் கொணர்தி யென்னத்
துணைவிழி யருவி சோரத் துரகதங் கொணர்ந்தான் பாகன்
குணநிதி யாயி னுனுங் குதித்ததின் மீதிற் றாவி
மணநகர் பின்னதாக மற்றை நாட்டி றுதி கண்டான். (14)

குவியிரு ளுலக நீங்கக் குணக்கெழு கதிரோன் போலப்
புவியிருண் முழுது நீங்கப் புறப்பட்ட வள்ள லாவான்
இவுளிநின் றிழிந்து பூண்ட எரிமணிக் கலன்க ழற்றிக்
கவிதரு மன்பிற் பாகன் கையினிற் கொடுத்து நண்பா. (15)

இக்கலன் கொடுபோ யெந்தைக் கீகுக பிரிவி னாலே
துக்கமுங் கொளா திருக்கச் சொல்லுக துயரம் நீக்க
மிக்கதோர் நெறியை நாடி மீள்வனே யிறைவன் யானே
இக்குவ லயத்துக் கெல்லா மேகென வவனு மீண்டான். (16)

---

## 8-வது உண்மையுசாவிய படலம்.

---

வரத்தினு லுதித்த முத்தர் வளஞ்செறி பிம்பி சாரன்
இரத்தின கிரியி லுள்ள குகையினி லிருந்து நாளும்
சிரத்தையி னளிப்பார் பிச்சை செங்கையால் வாங்கி யுண்டங்
குரத்தினே யுண்மை காணு மொரோவழிக் குப்த லானுர். (1)

கண்பெற நெறியைக் காண்பான் சமாதியிற் கலந்து விட்டால்
உண்பதை மறப்பார் வெய்யோ னுதித்துப்பின் அத்தமிக்கும்
பண்பதை நோக்கார் துஞ்சார் பற்பல விலங்கும் புள்ளும்
நண்பெர்டங் காடல் காணுர் நளிரொடு வெம்மை தேருர். (2)

சிற்சில பொழு தெழுந்து திரிகுவார் சிகரி யுச்சிப்
பொற்சிலை யொன்றி னின்று புறமெலாஞ் சூழப் பார்ப்பார்
எற்சிர சத்து நேரே யெழுதல் கண் டிறங்கிப் பாங்காம்
நற்சிறு குடிசில் தோறும் நடந்தனர் பிச்சை யேற்பார். (3)

கைக்கல னிறைய வுண்பார் காட்டினிற் படர்வா ரோர் நாள்
மைக்கரி மலியுஞ் சாரல் வழியெலா முணவே தின்றி
மெய்க்கருந் துயர நல்கி விவிதமாம் நிலேயி னின்று
உயக்கருந் தவங்கள்பூண்ட உறுவர்கள் சிலரைக் கண்டான். (4)

சரணென்றி னின்று மற்றைத் தாளினை யுயர்த்தி னுரைக்
கரந்தனை முகிழ்த்துச் சென்னி கதித்திட வுயர்த்தி னுரைச்
சிரநெறி கறையா னேறத் தியாகங்கள் செய்கின் றூரை
வரநினைந் துலைய ரக்கா மனநிலை யுருகு வாரை. (5)

நாற்புறந் தீயை மூட்டி நடுவணில் நிற்கின் றூரை
நோற்பினு லிந்தி யங்கள் நோவுறத் தசையி ழந்து
தோற்பைபோ லுள்ளீடி ன்றிச் சோர்ந்தனர் வீழு நேரம்
ஏற்பவ ரின்மை யாலே இறந்திட்டா ரிறப்பார் தம்மை. (6)

கலைபல விரிக்கின் றூரைக் கனலொடு கருகி னுரைச்
சிலையென நிற்கின் றூரைச் சித்திரம் புரிவிப் பாரைத்
தலைபுத ராயி னுரைத் தம்மையே மறந்திட் டாரை
இலையுண வாயி னுரை யிறைமக னடுத்துச் சென்றே. (7)

மூன்னமே துயரின் பூண்டாய் முதிர்ந்தயர் கின்ற மெய்க்குப்
பின்னேயுஞ் சொல்ல வொண்ணுப் பெருந்துய ரூட்டா நின்றீர்
என்னேயே யென்னேயே நீர் எண்ணிய வெண்ணங் கொண்ட
இன்னலி லின்புற்றூர் யார் என்றன •ரவருஞ் சொல்வார், (8)

கருத்தினல் வாழ்வு நீத்துக் கனல்பனி விவைக ளாலே
வருத்தினு லிவ்வு டம்பை மற்றைய வருத்தத் தாலே
பெருத்திடு மலங்க ளெல்லாம் பெரிதறத் துடைத்த சிவன்
பொருத்திடு முடிவிற் சொர்க்க போகமே யனுப விக்கும். (9)

காடுண்டேல் வீடுமுண்டே கனவிருட் கெல்லே யுண்டே
நாடுண்டேல் நகர முண்டே நனவுக்குங் கனவு முண்டே
தோடுண்டே லுள்ளீ டுண்டே சோர்வுற நோற்றி ளைத்த
பாடுண்டேல் சுவர்க்க போக பலனுண்டே யுண்டே யையா. (10)

கொடுந்தவர் மாற்றங் கேட்ட கோதமக் குமரர் நெஞ்சம்
நடுங்கிட வரிதிற் செய்த நற்றவப் பயன்க ளெல்லாம்
ஒடுங்கிடற் றுறக்க நீங்கி யுழலுதல் வேண்டு மன்றோ
அடுந்துயர் பிறப்புத் தோறு மந்தோநீ ராற்று விரோ. (11)

அழியுமே துறக்கம் வாழு மமாரு மழிவா ரன்றோ
அழிவதாந் துறக்க வின்பம் அவாவுவ தென்னை யேயோ
அழிவிலா வின்ப மொன்றை யடைந்திட நினையா தென்னோ
அழிகின்றீர் வீணே நும்மோராருயிர்க் கிடுக்கண் செய்வீர். (12)

நல்லராம் நீவி ருண்மை ஞானத்தை யடைவீ ராயின்
சில்லநா ளனுப விக்கு மின்பத்தைச் சிந்தை செய்து
மல்லதா முடலந் தன்னை மாய்ப்பிரோ விரக்க மென்ப
தில்லையே இல்லை இல்லை எள்ளள வேனும் நும்பால். (13)

தேகமாம் வீட்டில் வாழுஞ் சீவனை யிடைவ ருத்திப்
போகவே புரிவ தால்நீர் தற்கொலை புரிந்தீ ரென்ன
நோகரும் நோன்பி னுளர் நுவன்றது போது மின்னே
ஏகநீ ரேகவென்ன விறையவ ரப்பாற் சென்றார். (14)

நவமணித் தளிரே பூவே நல்லாதாங் கனியே நீவிர்
தவமது பூரியீ ரேனு மின்பமேற் றழைப்ப தானீர்
அவமதைத் தவம தென்ன வாருயிர்க் கஞர்வி ளைத்துச்
சவமதாய்ப் போவர் போலத் தற்கொலை புரியீ ரன்றோ. (15)

பறவைகாள் பன்னி றத்த பாண்பயி லளிகாள் நீவிர்
உறவுடன் களிப்பீர் கொண்ட வுடலினை வருத்தஞ் செய்யீர்
மறங்கொடு தம்மைத் தாமே வதைப்பவர் மனித ரேயோ
அறநெறி யறிவா ரேயோ அறிந்தவர் நீரே யன்றோ. (16)

எல்லையில் கருணைக் கெல்லா மிருப்பிட மாவா ரின்ன
சொல்லி யேயாங்க ணீங்கித் தொன்னகர் நெறியி னிற்ப
முல்லைவா ழிடையர் வெய்யோன் முனைந்துச்சி மேவு நேரம்
ஒல்லையி லாட்டு மந்தை யோட்டினர் வருதல் கண்டார். (17)

நோயினாற் குட்டி யொன்று நொண்டியே யினத்திற் பிந்த
தாயது நடுவ ணின்று தயங்கியே சுழல்வ தாக
சேயனு மதனை நோக்கிச் சிந்தைநீ வருந்தே லீன்ற
தூயதாங் குட்டி தன்னைச் சுமந்து யான் கொண்டுசெல் வேன்.(18)

எனப்பணித் தருளினாலே யெடுத்தனர் குட்டி தன்னை.
வனப்பமர் தோளிற்கொண்டு நடந்துமற் றவரை நோக்கி
தினப்படி மாலை யன்றோ திருப்புவீர் மந்தை யென்ன
இனப்பல விடைய ரையா எம்மிறை பிம்பி சாரன். (19)

எச்சமொன் றியற்று கின்றா னெங்களை மந்தை யோடே
இச்சணம் வருக வென்ன ஆக்கினை யிட்டா னென்ன
அச்சமு மருளு மில்லா வரசனைத் திருத்த வெண்ணி
மெச்சருங் குணத்தி னாதும் மேய்ப்பவருடன்செல் காலை. (20)

ஒருத்திதன் னுருக்க மான வொருமக னிறந்து போக
வருத்த மீக்கூரச் செத்த மகனைத் தோண மீதி லேந்தித்
தெருதொறுங் காண்பார்தம்மைச் செத்தவென் மகனுக் காவி
வருத்திநீர் தருமினென்ன மலர்க்கணீர் சொரியக் கூவி. (21)

மறுகினள் சதறிச் செல்வாள் இவரையும் வணங்கிச் சொல்லக்
குறுநகை யறியா மைக்குக் கொண்டருள் புனிதர் நோக்கிச்
சிறுகையால் கடுகு கொண்டு சேருக வென்பா லீயப்
பெறுமவர் வீடு சாவு பெற்றதா யிருத்தல் கூடா. (22)

பொள்ளெனப் போதி யென்னப் போந்தவள் வீடு தோறும்
விள்ளருங் கடுகீ வாரை வீய்ந்தவ ருளரோ வென்னத்
தள்ளையு மிறந்தாள் பெற்ற தாதைசோ தரனு மாய்ந்தார்
பிள்ளையு மிறந்தான் பேதாய் பித்தமோ போபோ வென்றார், (23)

மாதரா ளுண்மை கண்டாள் வள்ளலை வணங்கி யையா
சாதலே யுயிர்கட் கெல்லாஞ் சகசமென் றறிந்தே னென்றாள்
கோதமர் நங்காய் யிந்தக் கொடுந்துயர் பொதுவே யாகும்
ஆதலா லொருத்தி நீயோ வறிவிலி யாவா யம்மா. (24)

முன்புபோம் ஆட னைத்து முடிவுக்கே போதல் போலத்
தின்பவர் யாரு மென்றுஞ் செத்தவ ராவர் திண்ணம்
அன்பினு லிவரைக் காக்கு மாறின்னு மறிவேன் கொல்லோ
துன்பமேன் குழவி தன்னைத் தோண்டியே புதைக்கவென்றார் (25)

---

## 9-வது பூததயை விரித்த படலம்.

கனங்குழை போய பின்னர் கானெறி கடந்தங் காயர்
இனங்குழை யாட்டி னேடே யெழி னகர் புகுந்தார் கூட
மனங்குழை வாமர் தாங்கு மறியுடன் நடந்தார் நோக்கிப்
பொனங்குழை மடவா ரோடு புமான்களு மினைய சொல்வார். (1)

யாவரே யிவர்தந் தோற்ற மகிலத்தி லெவர்க்குண் டென்பார்
தேவரே யென்னிற் றாள்கள் தீண்டுமோ புவியை யென்பார்
பூவரு மொருவர்க் கெட்டுப் புயங்களு முண்மை யாலே
மூவரி லொருவ னென்ன மொழிவதற் கில்லை யென்பார். (2)

என்புட னேழின் யாத்த யாக்கையோ யிவர்தம் மேனி
அன்புட னருளுஞ்சேர வமைந்ததோ ரழகே யென்பார்
பொன்புனை தோள்க ளிந்தப் பூதலப் பொறையி னீங்கி
இன்புற அருண மொன்றை யேந்தலென் னறியே மென்பார். (3)

பூமக ளிவர்பா தங்கள் புனையவென் றேற்று ளென்பார்
காமனை யுருவ மெய்திக் கதித்தனன் போலு மென்பார்
தாமரை வதனஞ் சற்றே சாம்பிய தோற்றத் தாலே
சேமமா ரிவர்தம் முள்ளச் சிந்தனை யறியே மென்பார். (4)

கண்ணினை கருணைக் கேணி காதலங் கற்ப மென்பார்
மண்ணில மலங்க ரிக்க வந்தவோர் வரத னென்பார்
வண்ணமும் வடிவுஞ் செய்யும் வகைகளுஞ் சொல்லு மற்றை
எண்ணமும் பிறர்க்கே யன்றித் தமக்கெது மில்லா ரென்பார்.(5)

சித்தனே யென்பார் யார்க்குஞ் செயற்கருந் தவத்த ரென்பார்
முத்தனே யென்பார் கால மூன்றுணர் யோகி யென்பார்
பித்தனே யென்பார் கொண்ட பிறப்பிலே வாய்த்த தாமுன்
மத்தனே யென்பாரின்ன வருத்தனர் தொடர்த லானுர். (6)

அணிநகர் தொடரச் சென்ற வையனே டாய ராடும்
பணிதிகழ் யாக சாலே படர்ந்தனர் சாலே புக்க
கணிமறை விரிப்பார் குண்டக்கனலினே வளர்ப்பார் நெஞ்சத்
துணிவுடன் கோறல் செய்வார் தொகையினே யளியர் பார்த்தார்.()

குசத்தலே யிருப்பா ராவின் கொழுவு நெய் யமுதான் முத்தீ
முசித்தலேப் பெருது காப்பார் முனேபெறு வாளொன் ருேங்கி
அசத்தினேத் துணிக்க நிற்பார்க் கண்டன ருளா வேசம்
விசித்திடு மொருவ ருள்ளம் விம்மினுர் விரைந்து சென்றே. (8)

அயத்தினே யவிழ்த்து விட்டார் அந்தணன் கையின் வாளே
மயக்கறக் கவர்ந் தெறிந்தார் மற்றங்கு நின்ரு ரெல்லாம்
பயப்புறு மைய ஞர்தம் பரியதோர் தோற்றங் கண்டு
வியப்பொடு வாய்வா ளாமை மேற்கொண்டு திகைத்து நின்ருர்.(9)

அப்பொழு தங்கு நின்ற வரசனே அவனேச் சூழ்ந்த
விப்பிரர் தம்மை யொன்று விளம்புவா னிங்கு வந்தேன்
தப்பெது முளதே லென்னேத் தண்டிக்க வுண்மை யாமேல்
ஒப்புக வெனலும் வேந்த னுரையென முனேவர் விள்வார் (10)

வேறு.

கெடுத்திடலா மோருயிரைக் கெடுத்ததற்கு மீளவுயிர்
கொடுத்திடலாம் வன்மையெவர் கொண்டவரே நம்மவர்க்கிங்
கடுத்திருக்குந் துயர்நீக்க அயலழைப்போம் இவ்வசத்தைப்
படுத்திடீர் துணிந்தீரே பாவமிது பேசுவதோ. (11)

தொல்லுலகிற் பிராணியெலாஞ் சுகமாக வாழ்ந்திடுமோர்
நல்லநினை வோடிருத்தல் நராதிபர்நீ ரறியீரோ
எல்லவர்க்குந் தங்கள்தங்க ளுடல்பொதிந்த வின்னுயிரே
வெல்லமெனல் தெரியீரோ ஈண்டிதற்கு வேறேயோ. (12)

இப்பொழுதோர் பேரரக்கன் நமைக்கொல்ல வெதிர்வானேல்
எப்படிநாம் பரிதவிப்போம் என்னினைப்போம் என்படுவோம்
அப்படியே இச்சிறிய அசத்திணிக்கு மிருக்குமெனச்
செப்பிடவும் வேண்டுவதோ தீமையிதன் மேலுளதோ. (13)

வெந்தறுக ணோர்மறவன் வேல்கொண்டு குத்திவிட்டால்
நந்துயரை நாமறிவோம் அத்தகைய நாமேயோர்
செந்துவினைத் தலைதுணிக்குந் தீவினையை யெண்ணமின்றிச்
சிந்தனையிற் கொள்வோமேற் சிறிதுளதோ பகுத்தறிவு. (14)

பூவொன்றோர் பிராணிதனைப் பொன்றுவிக்கும் போழ்திலதன்
ஆவென்று வாய்விடுக்கு மார்ப்பரிப்புஞ் சுழல்விழியிற்
சோவென்று சொரிநீரும் நெடுமூச்சுஞ் சும்மா நீர்
பொவெனவென் றெண்ணினீரோ பொடியாக்கிப் போடாதோ. ()

கண்ணோட்டங் கண்களுக்கோ ரணிகலமே காணுமின்
கண்ணோட்ட மில்லாத கண்களென்னை புண்களன்றோ
கண்ணோட்ட முள்ளானை வுயிர்களெல்லாங் கைதொழுமே
கண்ணோட்ட மில்லார்கள் விண்ணாட்டங் காண்பாரோ. (16)

கருவிடுத்த வுயிர்களெலாங் கருதுறுங்கா லோர்தாயின்
திருவயிற்றி னுதித்திட்ட சோதரராய்ச் செப்புவரே
ஒருவயிற்றுப் பிள்ளைகளில் உயர்ந்தோனே தாழ்ந்தோனை
வெருவவுயிர் வாங்குவனேல் எவர்பொறுப்பார் மேதினிக்கே. (17)

தாழ்ந்தவர்க்குத் தாழாத நிலைமைபல தருவதுவும்
வாழ்ந்தவர்க்குச் சீர்த்தியொடு வான்கதியைக் கொடுப்பதுவும்
வீழ்ந்தவர்க்கு வேண்டலெலாம் மேவவளித் திடுவதுவும்
ஆழ்ந்தாய்ந்து நோக்கிடுங்கா லருளின்றிச் சொலற்கிலையே. (18)

பூசிக்குங் கடவுளிடம் பொன்றாத கருணையினை
யாசிக்கும் நம்போல நம்மருளை யெதிர்நோக்கி
நேசிக்கும் பிராணிகளை நேர்கெடயாங் கொல்வோமேல்
யோசிக்குங் காலந்த வொருகடவு ளிரங்கிடுமோ. (19)

தாம்பணியு மிவ்வாடு தரும்பாலைச் சனனமுதல்
சாம்பருவம் வரைகுடித்தோந் தாயன்றோ இது தவிர
ஆம்பணிக்கும் ரோமத்தா லாடைதரு மப்பனன்றோ
வீம்பெவனோ பெற்றோரில் விளங்கிதனை மாய்ப்பதுவே. (20)

வாயிருந்தால் தன்வழக்கை மற்றதுதான் பேசாதோ
பேயிருந்த கெடுமதியீர் பிணத்தாசை தலைசுழல
நாயிருந்து கவ்வுதல்போல் நல்லவுயி ருடலழித்து
நோயிருந்து வருந்துதற்கோ அந்தோ நீர் நுகர்கின்றீர். (21)

அகத்தாலே அன்பின்றி ஆருயிரி னுடல்சிதைக்கு
மகத்தாலே வானகதி வாய்த்திடினும் வேண்டுவதோ
சகத்தாலே உயிர்த்தொகையைத் தன்னுயிர்போற் பாலித்திங்
கிகத்தாலே பரத்தாலே எய்வவெலா மெய்தீரோ. (22)

பொல்லாத பாம்பெனினும் புழுவெனினும் எறும்பெனினும்
புல்லாத புலியெனினும் புட்பூச்சி யெவையேனும்
வல்லான வாளோங்கி வதைத்திடுகோன் மற்றவனைக்
கொல்லாதே யென்பவனை ஒல்லாதோ வறமனைத்தும். (23)

துறக்கநிலை யடுத்தாலுஞ் சுடுநரகம் வாய்த்தாலும்
சிறக்கவுடல் பருத்தாலுந் தேய்ந்தாலு மோருயிரை
இறக்குமுறை செய்யாதீர் செய்தக்கா லிவ்வுலகில்
உறக்குநிலை யுயிரிருந்து முறுவீர்கா ணுண்மையதே. (24)

யாதானு மோருயிரை ஆபத்திற் காத்தவனைப்
பூதானம் பல்தானம் பொற்றான மிற்றானம்
கோதான முதலாகக் கூறுகின்ற பற்பலவாம்
மாதான குலமனைத்தும் வந்தடையும் வழிகேட்டே. (25)

கொன்றிடவே வோருயிரைக் கொழுத்துயர வளர்ப்பாரும்
சென்றிதனை விலைகொண்டு சிதைத்தாருஞ் சிதைதசையைத்
தின்றாருந் தின்னுரைத் தின்னுமுறை செய்விப்ப
நின்றாரும் நீங்காத பழிபாவம் நின்றாரே. (26)

தன்னேர்ந்த வினையனுப விப்பதன்றித் தான்பிறிதோர்
செந்நீராற் கழுவிவிட முடியாது திண்மையதே
நன்னீர்மைத் தெய்வங்க ளுயிர்ப்பலியை நாடுவதோ
உன்னீர்நீர் இவ்வினையை இனியேனு மொழித்திடுமின். (27)

மிக்கவலி மனங்கொளுமின் மெலிந்தாரைப் புறந்தருமின்
தொக்கவுயிர்க் கானவரை துணைநின்று போற்றிடுமின்
துக்கத்தி லழுங்கன்மின் சுகத்திடத்துங் களியன்மின்
இக்குவல யத்திடத்தி லிவ்விதம்நீர் வாழ்வீரே. (28)

தெள்ளமுத தாரையெனச் சித்தார்த்தர் தொடுத்தலைக்கேட்
டுள்ளமெலா முலையாக்கா யுருகிவிட்டார் வேதியர்கள்
பள்ளநிலை விரைகின்ற வெள்ளம்போற் பார்வேந்தன்
வள்ளல்நிலை தனையடுத்து மலரடிகண் முடிக்கணிந்து. (29)

ஏடடங்கா எழுத்தடங்கா இப்பாவி இதுகாறுங்
கூடடங்கு முயிர்நீத்த கொலைக்கொள்ளை இனித்தெளிந்தேன்
நாடடங்க நகரடங்கக் கொல்லாவிந் நல்விரதப்
பீடடங்க இனிப்புரிவேன் பெரியோய்நின் பேரருளால். (30)

அப்பொழுதே மகச்சாலை யனற்கிரைய தாக்கிவிட்டான்
எப்பொழுது மெவ்விடத்து மெவ்வேது தலைப்பெய்தும்
இப்படியி லெவ்வுயிரை யெவரழிப்பா ரவரெல்லாம்
தப்புரிய ராவரெனப் பறைமுழக்கிச் சாற்றுவித்தான். (31)

மருந்தாகுங் குணத்தரசன் வழங்கியவிவ் வாக்கினையால்
பொருந்தாத புலாலருந்தும் புல்லோரும் நல்லோராய்
அருந்தீயி னெரிபசிக்கங் கன்னமொடு காய்கறியும்
வருந்தாக வேட்கைக்கு மடுநீரு மருந்தியுய்ந்தார். (32)

## 10-வது புத்தரானபடலம்.

தன்னேரரசன் கோதமரைத் தன்னோடிருக்க வேண்டிடலும்
பொன்னேர் குணத்தார் யானுண்மை பொருந்தவறிந்தாலல்லாமல்
மின்னேர் துறக்க மெய்திடினும் விரும்பேன் ஒருபாற் றரித்துமிரேன்
இன்னேவிடைகொண்டெழுகின்றேன்என்றூர்கயையின் வழிக்கொண்டார்

போகுநெறியிலொருவனத்திற் பொருந்துந்தவத்தார்தமையணுகி
வேகுநெறியி லுயிர்களெல்லாம் வீயா துய்வா னீர்கண்ட
தாகு நெறியா தெனலுமவர் அரிய மறையா திகள்புகலின்
பாகு நெறியே யாங்கள்கண்டு படரும் நெறிகாண் வேறின்றால்(2)

சுருதி மிருதி வகுத்திட்ட தூய நெறிக்கு மிகநுணுகிக்
கருதி யுரைக்கு மார்க்கமெவர்கண்டார் யாருமிலை யென்னப்
பருதி யனையா ரவருரைத்தல் பாங்கன்றெனக்கண் டவணீங்கி
நிருதிக்குரிய திசைகடந்தார் நீண்டோர் வனத்தினுப்பணுற்றார். ()

எய்பாத் துயரி னுயிர்களெல்லாம் ஏங்கியிளைத்தல் தனை வாழ்வு
மையார் வானவிற் போல மயங்கிமறையும் பரிசுதனைப்
பொய்யா மனத்தி லெண்ணி யெண்ணிப் பொழுதுமுழுது நிட்டையிலே
நையா நின்றார் ஊணுறக்க நண்ணார் கண்ணும் விழியாதார். (4)

உருகு மனத்தார் நாள்சிலவிங் கொழுகி வாலும் வரவரமெய்
சருகு நிலையின் மிகவுலர்ந்தார் தளர்ந்த நடைக்குந் திறனற்றார்
பருகு நீருந் தாவொருவர் பாங்க ரிலராய்ப் பனிமழைக்குங்
கருகு வெயிற்கு மிகவிளைத்தார் கருது நெறிகாண் பிளையாதார். (5)

ஊக்கங் குறையா ரொருநாளில் உயிரு முடம்பு மிகக்குறைய
நோக்கஞ் சுழல மூர்ச்சையெனும் நோவாலிறந்தா ரெனக்கிடப்பப்
பாக்க மடுத்த வோரிடையன் பந்தர்வனைந்தங் கவர்களைப்பைப்
போக்க நினைத்தா னவர்த் தீண்டப் போகாதெனத்த னுளங் கொண்டே(6)

வெள்ளா டொன்றை மடிபிதுக்கி யவர்வாய் வீழக் கறந்திடலும்
தள்ளா மூர்ச்சை தனிற்றெளிந்த தகையோ ருண்ணப் பால் கறந்து
கொள்ளா வருக வெனவவன்யான் கூறும் நான்காம் வருணத் தேன்
வள்ளால் கொடுத்தல் நீதியஃதோ வழுத்தா யென்ன வருண் முனிவர். (7)

78430

நல்லாய் கருணை யுள்ளவரே நமது கிளைகள் செந்நீரோ
எல்லா ருடற்கு மோர்நிறமே வதுசாதி பேத மப்பா
வில்லார் பூதி நூலுடனே பிறந்தா ரெவரே மேதினியில்
சொல்லார் துவிசர் நலஞ்செய்வோர் செய்யா ரிழிந்த சூத்திரரே.()

கண்டாய் கொணர்க வெனவவ னுங் கறந்து கொணர்ந்த பாலதனை
உண்டா ரினியா மிவ்வாறு யுயிரை யுடலை மிகவ ருத்திக்
கொண்டால் நாடு நெறிதெரிந்துக் கொள்ளோ மெனவே சித்தார்த்தர்
பண்டார் நிலையி லுயிர்தேற்றப் பார்த்தார் பழுவத் திடையிருந்தார். (9)

ஆங்கோர் நகரிற் சுசாதையென்னு மரிவை மகவில் குறையதனை
நீங்க வருள்செய் தேவதைக்கு நேர்ந்த முறையே பாலடிசில்
தாங்குஞ் சிலதி முன்செல்லத் தனயற்றழுவி வனம் புகுந்தங்
கேங்கி யிருப்பார் தமைத்தெய்வ மெதிர்வந் திருந்த தெனக்கொண்டே.(10)

வனசமலர்த்தா ளிணைபரவி மாறு மலட்டுப்பிணி மாற்றிக்
கனசம் பத்தி னோர்மகவைக் கண்பார்த் தளித்த கற்பகமே
சனசஞ் சார மிலாவனத்துத் தேவே யமுதமுண்க வென்றாள்
மனச முவந்து சித்தார்த்தர் வயிற்றினளவு வாய்மடுத்தார். (11)

உண்ட வுணவின் மகத்துவத்தால் உடலம் பருத்தார் திடனுற்றார்
கொண்ட மனத்துச் சாகநிலை குருத்தார் முகத்தா மரைமலர்ந்தார்
வண்டரனைய கண்கள்மலர் மதிமா முகத்து படவாளை
அண்டாமுத மெனக் களித்த வாறே தென்ன வவளறையும்.(12)

பிள்ளைக் கலிதீர்த் தெனையாண்ட போராந் தெய்வ மருந்த வென
வெள்ளைப் பசும்பால்தனிலமுது விரும்பிச்சமைத்துக்கொணர்ந் தளித்தேன்
கொள்ளக் கிடையாத் திரவியமாங் குழந்தை தனையா னடைந்ததனல்
விள்ளக்கிடந்தா ரெனக் கிணையார் மேலாமினியென் வாழ்வென்றாள்(13)

என்று ளரிதி னீன்றெடுத்த இனிய குழவி தனைத்தொட்டு
நன்றாய் வாழ்க வாழ்வனைத்தும் நலமே தருக வெனவாழ்த்திக்
குன்று வளிக்கோர் தளியன்னர் கோல மயினீ தருமமுது
தின்று னிங்கோர் தெய்வமல்ல தெளிவா யோர்மா னிடனுமே(13)

இளைய வாசா யினிதிருந்தேன் இம்மா னிலத்தார் மதிமயங்க
விளையு மாய விருளகல்வான் விளக்கொன் றுசாவி யலைகின்றேன்
வளைய லதிரு நின்கரத்தால் மகிழ்ந்திங் களித்த வமுதாலே
உளைவு மகன்றே னுண்மைநிலை யொருவா றறிவான் றுறைநின்றேன் ()

அன்னாய் நீயிவ் வாழ்வினையே ஆர்வ மிகுந்தாய் போலுமென
முன்னா முனிவர் மொழிதாலும் மொய்த்த வளைக்கைக் குயில் கூறும்
என்னா யகனாரி னிதுவப்ப வியற்றும் வினையே யெந்நாளும்
நன்னாருடனே சோராமல் நானே புரிந்து நலம் பெறுவேன்.(16)

பின்னே யுறங்கி முன்னெழுதல் பெறுமோர் பயனால் நாயகனின்
முன்னே துறக்கம் யான்பெறுவேன் முடியா தென்னி லுடன்புகுவேன்
பொன்னே யனையீர் நன்மைதனைப் புரிந்தார் நன்மை தனைப்புசிப்பார்
மன்னே தீமை தனைச்செய்தார் மாறாத் தீமைதனிற் புகுவார். (17)

என்ப தறிவே னதனாலே என்று நலமே யான்புரிவேன்
இன்ப மெனைவிட் டகல்வதுவோ எந்தா யெனலுங் கோதமனார்
அன்பினணங்கே நின்மொழியால் ஆவதறிந்தே னாமாறே
துன்ப மொழிந்த தினியுலகம் தோகாய்செல்க வெனத்தொழுதார்

தொழுத முனியைச் சுசாதையெனுந் தூயாள் வணங்கி யூர்நோக்கி
எழுதல் செயலு மெழுதரிய இனிய கருணைக் கொரு பிடகர்
பழுதில் நெறியை யாண்டறிந்த பலத்தாற் புத்த ரெனப்பெயரப்
பொழுதி லணிந்தோர் போதிநிழல் புகுந்தாருலகம் புகழ்தரவே()

---

## 11-வது கபிலை மீண்ட படலம்.

---

பட்டத்துக் குரிய பிள்ளை படர்தலு மழுத கண்ணீர்
சொட்டத்தான் துயர மென்னுந் தொடுகடல் குளித்தான்வேந்தன்
மட்டற்ற தூத ராலும் வந்து செல் வார்க ளாலும்
வட்டத்தா ருலக மெல்லாம் வகுத்தனன் தேடு வித்தான். (1)

தேடினர் காணு ராகித் திரும்பலுஞ் செயலே தற்று
வாடினன் சோகத் தீயால் வதங்கினன் மயங்கி நின்றான்
வீடினன் கொல்லோ வென்றும் வேடமா ருடி யாண்டோ
நீடினன் போலு மென்றும் நினைத்தயர் வுற்றார் மற்றோர். (2)

மேகத்தி னலர்ந்த கூந்தன் மெல்லிய லசோதரைப் பெண்
நாகத்தின் வாயிற் பட்ட நளிர்நிலா மதியம் போல
சோகத்தி னலங்கு லைந்தாள் துணைவனின் பிரிவா ற்றாது
சாகத்தான் துணிந்தா ளேனுந் தனயனாற் றரித்தி ருந்தாள். (3)

மஞ்சத்தை வெறுத்தாள் பூணு மணிக்கலன் வெறுத்தாள் வாடும்
கஞ்சத்தைக் கண்ணீர் கொண்டே கழுவுதல் செய்வா ளேனும்
நஞ்சத்தின் வெறுத்தாள் வேண்டும் நலமெலாம் வெறுத்தாளேழை
பஞ்சத்திற் பட்ட பாட்டைப் பாவையும் பட்டா ளன்றெ. (4)

காவினிற் படாாள் கொண்கன் கலந்துடன் மகிழ்ந் திருந்த
கோவிலிற் குறுகாள் மற்றக் குளத்தினுக் கேகாள் போற்றும்
தேவினை நயந்து நிற்பாள் சேடியர்க் கேவல் நல்காள்
ஆவினைப் பிரிந்த கன்றின் அலறுவா ளரிது தேராள். (5)

விருந்தென வருவார் தம்மை வேந்தனார் மைந்த னாரைத்
திருந்துமென் னுயிரன் னாரைத் தேவர்தம் விருந்தா வாரைப்
பொருந்தநீர் கண்ட துண்டோ புகலுமி னென்பாள் போற்றும்
அருந்ததி யனையா ளின்ன வாண்டதே ழாக வம்மா. (6)

கனமணி வணிக ரோர்நாள் கபிலவாத் துவினி லெய்தி
இனமணி மௌலி வேந்த னிணையடி பரவி யீன்ற
தனயனார் புத்தரான சரித்திரம் வகுப்பா னின்றார்
அனையதைக் கேட்டோர் சேடி யசோதரைக்கறைந்தா ளன்றே (7)

அன்பனார் வாழ்வு கேட்டங் காருயிர் தழைத்த நங்கை
முன்புற வணிகர் தம்மை முறைபழைத் துரைமி னென்ன
இன்புற வவரு மன்னாய் இராஜரா ஜரினு மேலாம்
மன்பெறும் பதவி வாய்ந்தார் மற்றுநின் றுணைவ ரம்மா. (8)

போதிமா நிழலில் யார்க்கும் பொருந்திய துணைவ ரானார்
நீதியி னிலைய மானார் நீணிலத் துயிர்கட் கெல்லாம்
சோதிசேர் விழியு மானார் சொல்லுஞ்சொல் லமுத மானார்
ஆதியோ டந்த மில்லா தானவா னந்த மானார். (9)

சத்தியத் தேசி னாலே தரையெலாஞ் சொலிப்ப நின்றார்
முத்தியா நெறியை யார்க்கு முந்துற முழக்கா நின்றார்
நத்திய வன்பி னாலும் நயந்தரு மொழியி னாலும்
எத்திசை யவருந் தம்மோ டேகுமா றிலங்கா நின்றார். (10)

புத்தர்முன் போதி நீழல் புகுந்து மெய்ஞ் ஞானங் கொண்ட
அத்தின மார னென்பான் அமர்செய வவனை வென்றார்
இத்தரைக் கழியா தான வின்பமே விளைய வைத்தார்
சித்தரா மவரை யாங்கள் தெரிசனஞ் செய்யப் பெற்றோம். (11)

பின்பவர் காசி சென்றார் பெருந்தவ சிருக்கு மைவர்க்
கன்புடன் மானிடர்க்குப் பழவினை யன்றி வேறு
துன்புறு விதியின் றென்றுஞ் சுடுநர கெவருந் தாமே
வன்புற வருத்திக் கொள்ளும் வகையின்றி வழியின் றென்றும். ()

தன்மனோ விகாரந் தன்னைத் தடிந்தவ னடைந் திடாத
நன்மைசேர் சுவர்க்க போகம் நவிலுதற் கில்லை யென்றும்
வன்மையாம் பிறப்பி றப்பை மாற்றுமா றீதே யென்றும்
தன்மையின் விரித்தார் கேட்ட தாபதர் தலைக்கொண் டாரால்.(13)

அசத்தெனு மரசன் தன்னை யளவில்பி ரபுக்க டம்மை
நிசத்தொளிர் தமது கொள்கை நிகழ்த் தினர் தழுவிக் கொண்டார்
அசத்திடு கரணந் தன்னை யகத்துற வடக்கி யின்ப
வசத்துற வவரை யார்க்கும் வழங்குமா றுஞ்ஞை யிட்டார். (14)

தரையெலாம் புகழும் பிம்பி சாரன்ற னகரிற் சென்றார்
கரையிலாத் தருமந் தன்னைக் கசிவுறப் பிரசங் கித்தார்
இறைவனு மவனைச் சார்ந்தார் யாவரு மொப்புக் கொண்டார்
நிறைமலர் வேலு வென்னு நீள்பொழில் தனில் வதிந்தார். (15)

பொழிலிடை யிருந்தார் நாளும் பொருண் மொழிப் பிரசங் கங்கள்
மழையெனப் பொழிந்தார் கேட்டார் மனமெலா முருகக் காவி
முழுகிய ஆடை சுற்றி முதன்மையாஞ் சீட ராகத்
தழுவனு மவருக் காசி தந்தன ரினிதி ருந்தார், (16)

மாரனை வென்று ரிங்கு வரத்திரு வுளத்திற் கொண்டார்
வாரயோன் றகன்றுற் கண்டு வணங்கலா மெனனு மின்னுள்
ஆரமும் பட்டுந் தூசு மணிகளு மவர்க்கு நல்கிக்
காரமு தெதிர நோக்குஞ் சாதகக் ககம தானுள். (17)

கான்முளை செயலைக் கேளாக் காவலன் மதிவ லாரில்
மேன்மையர் சிலரைக் கூவி விரைந்துநீர் பிரிவாற் றுத
பான்மையால் நுந்தை சாவும் பருவத்தை யடைந்தா னென்ன
நோன்மையின் மகற்குக் கூறி நொய்திவண் தருக வென்ன. (18)

இம்மொழி செவியிற் கேட்டா ரெழுந்தன ரிவுளி தூண்டிச்
செம்மைசேர் பிம்பி சாரன் திருநகர்க் கடுத்த தான
வெம்மையி லாரா மத்தில் விரைந்தனர் புகுந்தார் யார்க்கும்
இம்மையோ டம்மை யெல்லா மினிதுதந் தாரைக் கண்டார். (19)

கைம்மல ரபயங் காட்டக் கட்டுணை கருணை நல்கச்
செம்மலர் முகத்திற் சாந்தம் திருந்திடத் தேன வாவி
மொய்ம்மலி வண்டின் யாரு மொய்த்திடச் செவ்வாய் விண்டு
பெய்ம்மழை சொரிய நின்ற பிடகனுர் செவ்வி கண்டார். (20)

முந்துற வணங்கி யையன் மொழிதனிற் சிறிது கேட்டார்
சிந்தனை யிளகப் பெற்றுர் சித்திர மனைய நின்றுர்
தந்தமிற் பேச்சு மற்றுர் தம்மையே மறந்தா ரென்னில்
வந்தகா ரியத்தை யன்னோர் மறந்தன ரென்ற லென்னே. (21)

சென்றவர் மீள்கி லாமை தெரிந்தனன் வேந்தன் முன்னர்
நின்றவ னுதாயு தன்னை நீசென்று மீள்தி யென்ன
அன்றவன் காதிற் பஞ்சை யடைத்துக்கொண் டையன் பாற்போய்
இன்றெழுந் தருள நுந்தை இசைத்தன னெழுக வென்ன. (22)

ததாகதர் வார மொன்றிற் சார்குது மவனும் நீபோய்ப்
பிதாவினுக் கருவி யென்னப் பெயர்ந்தவ னீங்கிச் சென்ற
யுதாயுவு மன்னர்க் கெல்லா முரைத்திட நகர மெங்கும்
விதானமற் றணிகள் செய்வான் விளம்பினன் வேந்தர்வேந்து (23)

சாக்கிய ரெழுதல் கேட்டுத் தடநகர் மாக்கள் மேலாம்
பாக்கியம் பெற்றே மென்னப் பாவருங் களிப்புக் கொண்டார்
பாக்கொடு கதலி கன்னல் யன்மலர்த் தாம மின்ன
வீக்கின ரலங்க ரித்தார் விழைவொடு முன்றி லெல்லாம். (24)

மாசிலா வீதி யெல்லாம் மலர்த்துணர் பரப்பல் செய்தார்
வீசிய சீலை யாத்த விறற்கொடி நிறுத்தல் செய்தார்
வாசனை நீர்தெ ளித்தார் மகரதோ ரணங்க ணட்டார்
காசொடு மணியும் பொன்னுங் கலந்தனர் வீசி யார்த்தார். (25)

வாரண வரிசை யோர்பால் வாம்பரி யணியு மோர்பால்
பூரண கும்ப மேந்து புனிதரு மொருபாற் போற்றுங்
காரண வரச ரோர்பாற் கவிவலா ரொருபா லாகத்
தோரண வீதி யெல்லந் தொக்கனர் காத்தி ருந்தார். (26)

வாத்திய முழங்கிற் றங்கே மாதினி யசோத ரைப்பெண்
பூத்தியாங் களிப்பி னாலே புதல்வனைச் செங்கை பற்றி
ஆர்த்திபின் னிருந்து தள்ள அனமென நடந்து சென்று
நேத்திரா நந்தங் கொள்வான் நெறியிடை யொருபா னின்றாள் (27)

பட்டணத் தவர்க ளாங்குப் பைந்துவ ராடை யோடுஞ்
சட்டியேந் தங்கை யோடு முண்டிதத் தலையி னோடும்
மட்டருஞ் சீடர் சூழ மத்தியிற் கருணை பூத்த
கட்டழ குடையார் செய்ய கான்மலர் பெயர்த்தல் கண்டார். (28)

முடிபுனை சென்னி யென்னே முண்டிதங் கொண்ட தென்பார்
நெடியசெங் கோல்சேர் கைக்கு நேர்வதோ கடிஞை யென்பார்
மடிதிகழ் பட்டா டைக்கோ துவராடை வாய்த்த தென்பார்
நெடியதே ரிருக்கக் காலோ நெடுவழி கடக்கு மென்பார். (29)

படியளந் துலகம் போற்றும் பதவியை நீத்தி ழிந்த
குடிதொறும் புகுந்து பிச்சை கொள்ளுத லழகோ வென்பார்
கடியரண் மனைகள் விட்டுக் கான்புக லென்னே வென்பார்
அடியவ ரளவில் லாதா ரானதென் பரிசோ வென்பார். (30)

மன்மக னல்ல னென்பார் மாமுனி போலு மென்பார்
தன்மம தருள வந்த ததாகதர் தானே யென்பார்
பொன்மகள் பிரிவாற் ருது பொருமுறப் பிரிந்த தாலே
கன்மன துடையா னென்பா ரிவரின்ன கழறுங் காலே. (31)

துடியிடை யடுத்து வந்து துணைவவெங் ககன்ற தென்று
பொடிபடு பதத்திற் கண்ணீர் பொழிந்தனள் கழுவி நிற்பக்
கெடிபெறு வேந்தன் மைந்தன் கேவல முற்று னின்னே
முடிபடத் துணிப்ப னென்ன முனிந்து வாள் சுழற்றி வந்தான் (32)

வந்தவன் புத்த னூர்தம் மலர்முகப் பொலிவைத் தெய்வச்
சுந்தரத் தோற்றந் தன்னைத் துணைவிழி கருணை மூழ்கிச்
சிந்திடு திறத்தைக் கேட்டார் சிந்தனை கவர்ந்தங் காளும்
அந்தரத் தமுத மொத்த வரும்பெரும் பிரசங் கத்தை. (33)

கண்ணுற்றான் கையிற் கொண்ட கட்கத்தை யெறிந்தான் கொல்ல
எண்ணுற்ற தனையி கழ்ந்தான் என்றுலு மவர்முன் சென்று
விண்ணுற்ற வமுத மன்னய் விதியிலார் போல நீயோ
புண்ணுற்ற குடிசை தோறும் புக்கனை பிச்சை கேட்பாய். (34)

சுற்றிய குடிக ளெல்லாம் சோர்ந்துயிர் வாட இல்லத்
துற்றவள் நோவி னைய ஒருமகன் கதற விந்தப்
பெற்றிடு பாவி தன்பப் பெருங் கடன் மூழ்க வெங்குக்
கற்றனை யிந்தக் கோலங் கருகுதென் னுவி யையா. (35)

பூவினி லரசை யெல்லாம் போதுமைநீத் தொருகோ லோச்சிக்
கோவிய லரச ரேறுயக் குலவுவா யென்றி ருந்தேன்
பாவியி னெண்ண மெல்லாம் பாழ்படப் போக்கி யென்முன்
காவியு மரையு மாக நின்றனை காண்கின் றேனே. (36)

யாரினி யுலகங் காப்பார் யாரினி யென்னைத் தேற்று
வாரினி யையா வின்னே மணியணி மகுடந் தாங்கிப்
பாரினைப் புரக்க வென்னப் பயந்தவன் பகரக் கேட்டுக்
காரினை யளியால் வென்ற கௌதமர் கூறு வாரால். (37)

தந்தைநீ ரரிதி னீன்ற தனயன்யா னெனினும் ஆயின்
முந்தையீண் டவத ரித்த முழுதுணர் புத்த ராவார்
சந்ததி யாவேன் அன்னோர் சாற்றிய நெறிநில் லாமல்
உந்தம துரையி னிற்ற லொண்ணுமோ வொழுங்க தாமோ.(38)

பண்டுள்ள புத்த ரிந்தப் படிதுறந் தரிது தேடிக்
கண்டதைப் பெற்றோர்க் கன்றிக் காசினி யவர்க்கு மீந்தார்
விண்டதை நீரு முய்ய விளம்புவ னென்று நான்கு
கொண்டதோ ருண்மை யெட்டாய்க் கூறுமோர் நெறியைச் செற்றூர்(29)

---

## 12-வது மகோபந்நியாசப் படலம்.

---

பகவனு ரப்பா லீன்ற பாலனும் பாவை யாளும்
அகநிலத் தரசும் வேண்ட அரண்மனை புகுந்து நீங்கித்
தொகைமணிமாடத் தந்தத் தொன்னகர்ப் புறத்தோர் குன்றச்
சிகரிமே லெழுந்து நின்று செய்தனர் உபநி யாசம் (1)

வேறு

தோழர்காள் தோழர்காள் சொல்வன கேண்மின்
பிரமமொன் றுண்டெனப் பேசுவ ரன்றிக்
கண்டவர் யாரே ஈரவெண் காயத்
துள்விதை காண்பா னுரித்தவன் கதைபோல் (2)

ஒழிவதே நீரதை யுளம்பெற வேண்டா
நீரே யாவியாய் மேகமாய் நீண்டுபின்
நீரா வதுபோல் நிகழ்வது வாழ்வே
எல்லா மாயையி னியக்க முலகம் (3)

எல்லா மாறுபா டேற்கு மென்றும்
தெய்வம் போற்றத் தீரா தும்வினை
தவநோன் பிருந்திங் கவம்போ காதீர்
நன்மை விதைத்தால் நன்மை விளையும் (4)

தீமை விதைத்தால் தீமை விளையும்
தந்தம் வினைதரும் தாழ்மையும் மேன்மையும்
இருவினைப் பயனையும் மெவரும் புசிப்பார்
எல்லாம் நாட்செல இல்லா தொழியும் (5)

ஐயம் புகுந்தவ ரரச ராவர்
அரசரும் ஐயம் புகுந்தலை கிற்பர்
பழந்துணி சுற்றினர் பட்டு முடுப்பர்
பட்டுடுத் தாரும் பழந்துணி சுற்றுவர் (6)

உற்று நோக்கில் உடைமையும் வறுமையும்
ஒய்வறச் சுழல்தரு மொருசக் கரங்காண்
நீரிதி னீங்குமின் நேர்நெறி சென்மின்
நானித னீங்கி நலம்பெற் றுய்ந்தனன் (7)

என்று முளதாய் எதற்குமேம் பட்டதாய்
எங்கு முளதா யிருக்குமோர் சக்தியின்
நீதி நெறியே யென்றும் நிலைப்பதாம்
ஆங்கதின் முடிவே ஆனந் தமுமே. (8)

---

நண்பர்காள் நண்பர்காள் நவில்வன கேண்மின்
யாக்கையுஞ் செல்வமு மிளமையும் நிலையா
பிறப்பதுந் துன்ப மிறப்பதும் துன்பம்
உள்ளநா ளெல்லாம் ஒயாக் கவலை (9)

எட்டுணை யின்பமு மீண்டிலை திண்ணம்
கட்டுரை கேட்டுக் கடிதுநீ ருய்மின்
தன்னுயிர் போல மன்னுயிர் போற்றுமின்
சித்திரத் துருவையு மழித்தல் செயன்மின். (10)

பிறர்செய் தீமை பொறுத்துப் பேணுமின்
அன்பு மருளும் நெஞ்சகத் தாக்குமின்
உண்மையும் நீதியும் உலாவா துரைமின்
கள்ளும் ஊனுங் காமமும் லோபமும். (11)

தள்ளுமின் ஆந்துணை தரும மறிமின்
செய்வன செய்மின் தெளிவன தெளியுமின்
இச்சக மீதினில் இன்னணம் வாழ்வோர்
நிச்சய மெய்துவர் நிருவா ணம்மே. (12)

---

வேறு

இரவெலா மேகதேவன் இவ்வண்ண மிசைத்தல் கேட்ட
அரசனு மணங்கன் ளுளும் அவள்பெறு சுதனும் யாரும்
உரநிலை இளகி யந்த வுயர்நெறி படர்த லானூர்
திரனுட னன்றம் மார்க்கந் திரும்பினு ரனந்தம் பேரே. (13)

---

## 13–வது கடமைகள் வகுத்த படலம்.

---

போதி வேந்தர் புகன்ற நெறிப்படி
நீதி யாக நிகழ்பவர் கேட்டிட
கோதி லாத கடமைகள் கூறுசெய்
தோதி ளுரவை யோதுகிற் பாமரோ. (1)

வேறு—பெற்றோர் கடமை.

மக்களைத் தீச்செயல் மருவாது காத்தலும்
நற்செய லவர்கள் நயந்திடச் செய்தலும்
காலங் கண்டு கல்விகற் பித்தலும்
பருவம் நோக்கிப் பதிபத் தினிகளை
அருமையாய்த் தேடி யவர்க்களித் திடுதலும்
உரிய தாய பாக முதவலும்
பெற்றோர்க் கான பெருங்கட னுமே. (2)

---

## மக்கள் கடமை.

தங்களைக் காத்த தாய்தந் தயரைத்
தளர்பரு வத்திற் றாங்காத் திடலும்
எழில்பெறு குடும்பத் திணக்க மான
பழியில் கடமைகள் பலவுஞ் செய்தலும்
உள்ளன காத்தலு முறுவன பெறுதற்குத்
தக்கவ ராய்த்தமைத் தாஞ்செய்து கொளலும்
இருவரு மிறந்தபின் இதயத் தவரை
நாளுங் கொண்டு நலம்பா ராட்டித்
தங்கள் கடமை தாஞ்செய் திடலும்
மக்கட் காக வகுத்திடு கடனே. (3)

## ஆசிரியர் கடமை.

நல்வழி பயிற்றலும் ஞானங் கைய்க
லாகா திருக்க ஆமொழி தொடுத்தலும்
கலைகளின் ஞானக் கண்பெறு வித்தலும்
அவரைப் பற்றி யவருடன் கற்பார்
அவர்தந் தோழர் ஆகிய விவர்க்குத்
தந்நல் எண்ணந் தாம்வெளி யிடலும்
அபாயத் திருந்தங் கவர்களைக் காத்தலும்
ஆசா ரியருக் காங்கட னாமே. (4)

## சீடர் கடமை.

தேசிகர் முன்னிலை சென்று நிற்றலும்
அவர்பணி விடைகள் அன்பொடு புரிதலும்
வணக்க முறுதலும் வேண்டல் வழங்கலும்
உபதே சத்தைக் கடைப்பிடித் தொழுகலும்
சீடர்க் கான செவ்விய கடனே. (5)

## பதியாவான் கடமை.

கொண்டாள் தன்னைக் கௌரவத் தோடும்
அன்பி னோடு மனுதினம் நடத்தலும்

அவளை யன்றி யயல்புகா திருத்தலும்
பிறரு மவளைப் பெருமைபா ராட்டிடச்
செய்தலு மேற்ற சேலையு மணிகளும்
கொடுத்துப்பா ராட்டலுங் கொண்கர்தங் கடனே. (6)

---

## பத்தினியாவாள் கடமை.

இற்பணி திறனுடன் ஒழுங்குட னியற்றலும்
நட்டவர் கிளைக்கும் நல்விருந் தளித்தலும்
கற்புடை யவளாக் கவினலும் வீட்டுச்
செலவை மிதமாய்ச் செய்தலுஞ் செய்யும்
வேலையை மறவாத் திறமையின் விளங்கலும்
பத்தினிக் குரியதாய்ப் பகர்தரு கடனே. (7)

---

## மித்திரராவார் கடமை.

குறிப்பில் வேண்டும் நன்கொடை கொடுத்தலும்
கவுரவ மீக்கொளக் கழறலு மவர்கள்
நலமெலாம் பல்கி நயம்பெறச் செய்தலும்
தமக்கிணை யாகத் தாம் நடத்திடலும்
தம்பொரு ளவருடன் தாம்பகிர்ந் திடுதலும்
சோம்பினு மன்பரைச் சூழ்ந்தனர் போற்றலும்
அவர்பொருள் காத்தலு மபாயத் தளித்தலும்
கவலுறும் போழ்து கைவி டாமையும்
அவரது குடும்பத் தன்பு காட்டலும்
நட்பினர் தம்முன் நடந்திடு கடமையே. (8)

---

## யஜமானன் கடமை.

அவரவர் சத்திக் காந்தொழில் விதித்தலும்
தக்க கூலியு முணவையுந் தருதலும்
அணங்குறின் மருந்து முணவு மளித்தலும்

நல்லுண வுளவேல் நல்கியுண் பித்தலும்
விடுமுறை நாட்களில் விடுத்தலு மேலாம்
யசமா னனுக்கிங் கேற்றிடு கடமையே. (9)

---

வேலைக்காரர் கடமை.

காலம் பெறத்தா மெழுதலுங் காப்போன்
துஞ்சிய பின்னரே துஞ்சுவா னேகலும்
கொடுத்ததைப் பெற்றுத் திருத்தி கோடலும்
ஊக்கங் குன்று துறுபணி குயிறலும்
யாவ ரிடத்தும் யசமா னுவான்
தன்னையே மேம்படத் தாம்வச னித்தலும்
வேலைக் காரர் மேவிடு கடனே. (10)

---

உபாஸகர் கடமை.

திரிகா ணத்தால் அன்பு செய்தலும்
கண்டுழி வருகெனக் கனிந்தழைத் தேத்தலும்
ஆங்கவர் அவாவிய தளித்தல் செய்தலும்
உபாசக ராவார்க் குரியதாங் கடனே. (11)

---

பிக்ஷுக்கள் கடமை.

மறங்கடி ந்தறமே செய்ப வழுத்தலும்
அளவி லன்பை யகனுறச் செலுத்தலும்
மதநூற் பொருள்களை வரன்முறை விரித்தலும்
ஐயந் துடைத்தலு மழியா தான
வீட்டு நெறியில் மேவக் காட்டலும்
பிக்ஷு வாவார் பெருங்கட னுமே. (12)

வேறு.

நண்பினுற் பிரசங் கங்கள் நாடோறுந் தாமேயன்றிப்
பண்பினுற் சீடராலுங் கொள்கையைப் பரவச் செய்தார்
எண்பதா ண்டிருந்தி யார்க்கு மியைவன கூறி யீண்டு
வெண்புகழ் பரப்பி வீடா நிருவாண மேயி னுரால். (13)

**புத்தபுராணம்**
முற்றிற்று.

# புத்தபுராணம்.

## அரும்பதவுரை.

பாட்டு எண்.

### பாயிரம்.

1. பூமலி—பூமியில் மிகுந்திருக்கிற. பொலிவு-புஷ்டி. குணம்-தன்மை. வணம்—நிறம். வாழ்வு—உயிர்வாழ்கை. நலிவு—அழிவு. ஏமம்-பாதுகாப்பு. சக்தி-இயற்கைசக்தி, கடவுளுமாம்.

2. புத்தரின்மதம்-புத்தசமயம். புறத்துறுசமயம்—புறச் சமயம். பூததயை—ஜீவ காருண்ணியம். செய்யுள்-பாட்டு.

3. குதலை-மதலைமொழி. நொய்தின் நூற்ற—இலேசான மொழிகளைக்கொண்டியற்றிய. சீலம்-நல்லொழுக்கம்.

4. பாலி—ஓர்பாஷை. பலபடுமொழி-அநேகபாஷைகள். ஆலி-அமுதம், மழையுமாம். போவியான்-தேர்ந்தவித்வானைப்போன்றநான். கால்—சிறு வாய்க்கால். கழுநீர்—அசுத்தமான தண்ணீர். கடிவதோ?-ஏற்றுக்கொள்ளாமல் தள்ளுவதில்லை.

பாட்டு எண்.

5. உடலழித்துத் தின்னார்—பிராணிகளை வதைத்து மாமிசத்தைப் புசியார். பூதி-செல்வம். இன்மை-தரித்திரம். போதியின் வேந்தனார்-புத்தர்.

### 1-வது திருஅவதாரப்படலம்.

1. உபநதி-கிளைநதி. அலகிலா-அளவில்லாத. நயத்தல்-கொடுத்தல். ரோகிணி-கங்கையினின்று பிரிந்து செல்லும் ஓர் நதி. பாகங்கர்-பக்கம். கபிலை-கபிலவாஸ்து என்ற பட்டணம்.

2. தோன்றல்-அரசன். வல்லி வல்லிக்கொடி. மல்இயல்-செழிப்புள்ள. நல்லியல்—நல் ஒழுங்கு. எவணும்—எல்லா இடத்திலும். நால் நிலம்-பூமி.

3. கிள்ளை-கிளி. இல்லக்கிழத்தி-மனைவி. கொள்ளை-பெருக்கம். சள்ளை-தொந்தரவு. சந்ததி-பிள்ளை.

4. வண்மை—ஈகை. நல்நயக்குழவி-இனிய குழந்தை. இருத

பாட்டு எண்.

யம்-மனம். நல்வினை—புண்ணிய கர்மம்.

5. குழல்-புல்லாங்குழல். விதலைசேர் நடை—தளர் நடை.

6. இகம்—பூலோக இன்பம். பரம்-மோக்ஷம். தோற்றம்-பிராபல்லியம். ஏற்றம்-மேன்மை. ஊக்கம்-மன எழுச்சி. தடம்-அடையாளம்.

7. பண்டைத்தீவினை—பூர்வகர்ம வினை. பாற்றதோ—தக்கதோ.

8. ஈடழிந்து—வலிமைகெட்டு. அறுகோணத்து சுடர் உருவான மீனம்—ஆறுகோணவடிவான பிரகாசம் பொருந்திய (ஒரு) நக்ஷத்திரம். புக்கதாக—புகுந்ததாக.

9. காந்தன்—கணவன். மண்டலத்தரசு—சுத்தோதனன். வல்ல-தேர்ந்த. பயன்—பலன். கணித நூல்மேல்கொண்டவன்—சோதிடன்.

10. மான் நிகர்விழி—மானினுடையகண் பெண்கள்கண்ணுக்கு உபமானம். அருளின்செவ்வி—கிருபையின் அழகு. சூனு-குழந்தை. நால்நிலம் புரப்பார்—அரசர். நாயகம்—(இங்கு) சக்ரவர்த்தி. உய்ய-பிழைக்க.

11. மாது அரும் எனப்பிரிக்க. நீர்மை—நற்குணம். உருக்கொண்டன்ன—வடிவெடுத்ததுபோல்.

12. ஈன்ற—பெற்ற. இருநிலத்து இறைவன்—சுத்தோதனன். ஆன்ற—விசாலமான. ஆழி—சமுத்திரம். சான்றவர்—பெரியோர். கான்ற—வீசிக்கொண்டிருக்கிற. காணிக்கை—வெகுமானம்.

13. திரு ஆர்த்தமார்பன் ஆன பூபதி—இலக்குமியைமார்பில் வைத்திருப்பவனான(திருமாலை ஒத்த) சுத்தோதனன். சீர் அனைத்தும் உரு ஆர்த்த அனையமேனி—உத்தமஇலக்ஷணமெல்லாம்வடிவெடுத்தாற்போன்ற சரீரம். பெருஆர்த்தி—மிகுந்த ஆசை. தகைமை—தகுதி.

14. காணிய—காண. உய்வண்ணம்—பிறவித்துன்பத்தினின்று நீங்கும்படி. மைவண்ணக்கூந்தல்-மாயாதேவி. அசிதர்-ஓர் முனிவர்.

15. இளவல்—சிறுவன். (சித்தார்த்தன்.) மன்றல்—வாசனை. இணை—இரண்டு.

பாட்டு எண்

16. கான்முளை—பிள்ளை. தரணி—பூமி.

17. விழைவுறு—விரும்பத்தக்க. இழை—ஆபரணம்.

18. நிற்கு—உனக்கு. அணுவும்—அற்பமும்.

19. துறக்கம்—வானுலகம். கோமுதல்—சுத்தோதனன். செவிலித்தாய்-வளர்த்ததாய். காமுறு-விரும்பத்தக்க. போதனுமுறை-கல்வி கற்பிக்கும் ஒழுங்கு.

20. நயந்தனன்—(மதித்து) ஏற்படுத்தினன். அங்கம்-வேதாங்கம்—அவை ஆறுவகையாம்.

21. நீழலில்—நிழலைப்போல்.

22. மா—குதிரை. சிலை—வில். எழு—வளைதடி. படைகள்—ஆயுதங்கள். பயிறல்—பழகல். ஊன் (இங்கு) உடம்பு.

23. கருப்பு—கரும்பு. கருப்பிணில்-கர்ப்பத்தில். பொருப்பு-மலை. புலமை—கல்வி.

24. அமுததாரை-இடையறாது வீழ்ந்துகொண்டிருக்கும் அமிர்த ஒழுக்கு. அளி—கருணை. நோக்கு—கண். கேணி—ஊற்று. அபயவார்த்தை—அச்சமறுக்குஞ் சொல். போக்கு—சுபாவம் (குணம்). தூக்கு—ஆராய்தல். துய்க்குமாறு-அனுபவிக்கும்படி. உசாவல்-யோசனை கேட்டால்.

பாட்டு எண்

25. மனுமுறை—தர்மசாஸ்திரத்தின் ஒழுங்கு. சரிக்கும்—சஞ்சரிக்கும். செருக்கும் பாவம்-கொல்லுதலால்வரும்பாவம். என்றென்றும்—பிறபுக்கள்தோறும்.

26. பாங்குளார்—தோழர். பரிகுதிரை. இளைத்தல்முன்னி-தவித்துப்போதலைநினைத்து. அணித்து—(கைப்பற்றுங்காலம்) அடுத்துவிட்டது. முனைகெட—முதன்மையாதனில்லாதபடி.

27. இறைமகன்—சித்தார்த்தர். அத்தான்—அத்தைமகன். வெண்ணீர்—வெண்ணிறம். திவ்வியம்-மேன்மை. இமயம்—ஓர்மலை, ககனஆறு—ஆகாயவழி.

28. கணை—அம்பு. அஞ்சம்—அன்னம். அண்ட அரும்—அடைதற்கரிய. அங்கை-உள்ளங்கை.

29. பாவி—(இங்கு) அத்தான். தூவி—இறகு. ஆவின்—பசுவினு

பாட்டு எண்

டைய. ஆவி-உயிர், ஐயன்-சித்தார்த்தர்.

30. நோவு-துன்பம். பால்அனம்—வெண்ணிறமான அன்ன பக்ஷி. புடைத்து வீழ்த்தி நீக்கிட நினைத்தான்—அம்பெய்துவீழ்த்தி (அன்னத்தைஉயிர்) போக்கநினைத்தவனான அத்தான். நேர்தி—கொடு.

31. கிளத்தலும்-சொன்னவுடன். கோறலிழைத்தவர்—கொலைசெய்தவர். முறை—நீதி.

32. தவளத்தூவி-வெண்ணிற இறகு. பாசனம்—சுற்றம். கானம்-காடு. இனம்—கூட்டம்.

---

2-வது நாட்டுத்துன்பறி படலம்.

1. தலைநிலை—உலகம். குலம்-வம்சம். கலை—சாஸ்திரம். உலகியலறிவு—உலகவழக்கறிதல்.

2. புரத்தல்—ஆளுதல். கன்றினர்—பகைவர். அலகத்தின்—கன்னத்தில். கானில்—காட்டில்.

3. உழவர்—கிருஷிகர். போதுதும்-போவோம். வேதன்-பிரமன். விவிதம்-நாநாவிதம். ஆதரவாவார்—பயிரிடும்தொழிலாளர். பழனம்-வயல்.

4. தாற்றுக்கோல்—முட்கோல். கொழுவிய—கொழுத்த. செய்யநீர்-இரத்தம். நிணம்-புண். கார்-கரிய நிறம்.

5. கதிரவன்—சூரியன். விதிர் விதிர்ப்பு—நடுக்கம், பிதிர்தரு—சிதைகின்ற. அயர்தல்—ஆயசப்படுதல்.

6. கடைசியர்—மள்ளியர்.

7. கட்டுவார்—பிடுங்குபவர். தயா—கிருபை.

8. சும்மை—சுமை. கோரமாம்பாரம்—பெரும்பாரம். நுகம்—நோக்கால். புடைப்பு-அடித்தல். அண்டி-பவனவாயிறுதியிலிருக்கும் உறுப்பு. அனகன்—சித்தார்த்தர்.

9. நிலையம்—இருப்பிடம். பாலை-நீரும் நிழலுமில்லாதகாடு. கூபம்-கிணறு. துலை—நீர் இறைக்கும் துலை (துலா). தாபம்—தவிப்பு.

10. ஆப்பசைக்குரங்கு—மரம் பிளக்கக்கடாவியிருக்கும் முளையை அசைத்தவானரம். மூப்பினர்—வயது முதிர்ந்தவர். தீயவர்—

பாட்டு எண்,

(கொடுமையாய் வேலைவாங்கும்) இரக்க மில்லாதவர். தூயன்—சித்தார்த்தர்.

11. கோடரி—கோடாலி. அளத்தலை—உப்பளம். கலன்—தோணி. உகைத்து—செலுத்தி. அறிவன்-சித்தார்த்தர்.

12. அத்தலை-அவ்விடம். பாங்து—பொங்கி. பைத்தலை-படமாகியதலை. தேரை—தவளை. வயிரி—ஓர்ஜாதிப்பறவை. துய்த்தல்—புசித்தல்.

13. பச்சைப் புண்—புதுப்புண். சிச்சிலி—மீன்கொத்திப்புள். நச்சரா—விஷசர்ப்பம். தீயன்—வேடன்.

14. எங்கெழில்குமரன்—மிகுந்த அழகுள்ள சித்தார்த்தர். செவ்வகை—நீதிமார்க்கம். உப்பர்—வானம்.

15. அடுக்குது—குவிகின்றது. மலைக்குது—தடுமாறச்செய்கிறது. சாடுது—கொல்லுகிறது. தரணி—பூமி.

16. மன்பதை—மக்கட்பரப்பு. கூர்தல்—மிகுதல்.

பாட்டு எண்,

17. முன்னம்—மனம். யோகு—நிஷ்டை. இறைவனார்—சுத்தோதனன். தூவி—ஸ்தூபி.

---

## 3-வது திருமணப்படலம்.

1. பெருமகன்—அரசன். செவ்வி—குணம். தியக்கம்—சஞ்சலம். மதிவலார்—மந்திரிகள். மன்று—சபை.

2, ஏலம்கொள்குழலி—மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடையவள். இளவல்—சித்தார்த்தர். காலங்கள்—இறப்பு, நிகழ்வு, எதிர்வு. துறவி—சன்னியாசி.

3. துறை—நெறி. துன்னுவன்-நெருங்குவன். இல்லங் காக்க-இல்லறவாழ்க்கையைக்கைக்கொள்ள.

4. பருவம்—இரது (வசந்தமுதலியன.)

5. குறுந்துளி—சிறு தூற்றல். வாடை—வடகாற்று. தடம்—குளம்

6. ஏவல்கள்—ஏவினவேலைகள், சாந்தம்—சந்தனம். பாவலர்கள்—வித்வான்கள்.

7. பண்—சங்கீதம். பூமேல்வாழ்வாள்-இலக்குமி. உதித்தல்-அவதரித்தல்.

பாட்டு எண்

8. யுவதி-பருவப்பெண். மணப்ப—கல்லியாணஞ்செய்ய. மோனம்-மௌனம். முற்பெறுகுணம்-ஸத்வகுணம். ஆன்றஞானம்-மேலான துறவுக்கிடமான அறிவு.

9. இன்ரும்—இல்லாமற்போகும். தே-கடவுள். மின்னுற்சிறைவைப்பர்-பெண்ணையே நினைத்திருப்பார்கள். படபடப்பு-துடிதுடித்தல்.

10. அகப்-எண்ணம். செம்மகமணி—பெரிய மாணிக்கங்கள். வெள்ளைச் செழுமணிக்குலம்—சந்திரகாந்தம், வைர முதலியன. மும்மகமேரு-மூன்றுமஹாமேருமலை.

11. வன்னம்-சித்திரம். துணை-மனைவி, சிநேகிதருமாம்.

12. முல்லைப்போதின்வடிவழிவழிந்து-முல்லைமலரினுள்ள தேனிருக்குமிடமாகவழியப்பெற்று. மரை-தாமரை. கடி-வீர்சனை. அளிகள்—வண்டுகள்.

13. நாள்மலர்—அன்று பூத்த புஷ்பம். வாள்-பிரகாசம். இந்திரனிருக்கை-தேவேந்திரன் கொலுமண்டபம்.

பாட்டு எண்

14. தராபதி—அரசன், (சுத்தோதனன்.) தனயன்—குமரன். பராவிய ஆடல்-விஸ்தாரமானவிளையாட்டு. பாங்கர்-தோழர். சராசரத்து அளிபூத்தான்—அசைவதும் அசையாததுமான பொருள்கள் மேலெல்லாம் கிருபையுடையவன். (சித்தார்த்தர்.) தாதை-பிதா.

15. மன்னலர்—மிகுதியான மலர்களையுடைய. முது தொழிலாளர்-முன்புதான்பார்த்தகிருஷிகர் முதலானவேலைக்காரர். பாடு-கஷ்டம். தம்பித்து-தூண்போல் அசைவற்று.

16. தேடுவான்-விசாரணைசெய்வான்.

17. பாங்கினர்-பக்கத்திலுள்ளவர். எஞ்ஞான்றும்-எப்பொழுதும். உவாக்கடல்-நிறைந்தசமுத்திரம். சோரும்-தளர்வடைவான்.

18. அருள் மனத்தவன்-கிருபையுள்ளவன். (சித்தார்த்தர்) அற்றைநாள்—அந்தநாள். திருமகள்-இலக்குமி.

19. ஐயன்-சித்தார்த்தர். இந்திரை-இலக்குமி. தொகுத்தல்-குவித்தல்,

பாட்டு எண்

20. வேண்டினர்—சுற்றத்தார். ஆதுலர்-தரித்திரர். எரிகரியாக—அக்னி சாக்ஷியாக.

21. பொன்மகள்—இலக்குமி. காளை-யௌவன வயதுள்ள சித்தார்த்தர். இரதம்-தேர். தென்மலை—பொதியமலை. மன்மதவிலாசம்-கட்டிடத்தின் பெயர்.

22. பாட்டியல்-இசை இலக்கணம். நரம்பு-தோல். துளை கருவிகள்-முறையே வீணை மிருதங்கம் புல்லாங்குழல். அலத்தகம்-செம்பஞ்சிக்குழம்பு. மின்னார்-பெண்கள். நயனங்கள்-கண்கள்.

23. காத்திரம்-உடப்பு. கலம்-ஆபரணம். சோத்திரம்-காது. நேத்திரம்-கண். நாத்திறம்-நாக்கின் சக்தி அறுசுவை—கைப்பு புளிப்பு -முதலியன. நராதிபன்—சுத்தோதனன்.

24. சிலை-வில். திருநுதல்-அழகியநெற்றி. வலை-(இங்கு)மோகம்.

25. கிருபன்—அரசன். (சுத்தோதனன்.) கல்விதந்த தூயர்—பரிசுத்தரான போதகாசிரியர். தொடுகடல்—தோண்டப்பட்ட சமுத்திரம். உலகங்காப்பான்சேய்-சுத்தோதனன் குமாரராகிய சித்தார்த்தர். கொண்டசெல்வி-மணந்து கொண்ட யசோதரை.

பாட்டு எண்

26. மண்டுயிர்—நெருங்கியஜீவராசி. கலாம்-கலகம். வண்டுஒன்று விழி—வண்டை யொத்தகண்ணையுடைய யசோதரை. வாஞ்சை—ஆசை.

27. ஏந்தல்மைந்தன்—சித்தார்த்தர். முயக்கம்-கலவி. வாரிதி-கடல் அத்துறை-அந்தமார்க்கம்.

28. பணி-வேலை. பிணியினர்-நோயாளர், இடும்பை—துக்ககரமான சமாசாரம். இலம்பாடு-தரித்திரம். எணி-எண்ணி.

29. நடிப்பவர்—நாட்டியமாடப்பட்டவர். தாளம் நயப்பவர்-தாளம்போடப்பட்டவர். மடிப்பவர்—மடியுள்ளவர். சோகம்—துக்கம். முடிப்பல்--மரணதண்டனை செய்வேன்.

30. விருக்கம்-மரம். அருவருக்கும் பதார்த்தம்—அரோசிக்கப்படும் பொருள்கள். தூர்ப்பவர்—சுத்தஞ் செய்பவர்.

31. ஆக்கினை—கட்டளை.

பாட்டு எண்

32. கற்று இன்பங் கண்ட—படித்து அதன்பயனை அனுபவித்த. காசினி-பூமி. துய்க்க-அனுபவிக்க. சிற்றின்பம்—அற்பசுகம். (இல்லறவாழ்க்கை.) செம்மல்-சித்தார்த்தர். மாழ்கினன்-மயங்கினுன்.

———

4-வது சித்தார்த்தர் கனவுகாண் படலம்.

1. மதனன்—மன்மதன். ரதி—மன்மதன் மனைவி. வள்ளல்—கொடையாளி. (சித்தார்த்தர்.) வனிதை-யசோதரை. இதன்-இன்பம். உதரம்—வயிறு. திங்கள்-மாதம். சுதன்-ஆண்மகவு.

2. சேலகல் விழியார்-சேல்மீன் போல் அகன்று நீண்ட கண்களையுடைய பெண்கள். சால்-மிகவும். தானை—புடைவை. விவிதம்—பலவிதம்.

3. கார் அனை-மேகத்தை யொத்த. தெளி-(நூல்களைக்கற்று) தெளிந்த. வல்லுநர்-வல்லவர். பேரன்—மகனுடைய மகன்.

4. ஒப்பனை-ஒப்பு.

5. நங்கை-யசோதரை. ஐயன்—சித்தார்த்தர். தடவுக-வாசிப்பாயாக.

பாட்டு எண்

6. பராவிய-விரிவான. துன்னின—(வந்து) நெருங்கின. முறையின்—வரிசையாக.

7. கொண்டல்-கீழ்காற்று. தென்றல்-தெற்கிருந்து வருங்காற்று. கோடை—மேற்கிருந்து வருங்காற்று. வாடை-வடக்கிருந்து வருங்காற்று. சண்டமாருதம்—பெருங்காற்று. புசல்-மழையொடு கூடிய புயற்காற்று.

9. காதல்-ஆசை. எண்மயதாகி-அற்பமாகி. இயக்கம்-அசைவு. இசை-ஓசை. (பாட்டுமாம்)

10. தொழுங்குரிசில்-வணங்கத்தக்க சிறப்புள்ள சித்தார்த்தர். அறிக்கை-அறிவிப்பு. குழுவுறு—கூட்டமான.

11. கணங்கொள்—கூட்டமாயுள்ள. பேதமை-அறியாமை. அண்டிய—அடுத்துள்ள.

12. சரித்து—அசைந்து. சதாகதி-காற்று. இல்லம்பிரித்துக்கொண்டு-இல்லறவாழ்க்கையை விட்டுவிட்டு. கடுக-விரைவாக.

13. தினம்-நாள். சேய் அன்னுன்-சுப்பிரமணியக்கடவுளை ஒத்த. (சித்தார்த்தர்.) கனங்குழை—

பாட்டு எண்,

(ஒரு) பெண். ஜனங்கள் கடற்கரையில் நின்று, சூரியன் அஸ்தமித்தலைப்பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு பட்டணத்தைப் பற்றியும், அங்கிருந்து ஒரு மாயக் குதிரை உண்டானதைப் பற்றியும் ஓர் கதை சொன்னாள்.

---

5-வது நகரத்துன்பறி படலம்.

1. முறையுற-வரிசையாக. காதை-கதை. தேயம்-தேசம். சிறை-காவலுள்ள வீடு. இறைவன்—சுத்தோதனன்.

2. நஞ்சுதன்-நம்முடையபிள்ளை. பஞ்சைகள்—அற்பர்கள். அங்கம் எஞ்சினர்—உறுப்புக் குறையுற்றவர்கள். துஞ்சினர்-சாவுந்தருவாயை அடைந்தவர்.(செத்தவர்) கஞ்சுகம்-கவசம். (அங்கி) ஆஞ்ஞை—ஆக்கினை.

3. மேகலையார்—பெண்கள். சோபனம்-மங்கலப்பாட்டு. பணியினர்-வேலைக்காரர்.

4. அழுந்திய-வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிற. அணி-வரிசை. விழுந்தவன்-அத்தமித்தசூரியன். கேழ்-ஒளி. குணதிசை—கிழக்கு. சன்னன்-சாரதியின்பெயர். (சந்தகன் என்றுஞ் சொல்வார்கள்)

5. நார்-அன்பு.

6. நாதன்-அரசன்.

7. துலக்கிய—விளக்கப்பட்ட. பசபசபபு-விரைவுக்குறிப்பு.வலவ

பாட்டு எண்,

-தேர்ப்பாகனே, உய்க்க—செலுத்தக்கடவை.

8. அளி-கிருபை. புளகம்-ரோமாஞ்சம். சுரும்பு இமிர் - வண்டுகள் ஆரவாரம்செய்கின்ற.

9. அலர்பெறு-தாமரைப் பூவை ஒப்பாகாத. கலன்-ஆபரணம்.மறுகு-வீதி. தளி—கோவில். சதுக்கம்—நாலுதெரு கூடுமிடம்.

10. பதி-பட்டணம். கதி-பாதுகாப்பு.

11. பழுப்பு-ஏணிப்படி. மெய்யன்-சரீரமுள்ளவன். இழுப்பு--காசநோய். தழுப்பு-தழும்பு. நீவல்—தடவல்.

12. பாந்து-பொந்து. ஒல்—சப்தக்குறிப்பு.தண்டு-ஊன்றுகோல். முனிந்தார்—கோபித்தார்,

13. சென்னி-தலை. என் இவன் உற்றது-இவனுக்கு என்ன வந்திருக்கிறது. பன்னு—சொல்.

14. சித்தசன்-மன்மதன். ஏறு—விருஷபம்,

15. சுடர்-தீபம். அகத்தினும் புறத்திடத்தும் நண்ணும்இந்தியங்கள்-ஞானேந்திரிய கர்மேந்திரியங்கள். நலிதல்-கெடுதல்.

16 குலமகன்—சித்தார்த்தர். அலமரும்—துன்பத்தைக் கொடுக்கும். பருவம்-வயது.

17. விருத்தம்-முதுமை. யாக்கை-உடல்.

18. கூர்த்தது—அதிகரித்தது.

பாட்டு எண்,
பொழுது—சூரியன்.

19. சேண்-ஆகாயம். சூதன்—சாரதி. அங்காடி-கடைவீதி. காணி-ஓர் சிறு எண் (ஒன்றில் எண்பதுகொண்டது) கோடி—நூறுலக்ஷம்.

20. நிணமலிகை-குஷ்டரோகமிருந்தகை, இறைவாகி—சிறிதுலாபம். மறைகூறி-உள்ளதைஒளித்துச்சொல்லி. வளப்-செல்வம்.

21. வாசி-வட்டிக்குமேலெடுக்கும் லாபம். பிணக்கு-மனவருத்தம். இணக்கம்-சமாதானம். மறுப்பார்-இல்லையென்றுசொல்பவர்.

22 நொண்டையிலே-நொண்டிநடக்கும்போதே. ஆனேறு-காளை

23. பறை-ஓர்வாத்தியம். வாடி—சோர்ந்து. இக்கைநேர்மொழியார்-கரும்பையொத்த சொல்லையுடையபெண்கள்

24. மருக்கோலம் - வாசனைப்பொடிகளால் போடும் கோலம். தெருக்கோலம்-ஊர்கோலம். உருக்கோலம்-உடம்பின் அழகு. அஞர்-துன்பம். பெருக்கோலம்-பெருஞ்சத்தம்.

25. மூவாத-அழியாத. முடுக்கர்-முடுக்கு கடி-காவல். மதில்—கோட்டை. ஓவாது-இடையறாமல்

26. அற-மிகவும். தக்கவர்-மேலோர்.

27. உள்மயங்கும் அளி—மனதில்கலந்திருக்கிறகிருபை. தகை-அன்பு.

28. விழைவு-ஆசை. உழை—பக்கம்.

29. நத்தி—விரும்பி.

30. இன்னல்-வருத்தம்

31. புதர்-முட்செடிகளடர்ந்திருக்குமிடம்.

33. காட்டம்-விறகு. கூடு-உயிர்நீத்த உடல். நிலன்—பூமி.

34. வகை—பிழைக்கும் வழி, முதலுமாம். வீவார்கள்-சாவார்கள். பொடி-சாம்பல். தோன்றுதல்-பிறத்தல்.

35. தோற்றம்—பிறப்பு.

36. தூக்கினல்-ஆராய்ந்துபார்த்தால். ஆக்கினன்-கடவுள். போக்கினன் ஆயிடின்—கைவிடுவானேயானல்.

37. மருந்து-அமுதம். மாமதி—பூர்ணசந்திரன்.

## 6-வது யசோதரை கணவகாண் படலம்.

1. தலை அரும்பு—முதலிலுண்டாகும் மொட்டு அவிழ—விரிய. அளி-வண்டு. கேகயம்-மயில். வளி—காற்று.

2. மயங்கல்-திகைத்தல். கார்கொள் அலை—கரியசமுத்திரம். எண்எண்-பதினறு. கலாநிதி-பூர்ணசந்திரன்.

3. பாண்மகள்-சங்கீதம்பாடும் பெண். பூஅமளி-புஷ்பமெத்தை. நாண்மலர்க்கிழத்தி-இலக்குமி.

பாட்டு எண்,

வேள்மகன்-சித்தார்த்தர்.

4. கன்னல்—காலம். கொண்டவன்—சித்தார்த்தர்.

5. தனி—ஒப்பற்ற. தளைசெய்மின்—கட்டுங்கள். அசரீரீ—ஆகாயவாணி. ஏற்றை—இடபத்தை. பிணிக்குங் காலை—கட்டுங் காலத்தில்.

6. துகள்—தூள். தறுகணர்—வீரர்.

7. கடி—காவல். கடுகல்—விரைதல். கடைவாய்—தலைவாசல். கொடி—சீலைக்கொடி. மலர்மாரி—பூஷ்பவர்ஷம்.

8. கச்சை—புடைவை.

9. ஊதை—காற்று. ஆய—யோசித்துப்பார்க்கையில்.

10. சூழ்வினை—சூழ்ந்துகொண்டிருக்குங் கர்மம்.

---

7-வது பிரிவுறு படலம்.

1. அஞ்சற்க—பயப்படாதிருப்பாயாக. மஞ்சு—மேகம்.

2. பொருதலை—யுத்தஞ்செய்தலை. வென்றிபுனைதல் — வெற்றிமாலை சூடுதல். இருதலையுலகப-விஸ்தாரமான பூமி.

3. சூதகம்—ஓர் நோய். வபா—பிரசவவேதனை.

4. அளியனேன்-எளியனாகிய யான். அசைவு—சோர்வு.

5. மடியன்—சோம்பேறி. வையகச்சுமையன்—பூமிக்குப் பாரமானவன். பேடி-அலி. உசாவுதல்—விசாரித்தல்.

6. விழல்நிலம்—பாழான பூமி. ஆற்றல்—வல்லமை.

7. கரு—கர்ப்பம்.

8. காதல்—பிரியம்.

9. இன்னே—இப்பொழுதே. சூழ்ந்து—வலமாகவந்து. நேர்தல்—உடன்படல்.

10. எரி—அக்கினி. கிரி—மலை. விரி—வியாபிப்பு.

11. சராசனம்—வில். அராவிய-அழுத்தல் செய்கிற. பராவிய—(யாவரும்) துதித்தற்கான.

12. மாண்பு—பெருமை. ஐயம்-பிச்சை. சேயிழை—யசோதரை. நையவோ—வருந்தவா?.

13. விதமலி—பலவிதமான. இதழ்—பூவிதழ். எந்தை—(எமது) தந்தை.

14. கணம்—நிமிஷம். தாழ்த்தல்—தாமதித்தல். கண்டகம்-சித்தார்த்தர் குதிரையின் பேர். துரகதம்—குதிரை. குணநிதி ஆயினான்—நற்குணங்களுக்கு.பொக்கிஷமான சித்தார்த்தர். மணப்—மங்கலம். இறுதி—எல்லை முடிவு.

15. குணக்கு—கிழக்கு. புவி இருள்—உலகத்திலுள்ள அறியாமைக்குணம். வள்ளல்—சித்தார்த்தர். இவுளி—குதிரை.

பாட்டு எண்,

16. மிக்கதோர்நெறி-மேலான இன்பமார்க்கம். குவலயம்—உலகம்.

8-வது உண்மைஉசாவிய படலம்.

1. நம்பி—புத்தர். பிம்பிசாரன்-ஓர் அரசன். சிரத்தை-விசுவாசம். உரம்—மனம்.

2. கண்பெற—நேராக. சாமாதி-யோகம். பண்பு—தன்மை. புள்—பறவை. நண்பு—சிநேகம். நளிர்—குளிர்.

3. சிகரி—மலை. சிலை—பாறை. எல்சிரசு அத்துநேரே எழுதல் கண்டு—சூரியன் உச்சியில் வருதலைத்தெரிந்து. (அத்துசாரியை)

4. கைக்கலன்— பிக்ஷாபாத்திரம். படர்வார்—செல்வார். மைக்கிரி—யானை. மெய்—சரீரம். அருந்தவம்—கொடுமையானதவசு. உறுவர்—முனிவர்.

5. சரண்-பாதம். முகிழ்த்தல்-குவித்தல். சென்னி-சிரசு. சிரநெறி-தலைவழி. வரம்-பிரசாதம்.

6. நோற்பு-உபவாசம், தசை—சதை. உள்ளீடு-உள்ளிடத்துவஸ்து. ஏற்பவர்-தாங்கிக்காப்பாற்றப்பட்டவர்.

7 கலை—சாஸ்திரம். சிலை—உருவம். சித்திரம்-ஆச்சரியம். தலைபுதர் ஆயினர்-தலைமயிர் காடுபோல் அடர்ந்திருப்பவர்.

8. துயரின் பூண்டு-கஷ்டத்தை விளைவிக்கும் பூடு.

பாட்டு எண்,

9 மலம்—பாவம்.

10. எல்லை—சூரியன். நனவு—ஜாக்கிரம். பாடு—துன்பம்.

11. மாற்றம்—சொல். கோதமக்குமரர்—புத்தர். துறக்கம்—சுவர்க்கம்.

12. அவாவுதல்—ஆசைப்படுதல். இடுக்கண்—துன்பம்.

13. மல்—புஷ்டி.

14. நுவன்றது—சொன்னது.

15. நவமணித்தளிர்-புதிய இரத்தினம் போன்ற தளிர். அவம்—வீண். அஞர்—துன்பம்.

16. பன்னிறம்—பலவிதவர்ணம். பாண்—பாட்டு.

17. தொல்நகர்நெறி—பழமையான (பிம்பிசாரனுடைய) பட்டணத்துக்குப்போகும்வழி. முல்லை-காடுசார்ந்தநிலம். ஒல்லை-விரைவு.

18. இனம்—கூட்டம். நடுவண்-(குட்டிக்கும் ஆட்டுமந்தைக்கும்) நடுவிடம். சேயர்—புத்தர்.

19. பணித்தல்—சொல்லல்.

20. எச்சம்—யாகம். இச்சணம்—இக்கணம். மேய்ப்பவர்—இடையா.

21. உருக்கமான—பிரியமான. கூர—மிக.

22. மறுகினள்—மனக்குழப்பமடைந்தவளாய். ஈயப்பெறுபவர்-கொடுப்பவர்.

23. பொள்ளென—விரைவாக. வீய்ந்தவர்—இறந்தவர். தள்ளை—

பாட்டு எண்,
தாய். பித்தம்-பைத்தியம்.
24. கோதமர்-புத்தர்.
25. ஆறு-வழி.

---

9-வது பூததயை விரித்த படலம்.

1. கனங்குழை-பெண்(இங்குப் பிள்ளையைச்சாவக்கொடுத்தவள்) வாமர்-புத்தர். மறி-ஆட்டின்குட்டி. புமான்கள்-புருஷர்கள்.

2. அகிலம்-பூமி. பூவரும்ஒருவன்-பிரமன். மூவர்-பிர்மவிஷ்ணு ருத்திரர்.

3. என்புடன்எழு-இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல். யாத்த—கட்டின. பொறை-பாரம். அருணம்-ஆடு.

4. பூமகள்-பூமாதேவி. காமன்-மன்மதன். சாம்பல்-வாடல்.

5. கேணி-ஊற்று. கற்பம்-கற்பக விருக்ஷம்.

6. சித்தன்—சித்திப்பெற்றவன். முக்தன்-ஜீவன்முக்தன். மத்தன்—மதம் பிடித்தவன். வருத்தல்—சொல்லுதல்.

7. பணி-வேலைப்பாடு. குண்டக்கனல்-ஓமாக்கினி. கோறல்-கொல்லுதல்.

8. குசத்தலை — தர்ப்பாசனம். அமுது-அவிசு. முத்தீ-கார்கபத்தியம் ஆகவநீயம்தெக்ஷிணாக்கினி. முசித்தல்-குறைதல். அசம்-ஆடு. அருளாவேசம்—கிருபையாலாகிய சன்னதம்.

பாட்டு எண்,
9. மயக்கற-அறியாமை நீங்க. பயப்பு—கிருபை. வாய்வாளாமை-வாய்பேசாதிருத்தல்.

10. விப்பிரர்-பிராமணர்.

11. அயல்-அயலார். படுத்திடல்—வதைசெய்தல்.

12. நராதிபர்— அரசர். (பிம்பிசாரன்) வெல்லம்-சர்க்கரை.

13. அரக்கன்-இராக்கதன்.

14. வெம்தறுகண்—கொடிய அஞ்சாமைக்குணம். செந்து-பிராணி

15. பூ-பூமி. பொன்றுவித்தல்-கொல்வித்தல்.

16. கண்ணோட்டம்—இரக்கம். ஆயின்—ஆராய்ந்தால். விண்ணுட்டங் காண்பாரோ?—சுவர்க்கத்தைக்காணவாவதுசெய்வாரோ?

17. கருவிடுத்த-கர்ப்பத்திலிருந்துவந்த. வெருவ—அஞ்ச.

18. தாழ்ந்தவர்-கல்விசெல்வங்களில் குறைந்தவர். வாழ்ந்தவர்—மேற்படி செல்வங்களோடுவாழ்பவர். வீழ்ந்தவர்-விருப்பமுள்ளவர்

19. பொன்றுத-கெடாத. நேர்கெட-இயற்கைக்குவிரோதமாக.

20. தாம்பு-கயிறு. சாம்பருவம்-மாணகாலம். வீம்பு-செருக்கு.

21. நுகர்தல்-புசித்தல்.

22. மகத்தால்—யாகஞ்செய்வதால். பாலித்தல்-காத்தல்.

23. புல்லாத-பழகாத. புள்-பறவை. ஒல்லாதோ-வந்துகூடாதோ.

24. துறக்கம்-சுவர்க்கம். உறக்.

பாட்டு எண்,

கநிலே-மரணம். (உயிர்சவம்)

25. பொற்றூனம்—சுவர்ணதானம். இல்தானம்-வீடுதானஞ்செய்தல். மாதானகுலம்—மகத்தானதானப்பயன்கள்.

27. தன்னேர்ந்த—தனக்குண்டான. செந்நீர்-இரத்தம். நல்நீர்மை-நல்லகுணம்.

28. அளி—கிருபை. புறந்தருமின்-காப்பாற்றுங்கள்.

29. தாரை-இடையறுவீழ்ச்சி. வள்ளல்-புத்தர்.

30. கூடுஅடங்கும்உயிர்—உடலொடுகூடியஜீவன். பீடு-பெருமை

31, மகச்சாலே-யாகசாலே. ஏது-காரணம். தப்புரியர்-குற்றமுள்ளவர். பறை—முரசு.

32. மருந்து—அமிர்தம்.

---

10-வது புத்தரானபடலம்.

1. கயை-கங்காதீரத்திலுள்ள ஓர் ஸ்தலம்.

2. வேகும் நெறி-கஷ்டமான வாழ்க்கைநாள். வீயாதுஉய்வான்-வருந்தாமற் பிழைக்க. புகல் இன்பாகும்நெறி—வேதசாஸ்திரங்கள் சொல்லுகின்ற இனிமையானமார்க்கம். படரும்—நடக்கும்.

3. மிகநுணுகி-மிகவும்நுட்பமாக ஆராய்ந்து. பருதியனேயான்-புத்தர். நிருதிக்குரிய திசை—தென்மேல்திசை,

4. எய்தாத்துயர்—அடையமுடியாத்துன்பம். மை—மேகம்

5. நெறிகாண்பு இளேயாதார்—மார்க்கங்கண்டு பிடிப்பதில்சடையாதவர்.

6. நோக்கம்—கண். பாக்கம்—பக்கம்.

7. மடி—பால் சுரக்கு மிடம். கொள்ளா—கொண்டு.

8. கிளே—சுற்றம். பூதி—விபூதி. நூல்—பூணூல். துவிஜர்—பிராமணர்

9. பழுவம்—காடு.

10. அரிவை—பெண். நேர்ந்தபடி-வாக்கினுல்தத்தஞ்செய்தபடி. பால்அடிசில்-பால்சோறு. சிலதி-தோழி. தனயன்—மகன். எங்கி இருப்பார்—(இங்கு) புத்தர்.

11. வனசமலர்—தாமரைப்பூ கனசம்பத்து—மேலன திரவியம். மனசம்—மனம்.

12. வண்டர்—வண்டு. அண்டரமுதம்—இங்கு பால்சோறு.

13. பேராந்தெய்வம்-பெருமைபொருந்திய கடவுள்.

14. தளி—கோவில். கோலமயில்—(இங்கு) சுசாதை.

15. உசாவி-விசாரித்து. உளேவு—வருத்தம்.

16. குயில்—(இங்கு) சுசாதை. நல்கார்—நல்ல அன்பு.

17. பின்னேஉறங்கி முன்எழுதல்-கணவன்உறங்கியபின்உறங்கி அவன் எழுவதின் முன் எழுந்

பாட்டு எண்,

திருத்தல். உடன்புகுதல்-சககமன ஞ்செய்தல்.

18. தோகாய்-பெண்ணே.

19. முனி-புத்தர். பிடகர்-புத்தர். போதி-அரசமரம்.

11-வது கபிலைமீண்ட படலம்.

1. பட்டத்துக்குரியபிள்ளை-புத்தர். வட்டத்தார் உலகு-வட்டமான பூமி.

2. வீடினன் கொல்லோ-இறந்துவிட்டானே? நீடல்-செல்லல்.

3 நளிர்-குளிர்.

4 மஞ்சப்-கட்டில். வாடும் கஞ்சம்-(இங்கு) யசோதரைமுகம்.

5. கொண்கன்-கணவன். கோவில்-அரண்மனை (புள்ளிடம்) தே-கடவுள் -சேடியர்-ஏவல் செய்யும்பெண்கள். ஆ-பசு.

6. மைந்தனார், உயிரன்னார், விருந்தாவார்-(எல்லாப) புத்தர்.

7. மௌலி-கிரீடம். சரித்திரம்-வரலாறு.

8. துணைவர்-கணவர்.

10. சத்தியதேசு-உண்மையறிந்தவிளக்கம். முத்தி-நிர்வாணம். நத்திய-விருப்பிய.

11. மாரன்-மன்மதன். அமர்-போர். தரை--உலகம். சித்தர்-புத்தர்.

மனோ விகாரம்-மனச்சஞ்சலம். நடிதல்-போக்கல். தாபதர்-முனிவர்.

14. அசத்து-ஓர் அரசன் பெயர். அசத்து-உண்மையல்லாதது. காணம்-ஐம்பொறி.

15. தறை-பூமி. கறை-குற்றம். வேணு-ஓர்வனத்தின்பெயர்.

17, ஆரம்-முத்துமாலை. தூசு-வஸ்திரம். கார் அமுது-மழைத்துளி. சாதகம்-ஓர் பறவை.

18, கான்முளை-பிள்ளை. மதிவலோர்-மந்திரிகள். நும்தை-உமது தகப்பன். நொய்து-விரைவாக.

19, ஆராமம்-சோலை. அம்மை-வருபிறப்பு. இவுளி-குதிரை.

20, அபயம்-அடைக்கலம். பிடகனர்-புத்தர்.

21, உதாயு-ஓர் தூதன் பெயர்.

23, ததாகதர்-புத்தர். பாக்கு-கமுகு. கன்னல்-கரும்பு. தாமம்-மாலை. வீக்கல்-கட்டல். முன்றில்-முற்றம்.

25, மலர்த்துணர்-பூங்கொத்து. யாத்த-கட்டிய.

26, வாரணம்-யானை. வாம்பரி-தாவியோடும் குதிரை. புனிதர்-மேலோர்.

27, ஆர்த்தி-ஆசை.

28, துவராடை-காவிவஸ்திரம்.

29, கடிஞை-பிக்ஷாபாத்திரம்.

31, மன்மகன்-இராஜகுமாரன். பொன்மகள்-(இங்கு)யசோதரை.

32, துடியிடை-உடுக்கை போலும் இடையை யுடைய யசோதரை. பொடி-புழுதி. கெடி-அதி

6A
4-37



பாட்டு எண்,

பத்தியம், (கீர்த்தியுமாம்) கேவலம்-இழிவு.

34, கட்கம்-வாள். விதியிலார்-ஏழைகள்.

35, இல்லத்துஉற்றவள்-யசோதரை. ஈன்றவள்-இங்கு உபசாரவழக்கால் செவிலியைக்குறிக்கும்.

36, கோவியல்-இராஜரீகம்.

37, புரக்க-காக்கக்கடவாயாக. பயந்தவன்-தகப்பன், கார்-மேகம்

38, சந்ததி-வம்சம்.

39, நான்கு கொண்டதோர் உண்மை--துன்பம், துன்பத்தின் காரணம், துன்பத்தின் முடிவு, துன்பத்தை நீக்கும் வழி.

எட்டாய்க் கூறுமோர் நெறி—நற் கொள்கை, நல்லெண்ணம், நல்வசனம், நல்நடக்கை, நல்சுத்தம், நல்தியானம், நல் ஆனந்தம், நல்வகாந்தம்.

---

12—மஹோபந்நியாசப்படலம்.

1-பகவனுர்—புத்தர். பாலன்—புத்தர் குமாரன். பாவையாள்-யசோதரை. குன்றச்சிகரி—மலையினுச்சி.

4, இருவினை-நல் தீவினைகள். புசிப்பர்-அனுபவிப்பர்.

6, உடைமை—சம்பத்து.

10, எட்டுணை-எள்ளளவு. கட்டுரை—உறுதிச்சொல்.

12, நிர்வாணம்-மோக்ஷம் (இது புத்தர் வைத்தபேர்)

13, ஏகதேவன்—புத்தர். உரம்-மனம்.

---

பாட்டு எண்,

13-வது கடமைகள்வகுத்தபடலம்,

1, போதிவேந்தர்—புத்தர். நிகழ்பவர்—ஒழுகுகிறவர்.

2, மருவாது—தழுவாமல். தாயபாகம்—தாயதிகளின் பங்கு.

3, தளர்பருவம்—வயது மூத்தகாலம். இருவர்-தாய்தந்தையர்.

4, ஆம்மொழி—நன்மையைத்தருஞ்சொல்.

5, தேசிகன்—குரு. வேண்டல்—விரும்பியபொருள்.

6, கொண்கர்—கணவர்.

7, இல்பணி-வீட்டுவேலை. நட்டவர்—சிநேகிதர்.

8, சூழ்ந்தனர்—சுற்றிநின்றவராய். கவல்—துன்பம்.

9, அணங்கு—நோய்.

10, கோடல்—கொள்ளல். பணி-வேலை.

11, உபாஸகர்—கிரகஸ்தர். திரிகாணம்—மனம்வாக்கு காயம்.

12, பிக்ஷுக்கள்—சன்னியாசிகள். மறம்—பாவம். மதநூல்—சமயநூல். ஐயம்—சந்தேகம். வீட்டுநெறி—நிர்வாண மார்க்கம்.

13. கொள்கை--கோட்பாடு. வீடா—நீங்காத.

முற்றிற்று.